Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 20

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி   National Tamil Daily

மலர் 8   (11-5-66)   இதழ் 93

...ராபவ சித்திரை 28   ... முஹர்ரம் 19   புதன்கிழமை

மில்க் வைற்
நீல சோப்
மேல் உறைகளைச் சேகரியுங்கள்
வழமைபோல் 50 மேல்உறைகளுக்கு
ஒரு அழகான சாக்குப்பை இனமாக
கொடுக்கப்படும்.

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்ரேட், யாழ்ப்பாணம்.

## தருமபுரவாசிகள்

# 500 மனுக்கள் நிராகரிப்பு

## வாக்காளர் ஆட்சேபமனு விசாரணையில் தீர்ப்பு

### 40 பேரின் மனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

1965-ம் ஆண்டு தேர்தல் வாக்காளர் இடாப்பிலிருந்து தங்களது பெயர்கள் நீக்கப்பட்டதை ஆட்சேபித்து கிளிநொச்சித் தொகுதியைச்சேர்ந்த தருமபுர வாசிகள் சுமார் 540 பேர் தாக்கல் செய்திருந்த மனுக்களில் 500 மனுக்கள் யாழ்ப்பாணம் உதவித் தேர்தல் அதிகாரியினால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நாற்பது மனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டன.

1965-ம் ஆண்டுத் தேர்தல் வாக்காளர் இடாப்பில் தங்கள் பெயர்கள் நீக்கப்பட்டிருப்பதாகவும், தங்கள் பெயர்களை மீண்டும் சேர்த்துக்கொள்ளும்படியும் கோரி கிளிநொச்சித் தொகுதியிலுள்ள தருமபுரத்தைச் சேர்ந்த சுமார் 540 பேர் தேர்தல் அதிகாரிக்குமனு அனுப்பியிருந்தனர்.

நேற்று முன்தினம் இந்த மனுக்களை விசாரணைசெய்த யாழ்ப்பாணம் உதவித்தேர்தல் அதிகாரி திரு. பி. முருகேசு 40 மனுக்களை மட்டும் ஏற்றுக்கொண்டு மிகுதி மனுக்களை நிராகரித்தார்.

வாக்காளர் இடாப்பிலிருந்து பெயர் நீக்கப்பட்டதை ஆட்சேபித்து யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் தருமபுரவாசியான வீரச்சாமி கட்டயனின் மனுவை கடந்த வாரம் நீதிபதி திரு. என். எம். ஜே ராஜேந்திரம் நிராகரித்திருந்தார்.

வீரச்சாமி கட்டயன் உட்படச் சுமார் 7000 தருமபுர வாசிகள் தங்கள் பெயர் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டதை ஆட்சேபித்து மாவட்ட நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர்.

## நெல்லியடி பட்டினசபை கலைக்கப்படுமா?

உடுப்பிட்டி, செவ்.

நெல்லியடி பட்டினசபை, கட்டைவேலி கிராமசபை ஆகிய இரு உள்ளூராட்சிச் சபைகளையும் ஏன் கலைக்கக்கூடாது' என்பதற்கான காரணங்களைக் காட்டுமாறு கோரி மேற்படி இருசபைகளினதும் அங்கத்தவர்களுக்கு உள்ளூராட்சி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

பல அங்கத்தவர்கள் தங்களது பதில்களை அனுப்பியதாகத்தெரியவருகிறது.

### கோரிக்கை

நெல்லியடி பட்டினசபை, கட்டைவேலி கிராமசபை ஆகிய இரண்டும் 1966-ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டமும் நிறைவேற்றப்படாமல் நிர்வாகச் சீர்கேடைந்துள்ள நிலைமையை விளக்கி இவற்றைக் கலைத்து விஷேச உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் பொறுப்பில் குறைந்தது இரண்டுவருடங்களுக்காவது ஒப்படைக்க வேண்டுமென்று கோரும் மகஜரொன்றை உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வத்துக்கு நெல்லியடி தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி அனுப்பிவைத்துள்ளது. இதன் பிரதி தமிழரசுத் தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்துக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## ஆச்சிரமத்தில் சேர்க்கப்பட்ட இளம் பெண்ணை காணவில்லை!

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சி தொகுதியிலுள்ள ஒரு ஆச்சிரமத்தில சேர்க்கப்பட்ட 15 வயது இளம் பெண் கடந்த ஒரு மாத காலமாக காணப்படாததால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சங்கானையைச் சேர்ந்த இளம்பெண்ணின் தாயாரான ராசம்மா ஆச்சிரமத்துக்கு பல தடவை சென்று தனது மகளைப்பற்றி விசாரித்த பொழுது மகள் அங்கு இல்லையென்றும் காணாமல்போன இளம் பெண்ணின் தாயார் இது சம்பந்தமாக கிளிநொச்சி பொலிசில் புகார்செய்ததாகவும், பொலிசார் விசாரணைசெய்தும் இளம் பெண்ணின் இருப்பிடம் கண்டுபிடிக்கப்படவில்லையென்றும் எல்லாப்பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்தெரியவருகிறது.

## உப தலைவர்

கொழும்பு, செவ்.

ஸ்ரீலங்கா சமத்திவாதி கட்சியின் உபதலைவராக டாக்டர் த[illegible] தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## வானொலியில் "சேர் துரைசுவாமி"

மாவிட்டபுரம், புதன்

சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களைப்பற்றி ஓர் விசேட நிகழ்ச்சியை இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவையினர் இன்று இரவு 7-30 மணிக்கு ஒலி பரப்பவிருக்கின்றனர்.

மறைந்த பெரியார்
சேர் வைத்திலிங்கத்துக்கு
அஞ்சலி

## 'பொது வாழ்வு அவரால் சிறப்புற்றது'

### மகாதேசாதிபதி செய்தி

சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியின் நினைவு மலருக்கு ஒரு செய்தி அனுப்பக்கிடைத்த வாய்ப்பு எனக்குப் பெருமகிழ்ச்சி தருவது

சபாநாயகர் என்ற வகையில் அவர்மீது பாரிய கடமைப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவரது அரசியல் பக்குவ ஞானமும் அதனோடு இணைந்த தலைமை தாங்கும் ஆற்றலும், அவருக்குள்ள நல்நோக்கும் மேலான கடமை உணர்ச்சியும் சபாநாயகர் பதவியில் அவரை மிகவும் எடுப்பாகக் காட்டின. சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியிடம் தங்களுக்குப் பரிபூரண நம்பிக்கையிருந்ததாக அவர் காலத்து இராஜிய சகபாடிகள் அனைவரும் ஒப்புக்கொண்டனர். அவரது படாடோபமின்மை, கண்ணியம் தவறுமை, கல்விப் பண்பு என்பன நமது நாட்டின் பொதுவாழ்வைச்சிறப்பித்த பெரியார்கள் மத்தியில் அவருக் குஒரு ஸ்தானத்தைத் தேடித்தந்தன.

ஒய்வு பெற்ற அன்னாரது வாழ்க்கையின் பிற்காலத்திலும் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி நீதி நேர்மையையும் உயர்ந்த எண்ணங்களையும் கைக்கொண்டு வாழ்ந்து தமது இன சமூகத்தை தொடர்ந்து நன்நிலைப்படுத்தினர்.

தாம் வகுத்துக்கொண்ட சொந்த வாழ்க்கை நெறிகளிலிருந்தும் வழுவாதவரும் உயர்ந்த நோக்கங்கள் கொண்டவரும் ஆனால் மிக எளிய மனிதருமான ஒருவரின் நிழலே 92-வது ஆண்டில் சேர் துரைசுவாமியின் மறைவுக்குப்பின் நமக்குத் தோற்றப்படுகிறது.

## 'பரந்த பண்பாடுள்ள பேரறிஞர்'

### பிரதமர் செய்தி

சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ஞாபகார்த்த மலருக்கு இச் செய்தியை அனுப்புவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நான் அவருடன்நெருங்கிப்பழகியிருக்கிறேன். அவர்பரந்தபண்பாடுள்ள ஒரு பேரறிஞர்; ஒரு சிறந்த அரசியல் ஞானி. அரசாங்க சபையில் பத்து வருடங்களுக்கு மேலாக சபாநாயகர் பதவியை வகித்து நேர்மை, நீதி, நடுநிலை முதலியவற்றின் இணையற்றசின்னமாகவிளங்கினர் அவரது கல்வியறிவும்கலாச்சாரமும், விரிந்த மனப்பான்மையும், சாதி, சமயம் முதலிய குறுகிய நோக்கங்களுக்கும் அப்பாற்பட்ட ஓர் ஐக்கிய இலங்கை சமுதாயத்தை கற்பனை செய்ய அவரைத்தூண்டின.

இந்நாட்டு மக்களின் சேவையில் தமது வாழ்நாளை அர்ப்பணம் செய்த ஓர் உத்தமரை நாம் கௌரவிக்க வேண்டியதுமுறையே.

விசேஷ மலரில் சேர் வைத்திலிங்கத்தாரைப் பற்றிய மற்றக் கட்டுரைகளும் செய்திகளும் II, III, IVம் பக்கங்களில் வெளியாகியுள்ளன.

## மத்திய சைகோனில் வியட்காங் திடீர் தாக்குதல்

சைகோன், மே 10

தென்வியட்னாமில் மத்திய சைகோனில் இன்று வியட்காங்கியர் மேற்கொண்ட திடீர் தாக்குதல்களினால் இப்பகுதி சில மணி நேரம் பெரும் அல்லோலகல்லோலத்துக்குள்ளானது.

வியட்காங்கியர்கள் திடீரென இயந்திரத்துப்பாக்கிகளினால் தாக்கத்தொடங்கினரென்றும் வெடிகுண்டுகளை வீசிவிட்டு ஓடினர் என்றும் செய்திகள் கூறுகின்றன.

வியட்காங்கியரின் இவ்விதமான திடீர் தாக்குதல்களினால் அமெரிக்க, தென் வியட்னாம் அரசாங்க துருப்புகள் பெருமளவு அதிர்ச்சியடைந்தனர் என்றும் உடனடியாக அவர்கள் பதில் நடவடிக்கையை மேற்கொண்டபொழுது வியட்காங்கியர் அவர்கள் மீது வெடி குண்டுகளை வீசி ஓடினர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வியட்காங்கியர் இயந்திரத்துப்பாக்கிகளினாலும் இலேசுரக துப்பாக்கிகளினாலும் தாக்குதல்கள் நடத்தினர். இத்தாக்குலின்போது அரசாங்க தரப்பிலும் வியட்காங் தரப்பிலும் பலர் பலியானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சுவர்க்கமும் நரகமும் நமக்குள்ளேயே இருக்கின்றன. ஆன்மீக அழகின் ஊற்றுக் கண்ணும் நம்முள்ளேதான். அதனால் நமக்குள்ளே இருக்கும் சக்திகளோ மிக அதிகம். புலன்களை வெளிவிடாமல், உள் முகப்படுத்த, நமது அபிலாஷைகள் படிப்படியாக நிறைவேறும்.

—சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna: Phone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு சித்திரை மீ 28உ (11-5-66)


## உலக பௌத்த மகாநாடு

மதவிஷயமாக பொதுமக்களிடையே அவநம்பிக்கைகள் அதிகரித்து வரும் இக்காலத்தில், கொழும்பிலே ஆரம்பமாகி நடைபெறும் உலக பௌத்த மகா சங்க மகாநாடு பலவிதங்களும் முக்கியமானதாகவும், மக்களுக்குப் பயன்படுவதாகவும் இருக்கவேண்டும்.

இம்மகாநாட்டுக்கு வியட்னும், மலேஷியா, சீனக்குடியரசு, ஹாங்காங், நேபாளம், கம்போடியா, சிக்கிம், லடாக், பூட்டான், கொரியா, ரகிஸ்தான், இந்தியா, சிங்கப்பூர், தாய்லந்து, லண்டன், இலங்கை முதலிய பல நாடுகளிலிருந்தும் முதல் முறையாக பௌத்த பிரதிநிதிகள் வந்து கலந்துகொண்டுள்ளனர். அதுமட்டுமன்றி, பௌத்த சமயத்திலுள்ள தேராவாத மகாயான எனும் இரு முக்கிய பிரிவினரும் கலந்துகொண்டிருப்பது பெரிய விசேஷம். இதனால் பௌத்த சமயத்திலே புதிய ஒற்றுமைக்கான நம்பிக்கை உதயமாகியுள்ளதுடன், உலக அமைதியையும் நல்வாழ்வையும் ஏற்படுத்த பௌத்த சமய குருமார்களுக்கு ஒரு புதிய வாய்ப்பும் கிடைத்திருக்கிறது.

வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள பௌத்த பிரதிநிதிகளை வரவேற்று மகாநாயகா பேசுகையில், யுத்தத்தாலும் போராட்டங்களாலும் அவதிப்படும் இன்றைய உலகுக்கு புத்தர் பெருமான் அளித்துள்ள சமாதான உபதேசம் மிகவும் தேவையென்றும், விஞ்ஞானத்திலே வேகமாக முன்னேறி வரும் உலகம், ஆத்மீகத்துறையில் பின்வாங்கி மோசமாகி வருவதாயும், ஆகவே பௌத்த பெரியார்கள் புத்தர் பெருமானின் உபதேசத்தின் மூலம் உலகிலே அமைதியை ஏற்படுத்த ஒற்றுமையான முயற்சியைச் செய்யவேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

மதத்திலே மக்கள் நம்பிக்கை இழந்து வருவதன் காரணமென்ன? மதத்தலைவர்களுக்குள்ளாகவே வேற்றுமைகளும், உயர்வு தாழ்வு எண்ணங்களும் இருப்பதும் மத நெறிப்படி சமய குருமார்களே பொதுவாக வாழத்தவறுவதும் தான், மக்களுக்கு அவர்கள்மீது மட்டுமன்றி பொதுவாக மதத்திலேயே மதிப்பும் நம்பிக்கையும் இல்லாமற் போகின்றது. எல்லா சமயங்களும் அன்பையும், அமைதியையுமே வற்புறுத்துகின்றனவெனினும் மதத்தின் பெயராலேயே கொடுமைகள் பல நடப்பதும், யுத்தங்கள் மூளுவதும் சரித்திரம் கண்ட உண்மை.

இந்த அவல நிலையை மாற்றுவதெப்படி? உலகமெங்கும் தத்தம் மதங்களைப் பரப்புவதன் மூலமும், மதமாற்றங்கள் வாயிலாகவும், ஒவ்வொரு மதமும் போட்டா போட்டியுடன் பிரசாரங்கள் செய்வதாலும் இது கைகூடுமா அல்லது ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள், தங்கள் சமய கோட்பாட்டின்படி வாழும்படி செய்வதின் மூலமா? இதைப்பற்றி சற்றே சிந்தனை செய்தால் மத மாற்ற முயற்சியிலும், வெளியாரிடையே பிரசாரங்கள் செய்வதைவிட, தம்தம் மதத்தினரிடையே உண்மையான சமய வாழ்வு ஏற்படும்படி, செய்வதே முதல் அவசர வேலை என்பதை யாரும் உணரலாம். பௌத்த சமயத்துக்குள்ள பெரிய வாய்ப்பு, அதில் ஏராளமான துறவிகள் இருப்பது. பௌத்த தர்மப்படி, பௌத்த மக்கள் வாழும்படி, அவர்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்வதுடன், அரசாங்கத்திடமும் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, மதுபானம் முதலியவற்றைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதாயின், பௌத்த சமூகம் மட்டுமன்றி நாட்டுக்கே பெரிய நன்மை ஏற்படுவதாகும்.

பௌத்த நாடான வியட்னுமில் பௌத்த மக்கள் அமைதி இழந்து தவிக்கின்றார்கள். துரதிருஷ்டசாலிகளான அம்மக்கள் மீண்டும் அமைதியாக வாழ வழிகாட்ட வேண்டிய பெரிய பொறுப்பு இம்மகாநாட்டுக்கு உண்டு. உலக அமைதி ஏற்படவேண்டுமாயின், முதலில் மக்கள் மனதில் அமைதி ஏற்படவேண்டும். மக்களுக்கு மன அமைதி ஏற்படுவதற்கான வழிவகைகளை புத்தர் பெருமானும், பல சமயப் பெரியார்களும் உபதேசித்திருக்கிறார்கள். அந்த உபதேசங்களை மறந்தும், அவற்றின்படி வாழாமலும் இருப்பதால்தான் மன அமைதி மட்டுமன்றி, நாட்டு அமைதியும் உலக அமைதியும் கெடுவதாக இருக்கின்றது. இப்பொழுது கொழும்பில் கூடியுள்ள உலக பௌத்தசங்க மகாநாடு, பௌத்த மக்கள் தங்கள் சமய நெறிப்படி தூயவாழ்வுவாழச் செய்ய ஓரளவாவது முடியுமாயின், அதுவே இம்மகாநாட்டின் வெற்றியாக இருப்பதுடன், மற்றச் சமயத்தவருக்கும் மேலான வழிகாட்டுவதாக இருக்கும்.

## மகோற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

வில்லூன்றி வீரகத்தி விநாயகராலய மகோற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் வரை நடைபெறும். மே மாதம் 19-ம் திகதி வியாழக்கிழமை ரதோற்சவமும் மே 21-ந் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

# கவியோகி சுத்தானந்தர்

— வி. என். பி. —

[அரவிந்தர் தேன் அருந்தும் வண்டென, தாங்கரும் தவம் மேற்கொண்டு, யோகியாய் பொலியும் சுத்தானந்த பாரதியாரின் 70-வது பிறந்ததினம் இன்று தமிழ் கூறும் நல்லுலகம் யாங்கணும் கொண்டாடப்படுகிறது.]

அன்னை காமாட்சியம்மாளுக்கும் தந்தை தடாதரருக்கும் நான்காவது குழந்தையாக ஏவிளம்பி வருடம் சித்திரை மாதம் 31-ம் திகதி (11-5-1897) தோன்றிய சுத்தானந்தருக்கு தந்தையார் இட்ட பெயர் வேங்கட சுப்பிரமணியம். ஞானகுரு தீட்டிய தீக்ஷாநாமம் சுத்தானந்தம். 'பாரதி' என்பது துறவறப் பெயர். ஆத்மராமன், சுத்தயோகி என்று வேறு பெயர்களும் வழங்கும்.

சுத்தானந்தர் தமிழுக்கு ஆற்றிய தொண்டை எவராலும் அளத்தல் அரிது. எத்தனை நூல்கள் எழுதியுள்ளார் என்று சுவாமிகளுக்கே தெரியுமோ என்பது சந்தேகம். பற்பல துறைகளில்- நாவல், சிறுகதை, வரலாறு, மொழிபெயர்ப்பு, கீர்த்தனை, காவியம்-அவர் எழுதிய பன்னூறு நூல்களைப் போல அவருக்கு முன்னே அல்லது பின்னே வேறெவரும் எழுதவில்லையென்று துணிந்து கூறலாம். அவர் தொடாத விஷயம் இல்லை, எழுதாத துறையில்லை. அவருடைய எழுத்தில் கடலின் ஆழத்தையும், சூறாவளியின் வேகத்தையும், ஊழித்தீயின் கனலையும் காணலாம். அவர் வெளியிட்ட நூல்களை ஒன்றுக்குமேல் ஒன்றாக அடுக்கினால் உச்சியிலிருக்கும் புத்தகத்தை எடுப்பதற்கு ஏணிதான் வைக்க வேண்டும்.

தமக்கு தத்துப்பிள்ளையாக வந்தால் தமது சொத்துகள் அனைத்தையும் தருவதாகக் கூறிய லட்சாதிபதி மாமனாரைப் பார்த்து, 'நான் அன்னை பராசக்தியின் மகன்; நான்யாருக்கும் தத்துப் பிள்ளையாக முடியாது' என்று பதிலளித்த பாரதியார் ஐந்து வயதினிலே அறியாப் பருவத்திலே 'அம்மா பரதேவி தயாபரியே' என்று அடி எடுத்துப் பாடத்தொடங்கி விட்டார். பிற்கால வாழ்க்கையில் உபாத்தியாயராகவும், பத்திரிகாசிரியராகவும், அரசியல் தொண்டனாகவும், காந்திப் பித்தராகவும், அறநூல் போதகராகவுமிருந்துவிட்டு இன்று புதுவையிலுள்ள பகவான் அரவிந்தர் ஆசிரமத்தில் தவக்கோலம் பூண்டு வாழ்ந்து வருகிறார்.

'சுவாமி சுத்தானந்தர் கைக்கொள்ளும் முறைகள் புதுமையும் தனிமையும் கொண்டவை. இவர் பிறவிகளையும் மத சித்தாந்தங்களையும்பற்றி கவனங்கொள்வதில்லை. அவர் திருவாயினின்று ஞானவெள்ளம் பெருகும். பார்வை அன்பு மழைபொழியும். நடத்தையில் எளிமை தோன்றும். இவரைச் சூழ்ந்து காந்த சக்தி நிலவும். முகமண்டலத்தைச் சுற்றி ஜோதி வீசும். பேச்சிலே உண்மையார்வம் காணும். இவரைக்காணும் பாக்கியசாலிகளின் உள்ளத்திலே இவை நிரந்தரமாகப் பதிந்துவிடும்'.

இவ்வாறு ரிஷிகேசத்து முனிவர் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் சுத்தானந்தரின் பொன்விழா கொண்டாடப்பட்ட போது ஆசிமொழி கூறினார்.

'இல்லையென்பான்யாரடா, என் அப்பனைத் தில்லையிலே பாரடா'—'சுற்றி நில்லாதே போ பகையே, துள்ளி வருகுதுவேல்'—'வாவா மயிலே வனக்குயிலே, போவோம் காலை பூஞ்சோலை'— 'மீனார் மலர்க்குளத்தினூடே, தவழ் வெள்ளி யன்ன மென வாராய்'-'பாரினிலே யழகு, கண், பார்வையைக் கொஞ்சுதம்மா, அதன் போர்வையை நீக்கிவிட்டால், தெய்வப் பொலிவு காணுதம்மா'—'வீறுபெற்று நில்லடா, விதியை மீறிச் செல்லடா, ஊறும் வீர சக்தியால், உலகை முற்றும் வெல்லடா.'

இந்த அடிகளும் சுத்தானந்தரின் தமிழ் கொஞ்சுவதையும், கெஞ்சுவதையும் குழைவதையும் குமுறுவதையும் துள்ளுவதையும் நெஞ்சையள்ளுவதையும் காணக் கூடியதாயிருக்கின்றது.

சுத்தானந்தரை சரியாகப் புரிந்துகொள்ள முடியாத சிலர் அவரை மிகவும் மலிவாக மதிப்பது மடமைத்தனம். அவருடைய தமிழ்ப் பற்றை அறிந்துகொள்ள வேண்டுமானால் இந்தப்பாடலைப்படியுங்கள்.

தமிழே யெனது தாரகத்
தாய்மொழி
தமிழர் அனைவரும் சமர
சக் குடும்பம்
தமிழுல கெனது தங்கக்
கோயில்
தமிழ்ப் பணி யெனது
சலியா மூச்சு
தமிழரனைவரும் தகைமிகு
தோழர்
தமிழ்த்தாய் எனதுசக்தித்
தெய்வம்
தமிழுணர்வே யென் தள
ராப் பூசனை
எந்தாய் வாழ்க மந்திர
மெனக்கே.

# 3-வது அணுகுண்டையும் சீனா வெடித்தது!

## பல நாடுகள் கண்டனம்

பீகிங், மே. 10

கம்யூனிஸ்ட் சீனா தனது மூன்றாவது அணுகுண்டை நேற்று பீகிங் நேரப்படி நான்குமணிக்கு வெற்றிகரமாக வெடித்தது.

அணுகுண்டுச் சோதனை மேற்குச் சீனாவிலுள்ள அணுகுண்டு பரீட்சை பகுதியில் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காற்று மண்டலத்தில் நடத்தப்பட்ட இப்பரீட்சையினால் அதிகமான மக்கள் வாழும் பெரும்பகுதிகள் (கதிரியக்கத்தினால்) பாதிக்கப்படலாமென்று மேற்கு நாட்டு விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

### 3-வது அணுகுண்டு

நேற்று வெடிக்கப்பட்ட அணுகுண்டு முன்னர் சீனா வெடித்த அணுகுண்டுகளைப் போன்றதென்றும் 20,000 டி. என். டி. சக்தி கொண்டதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. சீனா நேற்று வெடித்திருப்பது மூன்றாவது அணுகுண்டாகும். முதலாவது அணுகுண்டு 1964-ம்ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் திகதியும், இரண்டாவது அணுகுண்டு 1965-ம்ஆண்டு மேமாதம் பதினன்காம் திகதியும் மூன்றாவது அணுகுண்டு நேற்றும் வெடிக்கப்பட்டிருக்கின்றன.

### ஜலவாயுக்குண்டா?

நேற்று வெடிக்கப்பட்ட மூன்றாவது அணுகுண்டு எத்தன்மை வாய்ந்தது என்பது குறித்து அமெரிக்க, ரஷ்ய விஞ்ஞானிகள் இப்பொழுது ஆராய்ந்துவருகின்றனர்.

இக்குண்டு ஜலவாயு (ஹைட்ரஜன்) குண்டா இல்லையா என்பது குறித்து வெடிக்கப்பட்ட ... வும் வெளியிட விஞ்ஞானிகள் மறுத்த பொழுதிலும் ஓரளவு ஜலவாயு குண்டாக இருக்கலாம் என்றுஇவர்கள் கருதுவதாகத் தெரியவருகிறது. அணுகுண்டு வெடிப்பின் மூலம் ஏற்பட்டுள்ள கதிரியக்கத்துகள்களை பரிசோதனை செய்வதில் அமெரிக்க விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இக் குண்டின் சக்தி பற்றி 26, 36 மணி நேரத்துக்குள் கண்டுபிடித்துவிடலாம் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

### பல பகுதிகள் பாதிப்பு

சீன அணுகுண்டு வெடிப்பினால் ஏற்பட்டுள்ள கதிரியக்கத் துகள்களினால் சீனாவின் ஒரு பகுதி உள்ளிட்டு, வடக்கு ஜப்பான், கனடா, வடக்கு ஆபிரிக்கா, ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் மக்கள் ஜனத்தொகை கூடிய சில பகுதிகள் பாதிக்கப்படலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கதிரியக்கம் அடுத்த முப்பது நாட்களில் மழைநீருடன் பூமிக்குவரலாமென்று கூறப்படுகிறது.

### பல நாடுகள் கண்டனம்

மூன்றாவது அணுகுண்டை கம்யூனிஸ்ட் சீனா வெடித்திருப்பதை உலகின் பல நாடுகள் கண்டித்துள்ளன.

சீனாவின் பிடிவாதப் போக்கினால் உலகில் நிரந்தரமான சமாதானம் ஏற்பட முடியாது என்று அமெரிக்க அதிபர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் மிரட்டல்களுக்கு ஆளாகும் எந்த நாட்டுக்கும் உதவியளிக்க அமெரிக்கா தயாராகவிருக்கும் என்று அமெரிக்க ராஜாங்க பகுதி அறிவித்துள்ளது.

சீன அணுகுண்டுச் சோதனைபற்றிய செய்தியைச் சோவியத் செய்தி பத்திரிகை ஒரு வசனத்தில்மட்டுமே வெளியிட்டிருந்தது. ஆனால் கருத்து எதுவும் வெளியிடவில்லை.

பிரிட்டன், இந்தியா, ஜப்பான், கனடா, ஆஸ்திரேலியா, நியுஸிலாந்து உள்ளிட்டு பல நாடுகள் சீன அணுகுண்டு வெடிப்பை வன்மையாகக் கண்டித்துள்ளன.

ஜெனிவாவில் கூடியுள்ள பதினேழு தேச படைகுறைப்பு மகாநாடும் சீனாவின் செயலை கண்டித்துள்ளது.

## கெய்ரோவில் கொஸிஜின்

கெய்ரோ, மே 10

சோவியத் பிரதமர் திரு. அலெக்ஸி கொஸிஜின் ஐக்கிய அரபு குடியரசில் எட்டு நாள் உத்தியோக விஜயம் செய்யும் பொருட்டு இன்று கெய்ரோ வந்துசேர்ந்தார்.

பிரதமர் கொஸிஜினுடன் சோவியத் வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிக்கோவும் இங்கு வந்துள்ளார்.

ஐக்கிய அரபுக் குடியரசுக்கான ரஷ்ய உதவித்திட்டங்கள் குறித்து முக்கியமான பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேசப் பிரச்னைகள் குறித்து பிரதமர் கொஸிஜினும் ஐ. அ. குடியரசு அதிபர் நாசரும் நடத்தும் பேச்சுக்களில் வியட்னும் உள்ளிட்டு பல நெருக்கடிகள் இடம்பெறலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## வாடகைக்கு

புல்டோசர்

எமது கற்றபில்லர் புல்டோசர் கண்டாவளைப் பகுதியில் வேலை ஆரம்பித்துவுட்டது தேவைகளுக்கு நேரில் சந்திக்கவும். டோசர் யூனிற், வெலிக்கண்டல், கண்டாவளை. 313

## விற்பனைக்கு

காணி

வவனியா நகரசபை எல்லைக்குள் வேப்பங்குளத்தில் (பிரதான வீதி) 5 ஏக்கர் நிலம் விற்பனைக்குண்டு. 80 அடி அகலமுள்ள கிணறு அடங்கிய இக்காணியில், 75 தென்னை மரங்களும், 30 மா மரங்களும் வேறு பிரயோசனங்களும் உண்டு. வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்த இடம். எஸ். சந்திரசேகரம், தபாற் கந்தோர், வவனியா. 291

நல்ல நிலைமையிலுள்ள ஏ ஜே எஸ் 3.5 மோட்டார் சைக்கிள் 4 ஸ்ரீ 6000 இலக்க தொடரில் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். செ. இராசலிங்கம், கல் உடைக்கும் தொழிற்சாலை, பலாலிவீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். 328

## தேவை

நெசவாளர்

பொன்னாலையிலுள்ள நெசவு நிலையத்துக்கு பயிற்சி பெற்ற நெசவாளர்தேவை. 60s, 80s தனி நூலிலும், பட்டு நூலிலும் வேலைசெய்யக்கூடியவர்களுக்கு விசேட சலுகை உண்டு. உடனே விண்ணப்பிக்கவும். ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 321

## 42 வர்த்தகர்கள் லைசென்சுகள் ரத்து

கொழும்பு, செவ்வாய்

சுங்கக் கட்டுப்பாட்டுக்கு விரோதமாக விலைகூடிய துணிவகையை இறக்குமதி செய்த 42 ஜவுளி இறக்குமதியாளர்களின் இறக்குமதி லைசென்ஸ் ஏற்றுமதி லைசென்ஸ் ஆகியவற்றை ரத்துச் செய்வதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.


REGAL--JAFFNA
NOW SHOWING!
Sophia Loren - George Peppard
in
Operation Cross Bow
(Panavision-color) (War Film)


நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி—விஜயகுமாரி
நடித்த
"பச்சை விளக்கு"

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45க்கு
பி. யு. சின்னப்பா
நடித்த
ஆரியமாலா


## 'ஆயிரத்தில் ஒருவன்'

வின்ஸர் படமாளிகையில் 11-5-66 புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு எம். ஜி. ஆர்.- ஜெயலலிதா நம்பியார் நடித்த 'ஆயிரத்தில் ஒருவன்' படம் அரியாலை ஐக்கியகழக நிதிக்காகக் காண்பிக்கப்படும். 199


கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனோரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி


## தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் பற்றி மசோதா

கொழும்பு, திங்கள்

தீங்கு விளைவிக்கும் பயங்கர ஆயுதங்கள் வைத்திருப்பதையும் தடைசெய்வதற்கான மசோதா இன்று பிரதிநிதிகள் சபையில் இரண்டாவது தடவையாக நிறைவேறியது.

இம்மசோதா முதலில் செனட்சபையில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இன்று இம்மசோதா மீது வாதித்தபோது எதிர்க்கட்சியினர் தெரிவித்த கருத்துக்களை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்வதாக ராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர்: ஜயவர்த்தன உறுதியளித்தார்

சபை இம்மாதம்20 திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

## தணிக்கை அதிகாரிகள்

கொழும்பு, சனி

ஒலிபரப்பு டைரக்டர் ஜெனரல் உதவி டைரக்டர் பி. என்.மெதகொட, விஜயமானே, ஈ: கே. பெரேரா, எஸ். எம். ஐ. மரிக்கார், எஸ். விஜயசிங்கா ஆகியோர் தகுதிவாய்ந்த தணிக்கை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு நிர்வாக பிரதேசத்துக்கு அந்தந்த அரசாங்க அதிபர்கள் தணிக்கை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 1969 ல் சந்திரனில்

வாஷிங்டன், மே 10

1969-ம் ஆண்டில் சந்திரனை மனிதன் வலம் வருவான் என்று அமெரிக்க பிரபல விஞ்ஞானியொருவர் உறுதி தெரிவித்துள்ளார்.

சந்திர மண்டலப் பிரயாணத்திட்டத்தில் ரஷ்யாவைவிட அமெரிக்கா பல படிகள் முன்னேறியிருக்கிறதென்று இவர் தெரிவித்தார்.

## விமான போக்குவரத்து

பாரிஸ், மே 10

பாகிஸ்தானுக்கும் ஷாங்காய்க்குமிடையே விமானப் போக்குவரத்துச்சேவையை ஆரம்பிப்பது குறித்து இங்கு பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

# விளம்பரம்

## யாழ். மாநகரசபை அறிவித்தல்

மாநகரசபை அதிகார எல்லைக்குள் கட்டாக்காலி ஆடு, மாடுகள் பிடிப்போர் பதவிக்கான காலி ஸ்தானங்கள்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள், 18 வயது முதல் 25 வயது வரையுள்ள திடசாலியும் சுகதேசியுமான ஆண்களிடமிருந்து 1966-ம் ஆண்டு வைகாசி மாசம் 20-ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேல் விபரம் காரியாலய நேரத்தில், மாநகரசபை மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கட்சன் செல்வராசா,
மாநகர ஆணையாளர்.

வேலைப்பகுதி,
மாநகரசபை,
யாழ்ப்பாணம், 9-5-66.
408

## வரணிக் கிராமசபை கேள்வி விளம்பரம்

1. சந்திரன்கேணித் தெரு வேலை.
2. சைவப்பிரகாச வித்தியாசாலை ரோட்டு வேலை.
3. வரணிச் சந்தையில் 2 அறைக்கட்டிடம்.

மேற்படி வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 15-5-66 தொடக்கம் ஒவ்வோர் வேலையின் பெயரிலும் ரூபா 50/- செலுத்தியதன் பெயரில் இக்காரியாலயத்தில் வழங்கப்படும்.

2. ஒவ்வோர் வேலைக்கும் பத்திரப்பணமாய் ரூபா 10/- கட்டப்படுதல் வேண்டும். இப்பணம் திருப்பித்தரப்படமாட்டாது.

3. கேள்விப்பத்திரங்கள் மேற்படி சபைத்தலைவரால் 29-5-66 காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அதே நேரத்தில் வட பிரதேச உள்ளூராட்சி உதவி அதிபருக்குக்கிடைக்கக்கூடியதாக கேள்வியின் பிரதி ஒன்றை பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

4. மேலதிக விபரங்கள் கிராமசபைக் காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

க. ஆறுமுகம்,
அக்கிராசனர்,
வரணிக் கிராமசபை,
வரணி

சி. நா. இராசா,
இலிகிதர், 9-5-66
407

## உள்ளூராட்சிச் சேவை காவற்காரர் பதவி

காங்கேசன்துறை ப. ச.

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்கள் முடிவு திகதி:- 7-6-66.

3. வேதன அடிப்படை: ரூபா 540—30X8-24X1—ரூபா 804 வருடாந்தம்.

4. முழு விபரங்களுக்கும் 1966-ம்ஆண்டின்5 ம் மாதம் 20-ந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் 4-வது பகுதியைத் தயவுசெய்து பார்க்கவும்.

ஆ. வ. சதாசிவம்,
காங்கேசன்துறை ப. ச;
தலைவர்.
காங்கேசன்துறை ப. ச.
அலுவலகம், 6-5-66.
406

## கேள்வி விளம்பரம் சென்ற். செபஸ்தியான் ஒழுங்கை வேலை.

மேற்படிவேலைக்கானகேள்விப்பத்திரங்கள் 19-5-66 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை புலோலிக் கிராமசபைத் தலைவரால் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்கள் தலைவருக்கு 21-5-66 சனிக்கிழமை காலை 10 மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாக பதிவுசெய்யப்பட்ட தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கலாம்.

கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 15-00-ம் கேள்விப்பிணைப்பணமாக ரூபா 100-00-ம் கட்டியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மற்றும் விபரங்களை வட பிரதேச (மேல்) உள்ளூராட்சி அதிபரின் கந்தோரில் அல்லது எமது கந்தோரில், கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

த. சிதம்பரப்பிள்ளை,
பதில் தலைவர்,
புலோலிக் கிராமசபை.
புலோலிக் கி. ச. கந்தோர்,
பருத்தித்துறை, 9-5-66.
409

## நோய்

சலக்கழிச்சல், தோல் சம்பந்தமான சொறி, சிரங்கு, தேமல், கரப்பன் முதலிய வியாதிகள் குணப்படுத்த உத்தரவாதம்.

சச்சிதானந்தா வைத்தியசாலை,
இந்திரன்அம்மன்கோவிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி, 405

## பழைய ஊழியர்க்கு மறு சந்தர்ப்பம்

கொழும்பு, செவ்.

சிங்களத்தில் இன்னமும் திறமை பெறாத பழைய அரசாங்க ஊழியர்கள் சேவையில் நின்றும் இளைப்பாறுவதற்கு, அரசாங்கம் இன்னோர் சந்தர்ப்பத்தை கொடுப்பதென தீர்மானித்துள்ளது. இளைப்பாறவிரும்பும் உத்தியோகத்தர்கள் இச் சலுகையை 1968-ம் ஆண்டு டிசம்பர் வரையும் உபயோகிக்கலாம்.

## கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி இறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம், புதன்

சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழகத்தின் மூன்றுவது ஆண்டு கரபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று மாலை சாவகச்சேரி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் நடைபெறும் இப்போட்டிகளின் பரிசளிப்பு விழாவில், வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ரி. தளையசிங்கம் பிரதம விருந்தினராககலந்துகொள்வார். திருமதி தளையசிங்கம் பரிசில்களை வழங்குவார்.

இறுதிப் போட்டி 'ஏ' பிரிவில் காங்கேசன்துறை அபிவிருத்தி விளையாட்டுக் கழகமும், அல்வாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் கலந்துகொள்ளும்.

'பி' பிரிவில் சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழக 'பி' பிரிவு கோஷ்டியினர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப்பிரிவு தென்மராட்சி பிரிவு காரியாதிகாரிகள் இவ்விழாவில்சொற்பொழிவாற்றுவார்கள். சாவகச்சேரி நகராண்மைக் கழகத்தலைவரும் சொற்பொழிவாற்றுவார்.


வடமாகாணத்தில்
இரவு - பகல் சேவை செய்யும்
ஒரே ஒரு
ஸ்தாபனம்
உவாட் அன் டேவி
(ஆங்கில மருந்துச்சாலை)
148, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "முத்தமிழையும் வளர்த்தது கோவில்களே"

மாவிட்டபுரம், செவ்.

"அறிவிற்கெட்டாத காலத்திலிருந்தே சைவமும் தமிழும் பிரிக்கமுடியாதவாறு நிலைத்துவருகிறது. ஆலயங்களை நிலைக்களனுகக் கொண்டு இயல் தமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் வளர்ந்துவந்தன. புராணப்படிப்பு உபந்நியாசம் இவை மூலம் இயற்றமிழையும்; பண்ஓதுதல், நாதஸ்வரம் இசைத்தல் இவை மூலம் இசைத் தமிழையும், விழாக்காலங்களில் நடனம், கூத்து ஆதியன மூலம் நாடகத் தமிழையும் வளர்த்துவந்த பெருமை சைவர்களுக்கே உண்டு. ஆங்கிலேயர் ஆட்சியின் போது தமிழர்கள் தமிழை மறந்து ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெற்றனர். மதம் மாறினர். ஆனல் தாய்நாட்டு பற்றுக்கொண்ட பண்டிதர்கள், புலவர்கள், தங்கள் குடிசைகளிலே இயற்றமிழை வளர்த்து வந்தனர். இதேபோல் இசைநாடகமும் கிராமத்தின் மூலை முடக்குகளில் வளர்ந்துவந்தது.

இளவாலை இளங்குமரன் கலாமன்ற இரண்டாவது ஆண்டுவிழாவை மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றத்தலைவர் பிரம்மஸ்ரீ அ. து. ஷண்முகநாதக்குருக்கள் ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

தமிழை குடிசையில் காத்து வளர்த்துவந்த தமிழ்ப்புலவர்களை மறைத்து விட்டு, பட்டம் பதவிக்காக முத்தமிழையும் ஒதுக்கி விட்டு ஓடிப்போனவர்கள் இன்று எமக்கிடையே தோன்றி தமிழை வளர்ப்பதாக கூச்சமில்லாது கூறுகிறார்கள். இச் சுயநலமிகளைக் கண்காணித்து வர வேண்டிய பொறுப்பு கிராம மக்களைச் சார்ந்ததாகும். நாம் கிராமத்தினூடே தோன்றும் ஆலயங்களை நிலைக்களனுகக் கொண்டு ஆதியில் செயல்பட்டுவந்த பிரகாரம் முத்தமிழையும் வளர்க்க முற்படுவோம் என்றும் அவர் கூறினர்.

இவ்விழாவிற்குத் தலைமை வகித்த கலையரசு சொர்ணலிங்கம் பேசுகையில் நாடகத்தை ஓர் உயர்ந்த கலையாகப் பேணவேண்டியது இரசிகர்களின் கடமையாகும் என்ருர்.

நாடக எழுத்துப்போட்டியில் இலங்கை கலைக்கழக முதற்பரிசைப் பெற்ற "நீதிக்கு ஒருவன்" நாடகாசிரியர் அப்பச்சி மகாலிங்கம், நாடக நடிப்புப்போட்டியில் கலைக்கழக முதற் பரிசுபெற்ற மன்னர் இந்து சமய வளர்ச்சிசங்க "ஆதவனே மன்னிப்பாய்" நாடகக் குழுவினருக்கும் இவ் விழாவில் பாராட்டுப்பத்திரம் வழங்கப்பட்டது. இவ் விழாவில் கவிஞர் கரவைக்கிழான், தேவன் உட்பட பலர் உரையாற்றினர். நீதிக்கு ஒருவன் நாடகமும் நடைபெற்றது.

# ஜப்பானில் பயிற்சி பெறுவார்



இலங்கை பொது மராமத்து ஆராய்ச்சி பிரிவைச்சேர்ந்த என்ஜினியர் திரு மு. தில்லைநாதன் ஜப்பானிய அரசாங்க அழைப்பை ஏற்று அங்கு சென்றுள்ளார். டோக்கியோ பல்கலைக் கழகத்தில் சிமெந்துக் கொங்கிறீட் பற்றி இருவருடங்களுக்கு விசேஷ ஆய்வு நிகழ்த்துவார். முதலில் ஒஸாகா பல்கலைக்கழகத்தில்ஜப்பான் மொழியில் தேர்ச்சிபெறுவார்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்த இவர் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகப்பொறியியற் பிரிவில் சேர்ந்து சிவில் என்ஜினியரிங்கில் சிறப்புப் பட்டம் பெற்ருர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றியபின்னர், இரத்மலானை பொது மராமரத்து ஆய்வுப் பிரிவிலே ஆராய்ச்சிநிகழ்த்திஞர்.

இவர் சங்கானை கிழக்கைச் சேர்ந்த பொ. முத்துச்சாமி தம்பதிகளின் மகனுவார்.

—

# ஜீவனும்சம் வழக்கில் தீர்ப்பு

வவனியா, செவ்

ஜீவனும்சம்கோரி ஒரு இளம்பெண் வவனியா நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கில் மாதந்தோறும் நூறுரூபா கட்டும்படி நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

இவ்வழக்கில் ஓமந்தை தமிழ்மகாவித்தியாலய ஆசிரியரான சுப்பையா குமாரையாவிடமிருந்து, கொந்தக்காரன் குளம் உடையார் நல்லதம்பியின் புதல்வி பதினேழு வயதுள்ள புஷ்பராணி தாபரிப்பு பணம் கோரியிருந்தார்.

வழக்கு விசாரணையின் போது 64-ம் ஆண்டு மே மாதம் 6-ம் தேதி குமாரையா, சட்டபூர்வமாக புஸ்பராணியை திருமணப்பதிவு செய்து கொண்டார்என்று தெரிவிக்கப்பட்டது.

# இந்துப் பல்கலைக்கழகம்

## பிரதமரை ஜி. ஜி. சந்திப்பார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக்கழகம் நிறுவும் கோரிக்கையை வலியுறுத்தும்பொருட்டு, யாழ்ப்பாண எம். பி. திரு ஜி. ஜி. பொன்னம்பலம், பிரதமர் டட்லிசேனநாயக்காவையும் கல்விமந்திரி திரு. இரியகொலையையும் அடுத்த வாரம் சந்தித்துப்பேசவிருப்பதாக அறியப்படுகிறது.

பிரதமரை சந்தித்தபின் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில், இந்துப்பல்கலைக்கழகம் சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைபற்றி பொதுமக்களுக்கு அவர் தெரிவிப்பார் எனத் தெரிய வருகிறது.

பிரதமர் டட்லி சேனநாயக்காவை சந்திக்கும் பொழுது, தமிழ்பேசும் மக்களை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்னைகள்பற்றி திரு. பொன்னம்பலம் கூறுவாரென்றும், ஆசிரியர் இடமாற்றப்பிரச்னை, தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வு, கரைச்சி கிராமசபைபிரச்னை ஆகியவை பேச்சுவார்த்தையில் இடம்பெறும் என்றும் தெரியவருகிறது.

ரொடீஷியா

# லண்டன் பேச்சுக்களில் முன்னேற்றம்?

லண்டன், மே 10

ரொடீஷியா நெருக்கடி சம்பந்தமாக ஸ்மித் அரசாங்க பிரதிநிதிகளுக்கும் பிரிட்டிஷ் அரசாங்க அதிகாரிகளுக்கு மிடையே நேற்று ஆரம்பமான பேச்சு வார்த்தைகள் திருப்திகரமான முறையில் நடைபெற்று வருவதாக லண்டன் செய்திகள் கூறுகின்றன.

பேச்சுக்கள், லண்டனிலுள்ள அரசாங்க கட்டடமொன்றில் நடைபெற்று வருகின்றன. ஸ்மித் அரசாங்க தரப்பில் நான்கு பிரதிநிதிகளும் பிரிட்டிஷ் அரசாங்கத் தரப்பில் நான்கு பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்கின்றனர்.

பேச்சுக்களில் சிறிது முன்னேற்றம் கண்டிருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பேச்சுக்கள் முடிவடையும்வரை எந்தவிதமான உத்தியோக பூர்வமான அறிக்கையும் வெளியிடப்படமாட்டாது என்றும் இது சூழ்நிலையைப் பாதிக்கலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது,

### கண்டனம்

இதற்கிடையில் லண்டன் பேச்சுவார்த்தைகள் குறித்து சில ஆபிரிக்க நாட்டுத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

"வெட்கக்கேடான ஒரு செயல்" என்று ஸாம்பிய அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தப் பேச்சுவார்த்தைகளை பிரிட்டன் ஆரம்பித்திருப்பதன் மூலம் ஸ்மித் சட்டவிரோத அரசாங்கத்தை அங்கீகரிக்கும் முதல் நடவடிக்கையை அது மேற்கொண்டுவிட்டது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்,

—

# காஸியஸ் கிளே ஏமாற்றம்!

லண்டன். மே 10

விமானத்தில் லண்டன் நோக்கிவந்துகொண்டிருந்த உலக அதிபார குத்துச்சண்டை வீரர் காஸியஸ் கிளே, எதிர்பாராத விதமாக நேற்று வேறு இடத்தில்இறக்கப்பட்டார்! இதற்குக் காரணம் அவரை ஏற்றிவந்த ஜெட் விமானம் லண்டன் நகர் மீது ஒரு மணி நேரம்வரை வட்டமிட்டுவிட்டு இறுதியில் தனது திசையை மாற்றிக்கொண்டு ஐரிஷ் குடியரசிலுள்ள ஷன்னென் விமான நிலையத்தில் இறங்கியதுதான்!

ஆச்சரியப்படாதீர்கள்! காஸியஸ் கிளே வந்த விமானம், லண்டன் விமான நிலையத்தில் இறங்காததற்குக் காரணம்: மூடுபனி சூழ்ந்திருந்ததுதான்.

பிரிட்டிஷ் குத்துச்சண்டை வீரர் ஹென்றி, காப்பருடன் 'மோதும்' பொருட்டு நேற்று லண்டன் வரவிருந்த உலக அதிபார குத்துச்சண்டை வீரர் காஸியஸ் கிளே, அநேகமாக நாளை இங்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(பி. டி. ஸி.)

—

நாவலர் சந்தி

# படுகொலை வழக்கு

## விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்

நாவலர் சந்தி படுகொலை வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அபூர்வசிங்கம் சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் தேதி சீனிரத்தினம், என். சுப்பிரமணியம், எம். சண்முகம் ஆகியோர் சுப்பிரமணியம்தெய்வேந்திரத்தை நாவலர் சந்திக் கருகில் கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சாரிபில் அட்வகேட் திரு. ரி. கணேசலிங்கம், திருவாளர்கள் வி. செல்லத்துரை, ஆர். விஸ்வ[illegible] சாணையுடன் ஆஜரானார். அட்வகேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் தளையசிங்கம் யோகநாதனின் அனுசரணையுடன் இன்ஸ்பெக்டர் சகாயத்திற்கு உதவியாக வழக்கில் ஆஜரானர்.

மேல்விசாரணையை இம் மாதம் 22-ம் தேதிவரை நீதிபதி ஒத்திவைத்தார்.

# தனக்குத்தானே தீ மூட்டி இளம் பெண் தற்கொலை

## கரவெட்டி கிழக்கில் சம்பவம்

உடுப்பிட்டி. செவ்.

தீயினுல் கோரமாக எரியுண்டு 16 வயது இளம் பெண் ஒருவர் மரணமான பரிதாப சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி கிழக்கில் நடைபெற்றுள்ளது.

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த கவுந்தில் என்னுமிடத்தில் சிதம்பரப்பிள்ளை மகள் சகுந்தலாதேவி அப்பகுதியில் புதுக்குளம் என அழைக்கப்படும் ஒரு குளத்திற்கு அண்மையில் உள்ள பனங்காணிக்குள் தனது உடல்மீது தாமே மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டிக்கொண்டார் என்று பொலிசாரின் விசாரணையின் போது கூறப்பட்டது.

எரிகாயங்களுடன் சகுந்தலாதேவி உடனடியாக மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டாரென்றும் அங்கு டாக்டரிடம் சாட்சியமளித்த சில மணி நேரத்தில் மரணமானுர் என்றும் கூறப்பட்டது. டாக்டரிடம் அவர் தம்மை யாரோ பலவந்தமாகப் பிடித்துத் தீ மூட்டியதாகக் கூறியிருந்தார். சகுந்தலாதேவியின் சாட்சியத்திற்கும் பெற்ரேர்கள் கொடுத்த வாக்குமூலத்திற்குமிடையே வேறுபாடு காணப்பட்டமையால் பொலிசார் சடலத்தை உடனடியாக ஆஸ்பத்திரியில் இருந்து எடுத்துச்செல்ல அனுமதிக்கவில்லை.

பருத்தித்துறை மஜிஸ்டிரேட் திரு. ஜெரூபேர்ட் சில்வா சகுந்தலாதேவிதனக்குத்தானே தீ மூட்டியதாகக் கூறப்படும் பனங்காணிக்கு நேரில் சென்று விசாரணை நடத்திஞர்,

காலஞ்சென்றவரின் தகப்பனர், சகோதரி, மண்ணெண்ணெய் விற்றதாகக்கூறப்படும் கடைச்சொந்தக்காரி ஆகியோர் நீதிபதிக்கு முன்னர் சாட்சியமளித்தனர். தகப்பனர் தமது சாட்சியத்தில் 'தமது மகளின் மரணம் பற்றி வேறு எவரையும் தாம் சந்தேகிக்கவில்லையென்றும் தமக்கும் மகளுக்கும் எவ்வித கோபமும் கிடையாது" என்றும் கூறினர்.

கடைச்சொந்தக்காரி சாட்சியமளிக்கையில், "சகுந்தலாதேவி தம்மிடம் வந்து ஒரு போத்தல் மண்ணெண்ணெய் வாங்கிச்சென்ருர் என்று கூறினர்.

இவ் விசாரணையின்போது காங்கேசன்றுறை உதவி பொலிஸ் அதிபர், பருத்தித்துறைப் பொலிசார் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

மிகநீண்டநேர மரண விசாரணையின் [illegible] பின்னர் திடீர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத்தீர்ப்பளித்தார்.

—

# யாருடையது?

யாழ்ப்பாணம், புதன்

செபமாலையொன்றும் திறப்புக் கோர்வையொன்றும் ஆஸ்பத்திரி வீதியில் திரு. த. தனபாலசிங்கத்தினுல் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உடையவர்கள் தகுந்த அத்தாட்சி காண்பித்துபொருட்களை பெற்றுக்கொள்ளலாம்.

# நேரு நினைவு விழா

பருத்தித்துறை, செவ்.

கரணவாய் தெற்கு கலாபடிப்பக மன்றம் நடத்தவிருக்கும் நேரு நினைவு தின விழாவில் விளையாட்டுப் போட்டிகளுடன் பல கலை நிகழ்ச்சிகளும் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

—

# பிரிட்டிஷ் பிரதமர் இந்தியா வருவார்

புதுடில்லி, மே 10

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் இவ் வருட இறுதியில் பாரதத்துக்கு விஜயம் செய்யவிருக்கிருர். பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அழைப்பின் பேரிலேயே திரு. வில்சன் பாரதம் வரவிருக்கிருர்.

# பயிற்சி பெற்று திரும்பினுர்

வவனியா, புதன்

சர்வதேச சுகாதார ஸ்தாபனம் வழங்கிய சுற்றுப்பிரயாண கல்வித்திட்டத்தின் கீழ் மூன்று மாதகாலம் வெளிநாடு சென்றிருந்த நரம்பு மனநோய் நிபுணர் டாக்டர் ஏ. சிற்றம்பலம் இன்று இலங்கை திரும்பினுர்,

—

கோலாலம்பூர், மே 10

மலேசிய நெருக்கடியைக் குறைப்பதில் இந்தோனேஷியா உண்மையான நோக்கம் கொண்டிருந்தால்உடனடியாக செயலில் இறங்க வேண்டும் என்று மலேசிய பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இன்று, நாளை என்று நாட்களைக் கடத்துவதில் பிரயோசனமில்லை என்றும் பிரச்னையைத் தீர்க்கும் வழிவகைகளை இந்தோனேஷியா கண்டுபிடிக்க வேண்டுமென்றும் அவர் கூறினர்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible]தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி [illegible]-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம்ஆண்டு மே மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈழநாடு வாரமலர்

தமிழாராய்ச்சிக் கட்டுரை—(2)

## தமிழிலக்கிய வளர்ச்சி பற்றி சுப்பிரமணிய பாரதியாரின் கருத்துக்கள்

[பெர்லின் நகரத்து ஹம்போல்ட் பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சியாளரான ஹெல்கா அன்ரன் மலாயா தமிழ் மகாநாட்டில் சமர்ப்பித்த கட்டுரை]



"பாரதியார் தமிழ் நாட்டுக் கவிமட்டுமல்ல. அவர் அகில இந்தியாவுக்கும் சொந்தமானவர். அவருடைய கவிதைகளை எல்லா இந்திய மொழிகளிலும் வெளியிடவேண்டும்'' இவ்வாறு ஜவஹர்லால் நேருவினால் பாராட்டப்பெற்ற சுப்பிரமணிய பாரதியாரின் கவிதா திறமையைப்பற்றி நான் பேச வரவில்லை.

தற்கால தமிழ் இலக்கிய வளர்ச்சிபற்றி அவர் வெளியிட்ட முக்கியமான கருத்துகளை ஆராய்வதே எனது நோக்கம். 20-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இந்தியா முழுவதிலும் தேசியவிடுதலை உணர்ச்சி தோன்றியது. 1905-ம் ஆண்டிலேயே தேசத்திலுள்ள இளம் வாலிபர்களும் நகர்ப்புறங்களிலுள்ள மத்திய வகுப்பினரும் புரட்சிவழியை நாடினர்கள். அரசியலிலும் பொருளாதாரத்திலும் நன்கு அபிவிருத்தியடைந்திருந்த வங்காளத்திலும் மகாராஷ்டிரத்திலுமிருந்து விடுதலை இயக்கம் தமிழ் நாடு போன்ற ஏனைய இடங்களுக்கும் பரவியது. இந்த தேசிய உணர்ச்சியால் ஓர் இலக்கியப் புரட்சியும் தோன்றியது.

தென்னிந்தியாவில் நிர்வாகத்துக்கும் கல்விக்கும் கேந்திரஸ்தானமாக மிளிர்ந்த சென்னைப் பட்டினம் தமிழ் நாட்டின் கலாச்சாரத்துக்கும் மத்தியாய் விளங்கியது. கலை, இலக்கியம் ஆகியவற்றின் உறைவிடம் அரண்மனைகளிலிருந்தும் மடாலயங்களிலிருந்தும் சென்னைக்கு மாறியது. ஆதீன அரண்மனைப் புலவர்களுக்குப் பதிலாக நகர் வாழ் புலவர்களும் எழுத்தாளர்களும் புதிய இலக்கியத்தைச் சிருஷ்டி செய்யத் துவங்கினார்கள். இந்த மாற்றத்தை பாரதியின் வாழ்க்கையிலும் காணலாம். நகர்வாழ் மத்திய வகுப்பினரே தமிழ் நாட்டில் இப்புது இலக்கியத்தை வளர்த்தனர்.

தேசிய விடுதலையும் சமூக சீர்திருத்தமுமே இப்புது இலக்கியத்தின் கருப் பொருள்களாக விளங்கின. முன்னேற்றமான மேனாட்டுக் கருத்துக்கள் இலக்கியத்தில் புகுந்தன.

வங்காளத்தில் பங்கிம் சட்டோபாத்யாய முதலியோரும் தாகூரும் நவீன இலக்கியத்துக்கு வழிகோல, தமிழ் நாட்டில் முதன் முதலாக பாரதியாரே தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் பழமையினின்றும் விடுவித்து அதன் பிற்கால வளர்ச்சிக்கு அஸ்திபாரமிட்டார்.

பாரதியார் முதலில் தமது கவிதைகள் மூலமாகவும் பின்னர் பத்திரிகைகளில் அடிக்கடி தாம் வெளியிட்ட கருத்துக்கள் மூலமாகவும் பொதுமக்களிடத்தும் ஏனைய எழுத்தாளர்களிடத்தும் புத்துணர்ச்சியைத் தட்டி எழுப்பினார். தமிழ் மொழி, இலக்கியம்பற்றிய அவரது சிந்தனைத் துணுக்குகள் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியாகின.

இந்தியாவின் ஏனைய பாகங்களில் கலையும் இலக்கியமும் துரிதமாக வளர்ந்து கொண்டிருக்க தமிழ் நாடு மட்டுமே பின்னடைந்திருப்பதை அவர் அடிக்கடி மிகவும் துயரத்தோடு சுட்டிக் காட்டுவார்.

"இனி, மதுர கலைகளின் நிலைமை தற்காலத்திலே தமிழ் நாட்டிலே எவ்வாறு இருக்கிறதென்பதைப்பற்றியும் அதன் காரணத்தைப் பற்றியும் இங்கே ஆராயப் புகுந்திருக்கின்றோம். தமிழ் நாட்டைப் பற்றிக் கூறுவன இந்தியாவின் மற்றப்பகுதிகளுக்கும் பெரும்பான்மையும் பொருத்தமுடையதாகும். வங்காளத்திலும், மகாராஷ்டிர தேசத்திலும் மேற்படி கலைகளிலே சில சிறிது சிறிது தளிர்த்துவருகின்றனவென்றாலும், இந்தியாவிலுள்ள மற்ற நாடுகளிலெல்லாம் அவை உயிரின்றி நிற்கின்றன. இப்போது திருஷ்டாந்தமாகத் தமிழ் நாட்டை எடுத்துக்கொள்வோம். இங்கே கம்பனைப் போன்ற கவிஞர்கள் இக்காலத்தில் யார் இருக்கின்றார்கள்.''

[illegible] தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு தடையாய்நிற்கும் காரணங்களையும் எடுத்துக் காட்டுகிறார்

"பாண்டித்தியம் உடையோர்களும் பாண்டித்தியம் இருப்பதாக நினைத்துக் கொள்வோர்களும் கவி புனையத் தொடங்கி விடுகிறார்கள். கவித்திறமை இருப்பதற்குப் பாண்டித்தியம் ஒருவாறு அவசிய மென்றாலும் பாண்டித்தியம் இருப்போர்களுக்கெல்லாம் கவிதாசக்தி இருப்பதில்லையென்பதை நம்மவர்கள் மறந்துவிட்டார்கள். இலக்கண வித்வான்கள் கூட தாம் கவி பாடாமல் இருந்தால் இது மதிப்புக் குறைவென்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். இங்ஙனமாக உண்மையான கவிதை இந்நாட்டிலே மறைந்து போய்விட்டது.''

இலக்கியம், மதம், தத்துவம் எல்லாமே இலக்கிய சிருஷ்டிகளாக அப்பொழுது கருதப்பட்டன. இலக்கிய நூல்கள் என்று கூறப்பட்ட பல நூல்களில் இலக்கியச் சுவையே இருக்கவில்லை. தொல்காப்பியர் பெரும் இலக்கண அறிவாளி, ஆனால் புலவரல்ல. நூலறிவையும் கவிதைபுனையும்சக்தியையும் ஒன்றென நினைத்து குழப்பியடிப்பதைக்கண்டு பாரதியார் வருந்தினார். இதுமட்டுமல்ல இலக்கிய வளர்ச்சியைத் தடைசெய்யும் வேறு காரணங்களையும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

"உண்மையான கவிதைக்குத் தமிழ் நாட்டில் தக்க மதிப்பில்லை. இங்கிலீஷ் பாஷையிலிருந்து கதைகள் மொழிபெயர்த்துப் போட்டால் பலர் வாங்கி வாசிக்கிறார்கள். அல்லது இங்கிலீஷ் முறையைத்தழுவி மிகவும் தாழ்ந்த தரத்தில் பலர் புது நாவல்கள் எழுதுகிறார்கள். அவர்களுக்கு கொஞ்சம் லாபமேற்படுகிறது. தமிழில் உண்மையான இலக்கியத் திறமையும் தெய்வ அருளும் பொருந்திய நூல்கள் எழுதுவோர் ஒரு சிலர் தோன்றியிருக்கிறார்கள் இவர்களுடைய தொழிலை அச்சடிப்பாரில்லை அச்சிட்டால் வாங்குவாரில்லை. அருமை தெரியாத ஜனங்கள் புதிய வழியில் ஒரு நூலைக் காணும்போது அதில் ரஸமனுபவிக்க வழியில்லை. இங்கிலீஷ் படித்த 'ஜனத் தலைவர்' காட்டும்வழியையே மற்றவர்கள் பிரமாணமென்று நினைக்கும்படியான

(X-ம் பக்கம் பார்க்க)



''பாதச் சிலம்பு கலீர் கலீர் கலீரென்ன
பைம்பொற் குழைகள் பளீர் பளீர் பளீரென்ன
வேத புராணந் தத்தெய் தத்தெய் தத்தெய்யென்ன ..''

நிர்த்தமிடும் தில்லையனின் முன்னிலையில் அபிநயம் பிடிக்கும் பத்மினி

## படைப்பமே புதிய பாதை

—செ. சுந்தரம்பிள்ளை—

கடும் வெயிற் காலம் காற்றும்
கனலென வீசும் நேரம்
சுடும் துயர் போக்கத் தொண்டு
துயரொடும் செய்யு மேழை
விடும் பெரு மூச்சு வீணில்
வீழ்ந்திடும் போதில்; நாட்டில்
அடும் துயர் போக்க யாரோ
ஆவன செய்வர் அந்தோ!

காட்டினை வெட்டி நல்ல
கழனிகள் ஆக்கிச் செல்வம்
ஈட்டிடும் ஏழை மக்கள்
ஏங்கிடும் நெஞ்சத் தோடு
மாட்டினைப் போலு ழைத்து
மார்க்கமே யின்றி வாழும்
கேட்டினைக் கண்ட பின்னும்
கேட்பவர் யாருமில்லை

என்றெல்லாம் பேசிப் பேசி
இளைத்திட்டோம் இனிமேல் நாட்டில்
சென்றெங்கும் தொழில்கள் செய்வோம்,
தேசத்தைச் சிறக்கச் செய்வோம்
இன்றுள்ள வறுமை தீர
இருக்கின்ற நிலைமை மாற
நன்றெந்தத் தொழிலு மென்போம்
நாணிடோம் நல்ல செய்வோம்.

செல்வர்கள் உண்டிந் நாட்டில்
திறம்படத் தொழில்கள் செய்யப்
பல்வகை வினைஞ ருண்டு
பணத்தினை யிட்ட மட்டும்
நல்லவரில்லை யென்ற
நகைமொழி யிருக்கு தந்தோ
உள்ளவர் உணர்ந்தா ராஞல்
ஓடிடும் தொழில் இல்லாமை.

பள்ளியிற் சென்று பாடம்
படித்தொரு பட்டம் பெற்றுச்
சொல்லரும் துயரத் தோடு
தொழில் வரு மென்று சோர்ந்து
நல்லதோர் பொழுதைப் போக்கும்
நம்மரும் இளைஞர் சேர்ந்து
பல்வகைத் தொழில்கள் செய்யப்
படைப்பமே புதிய பாதை.

குறள் விளக்கம்

## விலங்கொடு அனையர்!

— பொ. சண்முகநாதன் —

அவர் ஒரு சிறந்த அறிஞர். பல நூல்களையும் ஐயந்திரிபற ஆழமாகக் கற்றவர், சிறந்த சிந்தனையாளர். அவர் தனது அறிவையும் சிந்தனையையும் பயன்படுத்தி எமக்கெல்லாம் பல அருமையான நூல்களைத் தந்த சொல் ஏர்உழவர். அது மட்டுமன்றி, அவர் கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப, மொழியும் ஒரு சிறந்த சொற்பொழிவாளரும் கூட!

அப்படியான அந்த அறிஞரைக் காண்பதற்காகவும் அவரது அரிய உரையைக் கேட்பதற்காகவும் அந்த மண்டபம் கற்றவர் கூட்டத்தால் நிறைந்து வழிந்தது. அக் கூட்டத்திடை. எப்படியோ தெரியவில்லை அவனும் வந்து அகப்பட்டுக் கொண்டான்

அறிஞர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். அவர் பேசிய முறை, பேச்சிலே கூறிய கருத்துக்கள், இடையிடை சிந்திய நகைச் சுவைகள், கருத்தை விளக்குவதற்காகக் கையாண்ட உண்மைகள் எல்லாமே மிக நன்ருக இருந்தன. மக்கள் கூட்டம் ஆடாது அசையாது அமைதியாக இருந்து அவரது பேச்சைச் செவிமடுத்தது. அவர் நல்ல கருத்துக்களைச் சொன்ன போதெல்லாம் இவர்கள் கை ஒலி செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர் அவர் நகைச்சுவையைச் சிந்தியபோதெல்லாம் இவர்கள் விழுந்து விழுந்து சிரித்தனர். அவர் ஏற்ற உவமைகளைக் கையாண்டு தனது கருத்தை விளக்கிய போதெல்லாம் இவர்கள் 'ஆகா அற்புதம்' என்றனர்.

ஆனல் இவையெல்லாம் அந்த அவனுக்குமட்டும்எந்த வித உணர்ச்சியையும் உண்டாக்கவில்லை. அவனுக்கு அந்த அறிஞர் என்ன சொல்லுகிருர் என்று புரியவில்லை. இவர்களெல்லாம் எதற்காகக் கையொலியும் சிரிப்பும் ஆகா அற்புதத்திலுமாக இருக்கிருர்கள் என்பதுவும் தெரியவில்லை அவனுக்கும்

(X-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தீபம் ஏற்றியவர்

— எஸ். ஆர். கனகநாயகம் —
(முன்னைநாள் செனட்டர்)

சுதந்திரமில்லாவிட்டால், சமூகத்தைச்செம்மையாக அமைக்கமுடியாது என்று மகாத்மாகாந்தி கூறியதுக்கமைய சுதந்திரத்தின் அவசியத்தை உணர்ந்திருந்தார் சேர் வைத்திலிங்கம் துரைசாமி. இதே நோக்காக உழைத்து அதில் ஓரளவு வெற்றியும் கண்டவர் அவர். வடமாகாணப் பிரதிநிதிகளுள் ஒருவராகச் சென்ற அவர், தாம் பிறந்த ஊருக்கும் நாட்டுக்கும் பெருமைதேடித்தந்து ஓர் அரசியல் ஞானியாக சுதந்திரதீபம் ஏற்றிவைத்து இன்றும் அழியாத ஒளியாகத் திகழ்கிறார்.

சேர் துரைசாமியின் அரசியல் வாழ்க்கை 1921-ம் வருடத்தில் ஆரம்பமாகியது. திருத்தி அமைக்கப்பட்ட அரசாங்க சபைக்கு வடமாகாணத்திலிருந்து ஒரு பிரதிநிதியாகச் சென்றார் அவர். பூரண சுதந்திரம் கோரி அரசாங்க சபையில் பிரேரணை கொண்டுவந்த பெருமை அவரையேசாரும். 1904-ம் வருடத்தில் அத்துவக்காத்தாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட அவர் சட்டத்துறையில் பேராற்றல் பெற்றிருந்ததால் சட்டரீதியான பல பிரச்னைகளுக்கு இலகுவில் தீர்வுகண்டு வந்தார்.

பூரணசுதந்திர மூச்சுசற்று வேகம்கொண்டிருந்த போதிலும் அப்போது ஆட்சி செலுத்தி வந்துகொண்டிருந்த பிரிட்டிஷார் சுதந்திரமாக வாழ இலங்கையர் இன்னும் பக்குவமடையவில்லை யென்ற சாக்குப்போக்குகூறி கமிட்டி முறையைக் கொண்டு வந்தார்கள். இதற்கு மறுப்பாக நாடு பூராவும் பகிஷ்காரக் குரல் எழுந்து வலுவடைந்தது. இறுதியில் வடமாகாணத்தைத்தவிர மன்னார் உட்பட மற்ற மாகாணத்தவர்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் 1934-ம் வருடத்திய இடைத் தேர்தலில் துரைசாமி அவர்கள் போட்டியிடவில்லை. ஆனால் 1936-ம் வருடம் நடைபெற்ற இரண்டாவது (State Council) அரசாங்க சபை தேர்தலில் ஊர்காவற்துறை தொகுதிக்கு போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார். அரசாங்க சபையில் சபாநாயகர்தெரிவின்போது இவருடன் போட்டியிட்ட பிரான்சிஸ்டி' சொய்சா என்பவரைவிட அதிகமான வாக்கு பெற்று சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் இப்பதவியை 11 வருடகாலம் சிறப்பாக பாரபட்சமின்றி மதிப்புடனும் கௌரவத்துடனும் வகித்துவந்தது தமிழ்மக்கள் பெருமைப்படத்தக்க தொன்று. மேவி என்பவர் எழுதிய பார்லிமெண்ட் நடைமுறை விதிகள் எனும் நூலை நன்கு கற்றுத்தெரிந்திருந்த இவர் பல பிரச்னைகளுக்கு நல்ல தீர்வுகளை இலகுவாக அளித்தார். 1937-ம் ஆண்டில்இவரதுதிறமையை மெச்சி பிரிட்டிஷ் மன்னரின் முடிசூட்டு விழாவுக்கு அங்கு இவரை அழைத்துக் கௌரவித்தனர்.

இவரதுதிறமை பாரபட்சமின்மை இவையெல்லாம் சிங்களமக்களிடம் இவருக்கு பெருமதிப்பை தேடித்தந்திருந்தது. அத்தோடு அவருக்கு தென்பகுதியில் நல்ல வரவேற்பு அளிக்கப்பட்டு வந்தது.

## சமூகசேவை

அரசியலில் மட்டுமல்ல, சமூகசேவையில் நல்ல ஈடுபாடு கொண்டு உழைத்தவர் சேர் வைத்திலிங்கம் துரைசாமி. இலங்கையில் மதுவிலக்கு ஏற்படவேண்டுமெனக் குரல் கொடுத்து அதற்கான முயற்சிகள் முற்றிலும் செய்தவர் அவர். முதலாவது உலகயுத்தத்தின் போது பூரண மதுவிலக்கு யாழ்ப்பாணத்தில் கொண்டுவரப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

கல்வித்துறையில் இவர் ஆற்றிய சேவை மகத்தானது. பேராதனையில் பல்கலைக்கழக கல்லூரிஅமைக்கக் காரணமாயிருந்த முக்கியமானவர்களுள் இவரும் ஒருவர். இந்துமதக் கல்வி வளர்ச்சிக்கு இவர் அயராது உழைத்து வந்தார். இந்து மகாசபை இந்து கல்லூரிகள் சபை ஆகியவற்றின் தலைவராக இவர் பணிபுரிந்து இந்துமத மக்களின் கல்வி விருத்திக்கு நல்வழி அமைத்தார். இன்னும் தமிழ்சமூகத்தின் முன்னேற்றத்துக்கு உழைத்துவந்த பல நல்ல இயக்கங்களில் இவர் கலந்து பணிபுரிந்தார்.

கத்தியின்றி இரத்தமின்றி அரசியலில் புதிய நல்லதிருப்பத்தையும் சமூகத்தில் புரட்சிகரமான மாறுதலையும்ஏற்படுத்திய சேர் துரைசாமி அன்று ஏற்றி வைத்த தீபம் இன்று அணையாது மேலும் பிரகாசித்துக் கொண்டிருப்பதை நாம்அநுபவரீதியில் காண்கின்றோம். அவரது தேசிய ஒருமைப் பாட்டுக்குரல் சில காலம் மங்கியிருந்தாலும் இன்று நமது காதுகளில் மீண்டும் கேட்கத் தொடங்கியுள்ளது. இது அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாக அமையும் என்றே கூறலாம்.



ஆறும் ஜோர்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவுக்கு சென்றிருந்த இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் தேவாலய மண்டபத்தில் வரவேற்பளிக்கப்பட்ட போது எடுத்த படம். சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியை கென்ட் கோமகனும் கோமகளும் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# "அகில இலங்கைப் பெருந்தகை"

டாக்டர் என். எம். செய்தி

எனது மிகப் பழைய இனிய நண்பராகிய சேர் வைத்திலிங்கம் துரைசாமியின் ஞாபகார்தமா சில வார்த்தைகள் கூறும்படி 'ஈழநாடு' ஆசிரியர் விடுத்த அழைப்பை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

1936-ம் வருடத்திற்கு முன் நான் சேர் துரைசாமியைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேனேயன்றி அவரை எனக்கு நன்றாகத் தெரியாது. அவரோடு நான் பழக நேர்ந்தது இரண்டாவது அரசாங்க சபையிலாகும். அப்பொழுது சேர்.டி. பி. ஜெயத்திலகா, திரு.டி. எஸ். சேனநாயகா ஆகியோரின் அபேட்சகராகிய திரு. பிரான்ஸிஸ் டி சொய்சாவிற்கும் சமசமாஜ இரட்டையர்கள்என்றுகூறப்பட்ட பிலிப் குணவர்த்தனவும் நானும் ஆதரித்த சேர் வைத்திலிங்கம் துரைசாமிக்கும் இடையே சபாநாயகர் பதவிக்கு கடுமையான போட்டி ஏற்பட்டது. ஒரே ஒரு மேலதிக வாக்கினால் சேர் துரைசாமியை நாங்கள் தெரிவு செய்தோம். இந்த வெற்றி எங்களுடைய விசேஷ முயற்சியினால் மட்டுமல்ல, சேர் துரைசாமியின் மேன்மையான குணதிசயங்களினாலுமே கிட்டியது. அவருடைய சிறந்த குணங்களினாலும் நேர்மையினாலும் அவர் பலருடைய மதிப்பையும் செல்வாக்கையும் பெற்றதினால் அவருக்காக வாக்களிக்கும்படி பல அங்கத்தவர்களை நாம் தூண்டுவதில் எங்களுக்கு ஒருவிதமான கஷ்டமும் இருக்கவில்லை. ஆயினும் அரசாங்க சபைக்கு உள்ளேயும் வெளியேயும் டி.பி.— டி. எஸ். கூட்டுக்கு பலமான ஆதரவு இருந்தபடியினால் அது ஒரு காரசாரமான போட்டா போட்டியாயிருந்தது. நாங்கள் வெற்றி பெற்றோம். ஆனால் அவர்கள் எங்களுக்கு விட்டுக்கொடுத்த கடைசி வெற்றி அது ஒன்றேதான்.

அரசியல் புலிகள் என்று கூறப்பட்ட இவ்விருவரும் நடத்திய கீழ்த்தரமான பிரசாரத்தினால் பல்வேறு நிர்வாகக்கமிட்டிகளிலும் நியாயமான அளவு அங்கத்தவர்களை தெரிவுசெய்ய நாங்கள் எடுத்த முயற்சிகள் யாவும் வியர்த்தமாகின.

சேர் வைத்திலிங்கம் முதலாவதாகவும் கடைசியாகவும் ஓர் அகில இலங்கைப் பெருமகனாராகவிளங்கினார். [illegible] யுள் எப்பொழுகாவது புகுந்ததாக நான் நினைக்கவில்லை. அவரிடம் சாதி, இனம் என்ற வேறுபாடு கிடையாது. எல்லோரையும் மிகவும்நேர்மையாயும் நீதியாகவும் நடத்தினார். நாட்டின்ஜனநாயக சபையில் மிகவும் உயர்ந்த பதவி வகிக்கும் ஒருவர் தமது செல்வாக்கை பாரபட்சமாகவும் வகுப்புவாத அடிப்படையிலும் உபயோகித்திருக்கலாம் ஆனால் அவர் அதைப்பற்றி சிந்திக்கவேயில்லை. அவருடைய கௌரவமான நடையினாலும் நடுநிலைமையினாலும் ஒரு சட்டசபையை நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்கு விதிகளில் அவ க்கிருந்த ஈடு இணையற்ற அறிவினாலும் அவர் சபாநாயகர் ஸ்தானத்தை அலங்கரித்தார். அவரை அங்கத்தவர்கள் எந்த நேரத்திலும் சந்தித்துப்பேச முடிந்தது. எல்லோருக்கும் உற்சாகமும் ஊக்கமும் அளிப்பதாயிருந்தது; ஒரு பெரும் அணையாக விளங்கினார். பாராளுமன்ற விதிகளுக்கும் சட்டங்களுக்கும் புதியவர்களாகிய இளம் அங்கத்தவர்களுக்கு அவர் முக்கியமாக ஆதரவளித்து வந்தார்.

அரசியல் தலைவர் என்ற முறையில் அவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் ஜேம்ஸ் பீரிஸ் முதலியவர்களின் காலத்தைச் சேர்ந்தவர். அவர் மிதவாத பாதையில் லாவகமாக நிதானமாகப் பவனிவந்தார். ஜனநாயக மிதவாதமே அவர்களுடைய குறிக்கோளாயிருந்தது. உயர்ந்த லட்சியங்களைப் பெற்றிருந்தஅவர் ஒற்றுமையான ஓர் இலங்கை இனத்தை உருவாக்க கனவு கண்டார். இந்து கலாசாரத்தின் சிறப்பான அம்சங்கள் யாவும்அவரிடம்பொருந்தியிருந்தன. அவர் இத்தனை வருடங்கள் குடுகுடு கிழவராக வாழமுடிந்தது அவருடைய தீய ஒழுக்கம் தவிர்ந்த நடத்தையினாலேதான். அவருடைய மரணத்தோடு டொனமூர் அரசியல் திட்டத்திற்கு முந்திய காலத்துக்கும் இக்காலத்துக்கும் இடையில்இருந்துவரும் இன்னுமொருதொடர்பு அறுந்து போய்விட்டது. புதிய தலைமுறை தோன்றி எமது நாட்டின் அரசியலில் கலந்து கொள்கின்றது. சேர் வைத்திலிங்கம் துரைசாமி போன்றோர் காட்டிய வழிகளையே நாம் பின்பற்றுகிறோம் என்பதை நாங்கள் மறவாதிருப்பது நியாயமானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் காத்த ஞானத் தாத்தா

ஈழத்தமிழ்நாட்டின் தலைப்பட்டினம், செந்தமிழ் வழங்குந் தனிப் பட்டினம் யாழ்ப்பாணம். ஜனநெருக்கமான, விலைக்குக் காற்றுவாங்கும் பட்டினத்தின் நடுவில் இருதய ஸ்தானத்தில்- ஒரு வீடு, ஒப்பற்ற வீடு. வீட்டுக் கிழவனாரின் நேர்மை, காலந்தவறாமை, உறுதி, நெடும்புகழ் முதலியவற்றை நாட்டுக்குச் சொல்லாமற் சொல்லிக்கொண்டிருக்க அமைந்தாற்போன்று அதன் அயலில் ஒரு கோணத்தே, பட்டினத்தை எடுத்துக் காட்டிக் கொண்டு நிமிர்ந்து, நெடிதுயர்ந்துநிற்கும் மணிக்கூட்டுக்கோபுரம். இவ்வீட்டைப் பலவகையில் மையமாகக் கொண்டு அமைந்தது யாழ்ப்பாணம்.

இடத்தாற் சிறப்பெய்துவோர்தாம் உலகில் பலர்-பலப்பலர். சிலரால், இடம் சிறப்பெய்துதலும் அருமையாக உண்டு. நூற்றாண்டுக்கொருவராக, ஒரொருகால் அருமையாகத் தோற்றும் அச்சிலருள் ஒருவர் அவ்வீட்டுக்கிழவர், சேர் துரைசுவாமி அவர்கள். அவர் பிறந்தவேலணை, கலைபயின்ற கழகங்கள், வாழ்ந்த வீடு, நியாயவாதஞ்செய்த நீதித்தலம், அவரைத்தலைவராகப் பெற்ற யாழ்ப்பாணச் சங்கம், சட்ட நூலறிஞர் சபை, சைவவித்தியா விருத்திச் சங்கம், இந்துக்கல்லூரிப் பரிபாலனசபை, பல்கலைக்கழக இயக்கம், இலங்கை இராச்சிய மந்திரசபை என்றித்தொடக்கத்தன எத்தனையோ பல அவரால் தனி-பெருஞ்சிறப்பெய்தின - மிகு பயன் விளைத்தன.

காந்தியடிகளாரின் யாழ்ப்பாண விஜயத்தின்போது அடிகள் தங்கி நிற்க இயைபாயமைந்தவீடு, சேர் துரைசுவாமி வாழ்ந்த வீடு. அவ்வீட்டின் இருபுறங்களிலும் இரண்டுநெடுவீதிகள் அவற்றுள் ஒன்று, இப்பொழுது மகாத்மாகாந்தி வீதியெனப் பெயர் தாங்கி மிளிருகின்றது. பத்து ஆண்டுகளுக்கு மேலாக, யாழ்ப்பாணப் பக்கம்-ஏன் தமிழ்நாட்டுப் பக்கமே, தலைகாட்டாதிருந்த தேசமுதல்வர் மகாதேசாதிபதிகள் எனப்பட்டோர் 13-4-66 அன்று, வருடப்பிறப்பு முதனாள், நாடே அதிசயிக்க, அவ்வீட்டிற் பிரசன்னமாகி, ஈழங்காத்த ஞானத்தாத்தாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இப்பொழுது வடமாகாணத்து மக்களால் தெரிவு செய்யப்பெறும் பாராளுமன்ற உறுப்பினர் பதின்மூவர். அப்பொழுது 1921-ம் ஆண்டில் இம்மாகாணத்துக்கு ஒரேயொருவராயிருந்த காலத்தே- மக்கள் விரும்பித் தெரிவு செய்த பெருந்தகை சேர் துரைசுவாமி. அந்த 1921-ம் ஆண்டுமுதல் 1947வரை (1931 முதல் மந்திர சபையை வடபகுதி பகிஷ்கரித்திருந்த ஐந்தாண்டு நீங்கலாக) மக்கள் பிரதிநிதியாய், நாட்டுக்கு வழிகாட்டியாய், மக்கள் அனைவரும் தம் வழி நிற்க, நேர்வழியில் தகைசான்ற தலைமைத்திருவினராய் ஒளிகான்றவர் அவர்.

'டொனமூர்' அரசியலமைப்பு ஆட்சிப்பொறுப்பில் மக்களுக்கு-மக்கள் பிரதிநிதிகளுக்கு உரிய பங்கை அளிக்காமையைச் சுதந்திரதாகமும் செல்வாக்கும் மிக்க பிரதிநிதிகள்-வடக்குத்தெற்கென்னும் திசைவேறுபாடின்றி-எல்லாரும் அவ்வரசியலைஏற்காது விடுவதென்றும் அவ்வித பகிஷ்கரிப்பை அரசினருக்கு உலகறிய எடுத்துக் காட்டுவதற்கு நாடுமுழுவதும் தேர்தலைப் பகிஷ்கரிப்பதே தக்கதென வும் ஒரேமுகமாக முடிவு செய்தனர். இம்முடிவை மக்களுக்கு எடுத்துச்சொல்வதோடு, அவர்களுக்கு சுதந்திர விழிப்புணர்ச்சியை எழுப்புவதற்குமாக, இலங்கையெங்கும் பலபெருங்கூட்டங்கள் அடுத்தடுத்து நிகழலாயின. இவற்றிற்கெல்லாம் மூச்சாயிருந்தவர் துரைசுவாமி. தென் இலங்கையில் நிகழ்ந்தபலகூட்டங்களிலும் நம் சிங்களச்சகோதரர் பல்லாயிரவர் நடுவில் தலைமை வீற நின்று, சுதந்திரநாதஞ் செய்து துயிலுணர்த்திய தனி முதல் தமிழ் மகன் அவர்.

தென்னிலங்கை எக்காரணத்தாலோ பின்பு பகிஷ்காரத்தினின்று மெல்ல நழுவித் தலையை உள்ளே இழுக்கவும், தாம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்படத் தக்க நிலையிலிருந்தும், அதனை மதியாது ஒதுக்கிவிட்டு, வடபகுதி ஒத்துழையாமைஇயக்கத்திற்கு உயிர்ப்பூட்டி, தலைமை ஏற்று, வழிநடத்தி ஜயம் கொண்டார். காலமறிந்து அப்பொழுதுஅவரால் இடப்பட்ட வித்தின்விளைவுதான் அடிமைகளாயிருந்த நாம் மன்னராக மாறுவதற்கு ஒருவகையில் ஏதுவாயமைந்தது.

யோகர்சுவாமிகளின் அன்புக்கும் ஆசிக்கும் உரியருள் முதன்மையானவர் துரை சுவாமி. இந்த சுவாமியை ஜெர்மன் சுவாமியார் முகாலோபனஞ் செய்தசமயத்து 'நீங்கள் விரும்பும் புத்தகங்களுள் முதன்மையானதுஎது' என்பது அவர் வினவிய வினா. இயல்பாயமைந்த நகைமுகத்துடனும்அடக்கத்துடனும் இந்தச் சுவாமி இறுத்தவிடை 'இந்த அகண்ட உலகம்' என்பது. அந்தச் சுவாமி அத்துடன் அமர்ந்துவிடவில்லை. 'அடுத்தபடி' என்பது அந்தச் சுவாமியாரின் வினா 'பென்னம் பெரிய உலகம். முதலும், அடுத்தபடியும், முடிவும் அதுதான்' என்பது இந்தச் சுவாமியின் விடை. வியப்பு மேலிட்ட ஜெர்மன் சுவாமியார் இந்நிகழ்வைப் பத்தியுள்ளமுடையாரொருவருக்கு வெளியிட, பத்திரிகையோடு தொடர்புபட்ட அப்பக்தியுள்ளம் பத்திரிகையில் பலரறிய வெளியிட்டது.

யாழ்ப்பாண நீதிஸ்தலத்தில் கால் [illegible] களுக்குமேலாக நியாயவாதம் செய்வதில் தமக்கு ஒப்பாரொருவருமின்றி முதன்மைமீறி நின்ற ஆண்டகை துரைசுவாமி. 1947-ம் ஆண்டு இலங்கை இராச்சிய மந்திர சபைத் தலைமைப் பீடத்தை அணிசெய்வதினின்றும் விலகியபின் பொதுஜனத்தொடர்பினின்றும் மெல்லமெல்ல ஒதுங்கி ஞானச்சுடராய யோகர் சுவாமிகள் வழியில் சாந்திபெற விழைந்தது அவருள்ளம் அறிவுடை உலகு தனக்குத்தெளிவாகாத, வழிபுலனாகாத சமயங்களிலெல்லாம் தன் ஆற்றாமையால், அவர் ஒதுங்கி நிற்பதை ஆற்றாது, தெளிவுறுத்தி வழிப்படுத்தும்படி பணிவுடன் அவர்தம்மை நாடிப் பயன்பெற்ற சம்பவங்கள் மிகப்பல.

சேர் பொன்இராமநாதன் அவர்களின் மதிப்புக்குரிய மிகச் சிலருள் நம் துரைசுவாமி ஒருவர். அவர்வழியில் இவர் இளவல் - இளவரசு. இவரை அவர் அன்பாகவும் செல்லமாகவும் வாயூறத் துரை என்று அழைப்பது வழக்கம்.

இலங்கைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பெறுங் காலத்தே அஃது அமைய வேண்டிய இடம் குறித்து நிகழ்ந்தநீண்டபெருப்போர் சுவைபயக்கும்பெரும்சொற்போர், ஈழத்தே மிகப் பிரசித்தமானது. மாணவர் பலர் இலகுவாகப் பங்குபற்றிப் பட்டம் பெறுவதற்கு கொழும்புதான் வாய்ப்பானதென்பது ஒரு கட்சி. இக்கட்சிக்குத் தலைமைதாங்கித் தர்க்கவாதஞ் செய்துநின்றவர் சேர் பொன். அவர்கள். பட்டம்பெறுவோர் சிலராயினும் அவர்பால் பட்டத்திற்குரிய ஒளி துலங்கிக் கொண்டிருத்தற்குப் பேராதனைச் சூழ்நிலைதான் பொருத்தமானதென்னும்எதிர்க்கட்சிக்கு மடிகட்டி, முன்நின்று, வழிநடத்தி வெற்றியும் கண்டவர் நம் துரை. இஃதொன்று. தேசபிதா எனப்படும் சேனநாயக்காதம் செல்வாக்குமிக்கசமயத்தில்ஐக்கியதேசியக்கட்சியை அமைக்கும்கால், மந்திர சபைத்தலைமைப் பீடத்திலிருந்தசேர் துரைசுவாமியையும் அதிற்சேர்த்து மிகு [illegible] நின்றலுந் தாம் பிணிப்புறுவதைத் தமது பீடம் - பீடத்தியல்பு அனுமதிக்காதெனச் [illegible]வாமி அன்று மறுத்தமையும் இன்னொன்று தம் மனத்தோடுபடாத எதையும், எவர் பொருட்டும், எச்சந்தர்ப்பத்திலும், எந்நிலையிலும் ஏற்றுக்கொள்ளாது நிமிர்ந்து நிற்கும் துணிவுஇவர் சிறப்பியல்புகளுள் விளக்குறுவதொன்று.

1938-ம் ஆண்டு தீவுப்பகுதி-வலிமேற்குத் தொகுதி, இலங்கை இராச்சிய மந்திர சபைக்குத் தனது பிரதிநிதியாக, போட்டியின்றி - ஏகமனதாக துரையைத்தெரிவு செய்தது- தெரிவு செய்து பெருமைபெற்றது. ஏனைய தொகுதிகளின் தேர்வு எல்லாம் முடிந்தபின் மந்திர சபை கூடுமுன், இவர் கொழும்புசென்றுஅங்கு தங்கிநிற்கும் சமயத்தே, இவர் தகைமையைக் கேள்வியாலறிந்த ஆர்வமிக்க சமரக்கொடியை உள்ளிட்ட பிரதிநிதிகள் சிலர் இப்பெரியாரை அணுகி, அவரது, மதி நுட்பம், கல்வியாற்றல், சிறப்பியல்புகளை ஒருவகையால் உணர்ந்து மந்திர சபைத்தலைமைப்பீடத்திற்கு இவரெனத் தாம் தெரிந்துகொண்டும், அதனை இவற்கு வெளிப்படுத்தாது, இவருக்கு கருத்துவேறு ஒரு வகையாக இருப்பின், அதனோடு மாறுகொள்ளக் கூடாதென்னும் மதிப்போடு கூடிய அச்சமுடையோராய் இவர் கருத்தை அறியக் குறிப்பாகமுயலாநின்றனர். இந்நிலை உணர்ந்து "சபையின் அடிநிலையிலிருந்து உச்சிவரையுள்ள இடங்கள்பலவற்றில் எவ்விடம் எனக்கு அமைகின்றதோ, என்னை ஏற்றுக்கொள்ளுகின்றதோ அவ்விடத்தில் மனநிறைவுடன் நின்று, என்னாலியலும்வகையாலெல்லாம் சேவைசெய்யப்பூரண ஆயத்தம்" என்றார் ஈழக்காவலர். இம்மாண்பினரைத் தலைவராகக் கொண்டு, மந்திரசபை தான் மாண்புற்றது மாத்திரமன்றி ஈழத்தையுமே மாண்புறச் செய்தது.

எந்நிலையினும், எவ்வகையினும், எக்காரணங்கொண்டும் மொழி, மதம், இனம் முதலாயவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சி அமைத்தல் ஆகாது என்பது இவர் கருத்து. அன்பும் அறிவும் துணையாக இலங்கா தேவியின் மக்கள் அனைவரும். தாம் ஒரு வயிற்றினரென்பதை உணர்ந்து மனமொத்து நீதிவழியில் நன்கு வாழவேண்டுமென்பதே இவர் தம் அசைவற்ற வலிமிக்க கொள்கை. இக்குறிக்கோளிலிருந்து எச்சந்தர்ப்பத்திலும், அணுத்துணையும் திறம்பாச் செம்மல் இவர்.

கலாநிதி என். எம். பெரேரா நம் ஈழத்தாத்தாவின் மனத்துக்கினியாருள் ஒருவர். இவரும், இவர் போன்றோர் இன்னும் பலரும் காலத்துக்குக்காலம் இச்சான்றோரை அணுகித் தெளிவடைதலும், மனச்சாந்தி பெறுதல் வழக்கம். சமீபத்தே ஒருகால், "உங்கள் காலத்தை எப்படிக் கழிக்கிறீர்கள்" என்றார் கலாநிதி என் எம். "என்ன; காலத்தை நானு கழிக்கிறேன்?" அதுவல்லவா என்னை இழுத்துக் கழித்துக்கொண்டிருக்கிறது" என்று நயம் கூரப் பளிச்சென்று விடையிறுத்து மகிழ்ந்தார் துரைசுவாமி.

யாழ்ப்பாணக் கல்லூரியில் மாணவராயிருந்த காலத்தே ஒருமுறை பரிசுக்குரிய பதின்மூன்று விளையாட்டுக்களுள் ஒன்றொழிந்த பன்னிரண்டு விளையாட்டுக்குரிய முதற் பரிசுகளும் இவ்விளைஞருக்கே கிடைத்தன. அதனால் மற்றெவரிலும் இவர் மேம்பட்டு நின்றதினால், மறுமுறை பரிசுக்குரிய விளையாட்டுக்களில் பங்குபற்றுவதினின்றும் விலக்கப் பெற்றார்.

நீண்டகாலம் தமிழும், தமிழரும், சைவமும், ஈழமும் சிறப்புற வாழ்வாங்கு வாழ்ந்த அப்புண்ணியமூர்த்தியின் சிந்தனை என்றும் உயர்வானது. மதிநுண்மையும், நேர்மையும், துணிவும், பிரசித்தமானவை. நீண்ட நாசி, ஏறு நெற்றி, ஒளிகாணும் பற்கள், நகைதவழும் முகம், நெடுங்கைகள், பீடு நடை, அடங்கி அமைந்தொழுகச் செய்யும் ஆற்றல்மிகு நோக்கு, மதிநுண்மை பிறக்கும் பொருள் செறிவுரை, காய்தலுவத்தலின்றிச் சீர்தூக்கும் இயல்பு, அஞ்சாமை, ஏக்கறாமை, உயர்வுள்ளும் உள்ளம், இன்ன

(V-ம் பக்கம் பார்க்க)



அரசாங்க சபையில் சபாநாயகர் கூடத்தில் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி அமர்ந்திருக்கையில் எடுத்த படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "என் நினைவிலிருக்கும் அவரது பதவிக் காலம்"

## திரு. ஜி ஜி. பொன்னம்பலம்

(யாழ்ப்பாணப்பிரதிநிதி)

ஓர் அரசியல்வாதியாகவும், கல்விமானாகவும், தமிழ் சமூகம், தேசம் இரண்டுக்கும் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ஆற்றிய பணிகள் இனியும் நீண்ட நெடுங்காலம் மக்கள் நினைவிலிருக்கும்.

சேர் துரைசுவாமி பத்து ஆண்டுகாலவரை சபாநாயகராக அரசாங்க சபை நடவடிக்கைகளுக்குத் திறமையுடன் தலைமை தாங்கிய அந்தக்காலம் எனக்கு நன்கு நினைவிலிருக்கிறது. பலராலும்பெரிதும் விரும்பப்பட்ட சேர் பிரான்சிஸ் மொலமூரே வகித்த இப்பதவி அவரது நுட்பம், அறிவாற்றல்களினுல் புகழ்பெற்றிருந்தது. அத்தகையதோர் ஸ்தானத்தை சேர் மொலமூரேக்குப்பின் இன்னெருவர் கைப்பற்றுவதென்பது அத்தனை இலகுவானதன்று. இருந்தும், சேர் துரைசுவாமி அதனைச் சாதித்துவிட்டார். 1947-ல் அரசாங்க சபை கலைக்கப்பட்டபோது, பாராளுமன்ற சபை நடவடிக்கைகளில் இதர சாம்ராச்சிய நாடுகளுக்குப் பின்நிற்காத வகையில் ஒரு வரலாற்றையே நிலைநாட்டிவிட்டார் என்று சேர் துரைசுவாமி சபைக்குள்ளும் வெளியேயும் எங்கும் பாராட்டப்பட்டார். கஷ்ட நிஷ்டூரங்கள் இருந்தபோதிலும்காலத்துக்குக்காலம் ஒன்றன்பின் ஒன்ருய் அமைக்கப்பட்ட பாராளுமன்ற சபைகளின் நிர்வாகம் எங்கள் நாட்டில் நன்ருகவே நடைபெற்று வந்திருக்கிறது. இத்தகு சபாநாயகர்களே பெரிதளவு காரண புருஷர்களாவர். இவர்கள் வரிசையில் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமிக்கு ஒரு சிறந்த ஸ்தானம் உண்டு. அன்பும், கருணையும், இங்கிதமும் வாய்ந்த ஒரு பெரியார் அவர்.

## 'நினைவுச்சின்னம்'

— யாழ் நகரமேயர்

ஈழத்தின்தேசியமுன்னேற்றத்திற்கும், தமிழ்பேசும்மக்களின் சுதந்திரநல்வாழ்வுக்கும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தபெருந்தகை சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்கள்.

இலங்கையின் அரசியல் அமைப்பில் ஜனநாயகம் நிலைக்க வேண்டும் என்பதற்காகவும், தேசியஇனங்களுக்கிடையே ஒற்றுமையும் ஐக்கியமும் பரஸ்பரம் நிலவ வேண்டும்என்பதற்காகவும், பரந்த நோக்கோடு சபாநாயகர் பதவி வகித்த முதல் இலங்கையர் என்பதை எவரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

அரசியல் திட்ட எதிர்ப்பு இயக்கம், ஒத்துழையாமை இயக்கம், பலகலைக்கழக இயக்கம், இந்துசமய, சமூக அபிவிருத்தி இயக்கம், தமிழர் ஐக்கியமுன்னணி இயக்கம், சாம்ராச்சியப்பாராளுமன்ற உறுப்பினர்கள் இயக்கம் முதலான பல்வேறுதரப்பட்ட இயக்கங்களில் அரசியல், கட்சி, மதம், இனம் என்ற விருப்பு வெறுப்பு எதுவுமில்லாது தனக்கென வொரு தனியான கொள்கையுடன் வெற்றிகரமாகத் தலைமைதாங்கியவர். அடக்கமுடன் அரும்பணிகள் பல புரிந்தார். இவரது நீங்காத சேவை என்றும் நினைவில் இருக்க பாராளுமன்றப் பிரமுகர்கள் நினைவுச்சின்னம் அமைக்கநடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று தமிழ் பேசும் மக்கள்சார்பில் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

## 'சேவை செய்த குடும்பம்'

பொதுமக்களின் நன்மதிப்பைப்பெற்ற ஓர் இஞ்சினியராக இருந்த வைத்திலிங்கம் வட்டுக்கோட்டைக்கு அணித்தாகவுள்ள அராலியூரைச்சேர்ந்தவர். வைத்திலிங்கத்தின் ஐந்து பிள்ளைகளில் இரண்டாவது மகன் தான்துரைசுவாமி. மூத்தபுதல்வர் விஜயரத்தினம்மலாயாவில்அரசாங்க சேவையில் பணியாற்றினுர். அடுத்த மூன்று புதல்வர்களான பொன்னுத்துரை, இரத்தினகோபால், இராஜகோபால் என்போர் தந்தை வழியில் அவருக்குப் பின் இஞ்ஜினியர்களாகவே மலாயாவில் பணிபுரிந்தார்கள். கடைசி இருவரும்இரட்டைப்பிள்ளைகளாகப் பிறந்தவர்கள். இவர்கள் மலாயாவிலிருந்து திரும்பியபின் இலங்கையில் பணிபுரிந்தார்கள். திரு. இரத்தினகோபால் யாழ்ப்பாணம் நகரசபையில் இஞ்ஜினியரானுர். திரு. இராஜகோபால் தென்னிந்தியாவில் மண்டபம் கேம்பில் இஞ்ஜினியரானுர். யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி கட்டட அமைப்புக்கு மாதிரிப்படம் வரைந்து உதவியவர் திரு. பொன்னுத்துரை.

—த. முத்துசாமிப்பிள்ளை, வழக்கறிஞர்.

## ஈழம் காத்த தாத்தா

(III-ம் பக்கத்தொடர்ச்சி)

இன்ன வாய்ந்த தொண்ணூற்றிராட்டைப் பராயத்து இளைஞர் நம் ஈழத்தண்ணல்.

மொழி, மதம் முதலிய பேதவுணர்வின்றி மக்கள் துயரம் தம் துன்பமென மதித்து, சிந்தித்து, வழி தெரிந்து ஒல்லும் வகையாலெல்லாம் விரைந்துதவி நிறைவு கண்டவர் இவர். இவரால் ஒளிபெற்றவர் பல்லாயிரவர். ஒளி பெற்றவை எண்ணிலடங்கா. உதவியும் செய்துவிட்டு தாமேதொன்றும் அறியார்போல் அடங்கியிருப்பதும், உதவி பெற்ருேர் உண்மை தெரிந்து முன் நின்று நன்றியைப் புலப்படுத்த முற்படினும் 'காகமிருக்க பனம்பழம் விழுந்தாற்போன்றது என் தொடர்பு'' என அமைதி பெற நயஞ்சொட்ட இன்சொல் சொல்லுவதும் இவர்க்கே தனியுரிமையானது; வேறெங்கும் காணுதது- காணமுடியாதது.

பாராளுமன்றத்தே பழம் பெருந்தலைவரின் பிரிவு குறித்த நிகழ்ச்சியில் ஆர்வத்தோடு கலந்துகொண்ட கலாநிதி என். எம்., பாராளுமன்றம் இப்பாராட்டுரையுடன் அமைந்துவிடாது, இவர் நினைவு குறித்து வேறும் யாதாயினும் செய்வதற்குச் சிந்தித்தாலோ என்று சிந்திக்கத்தக்கார் சிந்தனையைத் தூண்டும் வகையில், தம் பாராட்டுரையைச் சிந்தனையோடு முடித்தமை சிந்திக்கத்தக்கது; சிந்திக்கவேண்டியது.

—'ஓரன்பன்'




கடிதக் கனிகள் (கடிதங்களின் தொகுப்பு) தொகுப்பாளன்:- தமிழ் ஊழியன்; கிடைக்குமிடம்:- அண்ணமலைப் பல்கலைக் கழகக் கூட்டுறவுப் பண்டசாலை, அண்ணுமலைநகர். விலை:-ரூ 3-00

சின்னஞ்சிறு வயதிலேயே தமிழ் அழகில் ஈடுபட்டுத் தமிழுக்குத் தன்னைக் கொடுத்தவர் தமிழ் ஊழியன். சிறந்த பேச்சாளரும் எழுத்தாளருமாகத் திகழும் தமிழ் ஊழியன் கவிதைக் கனிகள், கட்டுரைக் கனிகளை அடுத்து கடிதக் கனிகளைத் தொகுத்து நம்மிடம் தந்திருக்கிருர். பசுமையான மாணவ உள்ளங்களின் சிந்தனைக்குவியல்களே இக்கடிதக் கனிகள்,

பேரறிஞர் மு. வ. இந்நூலின் அணிந்துரை இறுதியில், 'கடிதக் கனிகள்' படிப்போரை இனிய தமிழ்ச் சோலைக்கு அழைத்துச் சென்று அரிய கற்பனை விருந்து அளிக்கும் வெளியீடு எனத் தமிழகம் வரவேற்கும் என தாம் நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார். பஞ்சாப்பைச் சேர்ந்த திரு. பலதேவ் ராஜ் குப்தா கன்னித் தமிழில் அம்மாவிற்கு எழுதிய கடிதத்தில் தமிழின் வனப்பையும், தமிழக இயற்கை அழகையும், தமிழ் மக்களின் பண்பாடு, கலாச்சாரத்தையும் கவினுக எளிய தமிழில் எழுதியுள்ளார். 'அம்மா வென்ற தமிழ் ஒலியமைப்போடு உங்களை நினைக்கும்தோறும் என் உள்ளத்தில் சுமை நீங்கி, அமைதியின்பம் என் உடலெங்கும் பொங்குகின்றது.

'தமிழர்கள் அறிவாளிகள் மட்டுமல்ல. மிகமிகப் பொறுமைசாலிகளும் கூட பொறுப்புள்ளவர்களாக விளங்கும் இவர்கள் ஆர்ப்பாட்டத்திலோ, ஆரவாரத்திலோ, இறங்கிவிட்டால் கொந்தளிக்கும் கடலும் குமுறும் எரிமலையும் இவர்களிடம் உடனே தோற்றுப்போகும்' என வரைகிருர் பலதேவ் ராஜ்குப்தா.

'அறிவுள்ள மனிதன் எவனும் இயற்கையிலே மறைந்து வதியும் இறைவனை அறியாமல் இருப்பது கூடாதகாரியம். 'கடவுள் பக்தியை அழிப்பவன் உண்மைத் தேசபக்தன் இல்லை.'

—வாஷிங்டன்

'மதம் இல்லாத மக்களை துப்பாக்கி முனையில்தான் ஆளமுடியும்.'

—நெப்போலியன்.

'மதம் இருந்தும் மக்கள் இவ்வாறு கயவர்களாக வாழ்ந்தால் மதம் இல்லாவிடில் இவர்கள் எப்படியிருப்பார்களோ?'

—பெஞ்சமின்பிராங்கிளின்

இவைபோன்ற பல அறிஞர்களின் கருத்துக்களை எடுத்துக்காட்டி நாத்திகக் கொள்கைகளால் ஏற்படும் தீமைகளை நண்பர்களுக்கு எழுதும் மடல்மூலம்விளக்குகிருர் புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம். உண்மை, நன்மை, தூய்மை உடையவர்களாய்வாழ்வில்ஒருகுறிக்கோளுடன் வாழ சமயபக்தி அவசியம் என்பதை அவர் மேலும் அக்கடிதத்தில் வற்புறுத்தியிருக்கிருர்.

இயற்கை, கவிதை, கலை, காதல், அரசியல், தமிழ் போன்ற பல்வேறுதுறைகளை வர்ணிக்கும் பல்வேறு உள்ளங்களில் பொங்கியெழும் புதுக்கருத்துக்களை இக்கடிதக் கனிகளில் நாம் கண்டு சுவைக்கலாம்.

—பூரணி

## நோயும் சிகிச்சையும்

# சந்து வாதம்

மனிதர்களின் கை, கால், பெருவிரல்களில்காணுகின்ற ஒரு பிரதான வாதத்தை சந்துவாதம். வாதசூலை, விரல் வாதம், வாத இரத்தம், அங்குஷ்ட வாதம் என்று பல பெயர்களால் அழைக்கின்ருர்கள்.

இந்தச் சந்துவாதம் என்னும் நோயானது இரத்தத்தில் அதிக யூரிக் அஸிட் உண்டாவதனுலும் எலும்பு மூட்டுக்களில் சோடியம்-பியூரேஷ் அதிக அளவில் உண்டாவதனுலும் உண்டாகின்றது. இதில் சுரம் அனுசரித்துச் சீரண உறுப்புக்களைக் கெடுத்துவிடுவதுடன் மூத்திரக்காய்களில் வேக்காடும் ஏற்படலாம்.

நோய்க்குக் காரணங்கள்

சந்துவாதம் 18-ம், 19-ம் நூற்றுண்டில் இருந்தது போல இப்பொழுது அவ்வளவு கடுமையாக இல்லை ஆனுல் நாட்பட்ட இந்நோய் சாதாரணமாக இருந்து கொண்டுதான் வருகிறது. சீதோஷ்ணம், அமிதஉணவு,

— க. வேல்மணி —

மதுபானம், எளிதில் ஜீரணமாகக்கூடாத தன்மையுள்ள உணவுகளைச் சாப்பிடுவதனுலும், உலர்ந்துபோன தாமரைக்கிழங்குகளை மிதமிஞ்சி உபயோகிப்பதனுலும், கோபம், பகலில் தூங்குதல், இரவில் கண் விழிப்பதனுலும், யானை, குதிரை, ஒட்டகம் இவற்றின்மீது அதிகமாகச்சவாரி செய்வோருக்கும், றிக்சோ இழுப்பவர்கள், பொதி சுமப்போருக்கும் இந்நோய்அதிகமாக உண்டாகிறது.

முப்பது, நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத்தான் இந்நோய் ஏற்படுகிறது. இந்நோய் வாத நோயாகக் கருதப்பட்டாலும் இது அவற்றைப்போலல்லாது வேறுவகையான உடல் கோளாறுகளையும் உண்டாக்குகிறது. உதாரணமாக மூத்திரக்காய்களில் வேக்காடு. ஆனுல் இதைவிட முக்கியமானது மூட்டுக்களில் வீக்கம் தோன்றுவதும் அவற்ருலே சோடியம்-பியூரேட் சேர்ந்திருப்பதனுலேயே சந்துவாதம் என்று சொல்லப்படுகின்றது.

முக்கியமாகநோயாளியின் காலின்பெருவிரலிலிருக்கும் பூட்டுபாதிக்கப்படுகிறது. சந்துநோய் இரவிலே தான் தொடங்குகிறது. பெருவிரலில் தாங்கமுடியாத வலி தோன்றுகிறது. அதைச் சுற்றி வீக்கம் தோன்றிப் பூட்டுக்கள் சிவந்து மென்மையாகிவிடுகின்றன. உடலிலே சூடேறிச் சில சமயங்களில் 103 டிகிரி வரை கூட உஷ்ணம் ஏறுகின்றது. பகலில் குறைந்துவிட்டாலும் மீண்டும் இரவில் நோய்க் குறிகள் தோன்றுகின்றன. இந்தநிலைமை ஒரு வாரமோ அதற்கு மேலோ இருக்கலாம். சில குறிப்பிட்ட வேளைகளில் விட்டுவிட்டுவரலாம். மற்றவேளைகளில் வியாதியஸ்தர்கள் அவ்வளவாகக் கஷ்டப்படுவது போல் தோன்ருது.

எலும்புப் பூட்டுக்கள் பல பாதிக்கப்பட்டு அவை பெரிதாக வீங்கி மாறிவிடுகின்றன. கை விரல்கள், கால் விரல்கள் பொதுவாகப்பாதிக்கப்பட்டு, நோய் முற்றிய நிலையில் வேறுபல எலும்புப் பூட்டுக்களும் பாதிக்கக் கூடிய நிலைக்கு வந்துவிடுகிறது. நோய் முற்றிவிட்டால்தான் மூத்திரக்காய் வீக்கமும், இதயநோய் தோன்றுவதும் உணரப்படுகின்றது.

பரிகாரம்

நோய் தீவிரமாக இருக்கும்போது நாம் ஒன்றும் செய்யமுடியாது. வியாதியுள்ளவர்களைத்தொடக்கூட முடியாது. அவனுக்கு அவ்வளவு வலி. ஊசியினுல் குத்துவதுபோன்று விநாடிக்கு ஒருதரம் இருக்கும். வியாதியுள்ளவனின் காலைத்தூக்கி வைத்து சூடான ஒத்தடம் கொடுத்து கம்பளத்தால் பாதிக்கப்பட்ட இடத்தைப் போர்த்திவிடல் வேண்டும். கொழுப்புள்ள உணவுகளைச் சாப்பாட்டில் சேர்த்தல் கூடாது. புத்தம் புதுப்பழங்கள், காய்கறிகள், முதிரைப் பண்டங்கள், பால், முட்டை முதலியன நோயாளிக்குக் கொடுத்தல் வேண்டும்.

நோயாளிக்கு லகுவிரேசனிகள் கொடுத்துமலத்தைப் போக்குதல்வேண்டும். உதாரணமாக திரிபலைச் சூரணம் அல்லது கொன்றைப் புளியையோ கொடுத்தல்வேண்டும் வேதனையுள்ள இடங்களுக்கு மாவிலங்கம் எண்ணையை நன்கு தேய்த்ததன் பின்னர் இலைக்கள்ளியிலையை வாட்டி நோவுள்ள இடங்களின் மேல் போட்டு விடுதல் நல்லது. நோயாளிக்கு அடிக்கடி வெடியுப்புக் கலந்த மூத்திர சுவேத காரிகளைக் கொடுத்தல் வேண்டும். வயிற்றுக் கடுப்பு இவைகள் உண்டாகாமல் அடிக்கடி உள்ளி அவித்த தண்ணீரில் வெள்ளை வெங்காயக்குளிகை - 2 விதம் உரைத்துக் கொடுத்தல் வேண்டும். வேதனையுள்ள இடத்தில் பஞ்சை வைத்துச் சூடாயிருக்கும்படி கட்டிவிட வேண்டும். அபினியாவது பெலடோனுவாவது போல் டீஸில் சேர்த்துக்கட்டலாம். வேதனையுள்ள இடத்திற்கு நன்கு வாட்டிச்சூடான ஊமத்தமிலையைக் கட்டுவதால் வேதனை தணியும். குளிர்ந்த ஜலத்தில் காலையாவது, கையையாவது வைத்தல் கூடாது. ஊறல்வீடுகளில் சீவியம்செய்வதை ஒழித்துவிடவேண்டும்.

பத்தியம்

லகு உணவுகளைச் சாப்பிடுதல் வேண்டும் அரோட்டுமா, உப்புக்கஞ்சி, தேநீர் முதலியவைகளைக் கொடுக்கலாம் சுரம் தணிந்த பிறகு மாமிசரசம், கோழிக்குஞ்சுரசம் முதலியவைகளைக் கொடுத்துவரலாம்.

சந்துவாதரோகம் வராது தடுப்பதற்கு சோம்பலை நிறுத்தி நித்திராசிரமத்தை அனுசரித்து அடிக்கடி லகு விரோசனிகளைக் கொடுப்பதாலும் மூட்டுகளில் உள்ள சுண்ணும்புக் கட்டிகளைப் போக்குவதற்கு ஐயோடைட் பொட்டாசியம் கொடுப்பதால் சுண்ணும்புக் கட்டிகளைக் கரைத்துவிடும். ஐயோடைன் மேலுக்குப் பூசலாம்-வியாதி மாறியபின்னர் சௌக்கிய இடங்களில் மாறிக்காலம்கழிப்பது புத்திமான்களுடைய கடமையாகும்.


வைத்தியர்கள் இந்த சந்துவாதவியாதிக்கும் (Gout) கீல்வாத ரோகத்திற்குமிடையில் (Rheumatism) உள்ள வித்தியாசத்தைக் கண்டுகொள்வது எப்படியெனில்-சந்துவாதத்தில் ரத்தத்தில் யூரிக் அஸிட் இருக்கும். வியாதியுண்ட ஸ்தானத்தில் யூரேட்ஆல்ஸோடா உப்பு ஜனித்துநிற்கும். புருஷர்களுக்குமாத்திரம் காணும். கால் பெருவிரல் மொழியில் முதல் காணப்பெறும்.

கீல்வாத ரோகத்தையறிவது: ரத்தம் கெடமாட்டாது. உப்புதேகத்தில் உண்டாகாது. ஆண், பெண் இருபாலாரிடத்தும் அதிக அளவில் உண்டாகிறது. முழங்

(X-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயங்குகிருள் ஒரு மாது!



சரோஜாதேவியின் நிலைகண்டுதான் இப்படி மெல்ல மாகச் சிரிக்கிருரோ எம். ஜி. ஆர்.

## "கலைத்துறையில் தனி நபர் வழிபாட்டுக்கு இடமேயில்லை"

### பானுமதி கூறுகிருர்

"கலையை நபர்களுடன் ஐக்கியப்படுத்திப் பார்ப்பதானது குறிப்பாகசினிமாத் துறையில் மிக ஆபத்தான போக்காகும்" என்று அனுபவமிக்க நடிகையும்பத்மஸ்ரீ பட்டம்பெற்றவருமான பானுமதி கூறியுள்ளார்.

சிறந்த நடிகையாக மட்டுமின்றி சாகித்தியங்களை இயற்றுவதிலும் வீணை வாசிப்பதிலும் நாட்டியமாடுவதிலும், பாடுவதிலும் ஓவியத்திலும் சிறந்துவிளங்கும் பானுமதி மேலும் கூறுகையில் இலாபநோக்குக்காரர்கள் சொந்த இலாபத்துக்காக நிலைமையைப் பயன்படுத்திக் கொள்ளும்போது நுண்கலையின் மதிப்பு இறங்குகிறது என்ருர்.

அவர் மேலும் சொன்னதாவது:

"பொதுவாக நிலவும் கருத்துக்கள் உண்மையான கலையின் வளர்ச்சியைப் பாதிக்க முற்பட்டால் அக்கருத்துக்களிலிருந்து மாறுபட்ட கருத்தைக்கொள்ள எனக்கு உரிமையுள்ளதாகக் கருதுகிறேன். கலையைச் சீரிய கருத்துக்களால் வளப்படுத்தும் விஷயத்தில் கலைதான் பிரதானமாக கருதப்படவேண்டுமே தவிர ஆள் அதற்குப் பின்ஞல்தான் நிற்கவேண்டும்.

"கலையைப் போலவே ஒரு கலைஞர் முதுமை அடைவதில்லை; அல்லது வாழ்க்கையில் அக்கறை இழப்பதில்லை. பழுத்த கலைஞர் ஒருவருக்கு புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கிவைக்கப்படுவதைவிடப் பாதகம் வேறொன்றுமில்லை" என்றும் அவர் சொன்ஞர்.

இந்தியப் படங்களுக்குச் சிறப்பான எதிர்காலம் இருப்பதாக அவர் கருத்துத் தெரிவித்தார்.

இந்தியப் படங்களின் தற்போதைய அரை வேக்காடு போன்ற வளர்ச்சி தற்காலிகமானதே என்றும் படத் தயாரிப்பை செழுமையான கருத்துக்களால் புரட்சிகரமாக்க இளம் படத் தயாரிப்பாளர்கள் முன்வருவர் என்றும் பானுமதி நம்புகிருர். எனவேதான் நிலைமை என்றும் தேங்கி நிற்காது என்று உணருமாறு மிதப்பிலுள்ளவர்களை எச்சரிக்க அவர் விடும்புகிருர்.

ஆந்திராவில் பிறந்தவரான பானுமதி அனுபவமிக்க இயக்குநரான பி. புல்லையா இயக்கிய "வரவிக்ரயம்" என்னும்தெலுங்குப்படத்தில் முதன்முதலாக நடித்து திரையுலகில் பிரவேசித்தார். அவர் இதுவரை 100க்கும் அதிகமான படங்களில் நடித்துள்ளார்.

## எம். என். ராஜம் நடிக்கிருர்

பலகாலமாகத் தமிழ்திரை உலகிலிருந்து மறைந்திருந்த எம். என். ராஜம் மீண்டும் நடிக்கிருர்.

எத்திராஜ் மூவிசார் தயாரிக்கும் 'கமலம், என்ற படத்தில்தான் எம். என். ராஜம் நடித்துவருகிருர்.

இப்படத்தில் முத்துராமன் முக்கிய பாத்திரமேற்று நடிக்கிருர்,

டி, எஸ், பாலையா, தங்கவேலு, வி. கே. ராமசாமி, சச்சு ஆகியோரும் நடிக்கின்றனர்.

## 'இதுதான் உலகம்'

சாதாரணமாகக் கேட்கும் வார்த்தை இது. அதையே தமது படத்தின் பெயராக வைத்துவிட்டார்கள் ஏ. ஆர். பிக்சர்ஸ் என்னும் புதிய திரைப்படக் கம்பனியார். இவர்கள் தயாரிக்க இருக்கும் 'இதுதான் உலகம்' படத்தில் முத்துராமனும், கே. ஆர். விஜயாவும் ஜோடியாக நடிக்கின்றனர், இப்படத்தில் ஆர். எஸ். மனோகர், கே. ஏ. தங்கவேலு, சினிவாசன் ஆகியோரும் நடிக்கின்றனர். இப்படத்தை கே. ரவி டைரக்ட் செய்கிருர்.

## டாக்ஸி டிரைவராக எம். ஜி. ஆர். நடிக்கிருர்

ஸ்ரீமோகன் புரொடக்ஷன்ஸார் தயாரிக்கும் 'இன்ப நிலா' வேகமாக வளர்ந்து வருகிறது. இப்படத்தில் ஜெயலலிதா எம் ஜி இராமச்சந்திரனுடன் இணையாக நடிக்கிருர். எம் ஜி இராமச்சந்திரன் டாக்ஸி டிரைவராகவும், ஜெயலலிதா பூக்காரப் பெண்ணுகவும் இப்படத்தில்தோன்றுகின்றனர்

டாக்ஸி டிரைவர் தன் காதலியான பூக்காரியைத் தினம் சந்தித்துப் பேசுவது வழக்கம். அன்று அப்படி சந்தித்தபோதுபூக்காரிதன்காதலனை டாக்ஸி டிரைவரிடம் கோபித்தாள். "உனக்கு வேறே வேலை என்ன; ரோட்டில் செல்பவர்களை எல்லாம் பார்ப்பாய்" என்ருள் அவள். அதற்கு அவன், ஆமாம் அதுதானே என் வேலை. ரோட்டில் செல்லுபவர்களைப் பார்த்துத்தானே நான் டாக்ஸியை ஓட்ட வேண்டும்" என்று பதில் கூறினன்.

இந்த ரசமான உரையாடல் காட்சி 'இன்ப நிலா' வுக்காகச் சமீபத்தில் படமாக்கப்பட்டது.

## இயல், இசை நாடகம்

"பண்டைக்காலத்தில் நாடகம், மதத் தொடர்புடன் உண்டாயிற்று. ஆடலாலும், பாடலாலும் வேத்தியல், பொதுவியல் என இரு கூருக்கப்பட்டு அரசர்களாலும் ஏனையோராலும் போற்றிப் பேணப்பட்டு வந்தது" இவ்வாறு பத்தமேனி கலைவாணி நாடக மன்றச்செயலாளர் திரு. எஸ். நவரத்தினம் நாடக மன்ற மாதாந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இயல்.இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. இவற்றுள் ஒவ்வொன்றிலும் இலக்கியமும் இலக்கணமும் உண்டு. ஆனுல் இம் மூன்றிற்கும் பொதுவாகச் சில இலக்கணங்களும் உண்டு. இருந்தும் நாடகமே பாமரர்களாலும் இலகுவில் விளங்கக்கூடிய முறையில் இடம்பெற்றிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

திரு. எஸ். தில்லைநாதன் கூறியதாவது:

பண்டைக்காலத்தில் நூல்களைப் படிக்க நேரமில்லாதவர்களுக்கு நல்லறிவு புகட்டும் நோக்கத்துடன் அரசர்களும் கற்றுரும், செல்வந்தர்களும் சேர்ந்து நாடகக்கலையைப் போற்றி கண்மணிபோல் வளர்த்தனர் என்ருர். அவர் மேலும் பேசுகையில், நாடகக்கலை நாகரீகம் படைத்த நாடுகள் ஒவ்வொன்றிலும் கலைகளுள் ஒன்ருக கருதப்பட்டுவருகின்றது என்றும் நல்ல நோக்கத்துடனும் நல்லெண்ணத்துடனும் ஓர் நடிகன் தன் நடிப்புத் திறமையைக் காட்டி நாடகத் தமிழிற்குப் பங்கம் ஏற்படாவண்ணம் மக்கள் வாழ்வைத் திருத்தமுயலவேண்டும் என்றும் கூறினர்.




## பாலாஜி எழுதியுள்ள கதை படமாகிறது

கே. பாலாஜியின் சுஜாதா சினி ஆர்ட்ஸ் நிறுவனம் இரண்டாவதாக எடுக்கவிருக்கும் படத்துக்கான கதையை பாலாஜியே எழுதியிருக்கிருர். 'வீடுவரை உறவு' என்று இப்படத்துக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

இதில் ஜெமினி கணேசன் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகவும், எஸ். வி. ரங்கராவ் அவரது தந்தையாகவும் நடிக்கின்றனர். பாலாஜியின் முதல் படமான 'அண்ணுவின் ஆசையைப் போல் இதில் ஜெமினி கணேசனும் பாலாஜியும் அண்ணன் தம்பியாக நடிப்பர். தாதா மிராசி டைரக்ட் செய்யும் இப்படத்துக்கு கே. வி. மகாதேவன் இசையமைக்கிருர்.

## ஜெயசங்கர்-விஜயா ஜோடி

கார்த்திகேயா பிலிம்ஸ் என்னும் புதிய படநிறுவனம் தாம் தயாரிக்கும் முதல் தயாரிப்பில் ஜெயசங்கரையும், கே. ஆர். விஜயாவையும் ஜோடியாகச் சேர்த்துள்ளனர்.

இப்படத்தில் எஸ். வி. சகஸ்ரநாமம், கல்பனு ஆகியோரும் நடிப்பர்.

பிரபல சிறுகதை எழுத்தாளர் 'பிலஹரி' கதைவசனம் எழுதியுள்ள இப்படத்தின் இசையை எம். எஸ். விஸ்வநாதன் அமைத்துவருகிருர். வின்சன்ட் கமிராவை இயக்குவதுடன் படத்தையும் அவரே டைரக்ட்செய்வார்.

## தம் படங்களை பார்க்க விரும்பாத நடிகர்!

சாதாரணமாகத் தான் நடித்த படங்களை எந்த நடிகரும் பார்க்க விரும்புவார்கள். ஆனுல் பிரபல சோவியத்நடிகர் ஸெர்கோ ஸெகாரீயம்ஸ் தாம் நடித்த படங்களைப் பார்க்க விரும்புவதில்லையாம்.

ரஷ்யாவின் திரைப்பட குணசித்திர நடிகர்திலகம் என்று பெயர்பெற்றுள்ள இவர், இதற்குக் கூறும் காரணம், "நான் ஒவ்வொரு படத்திலும் முற்றிலும் மாறுபட்ட கதாபாத்திரத்தை ஏற்று நடிக்க விரும்புகிறேன். படம் முடிந்து தியேட்டரில் படம் திரையிட்டதும் அதை நான் பார்ப்பது கிடையாது. காரணம். படம் பார்க்கும்பொழுது புதிதாக ஏதாவதொரு கற்பனைஉதிக்கும். அடடா அதைப் படத்தில் சேர்க்காமல் விட்டுவிட்டோமே என்று மனம் துடிக்கும். அதற்காகவே நான் படம் பார்ப்பது கிடையாது. கலையின் எல்லையை யாராலும் பார்த்துவிடமுடியாது. எவ்வளவு நன்ருக நடித்தாலும் அதைவிடச் சிறப்பாக நடிக்க வழியிருக்கிறது" என்ருர் அவர்.

## சுசீலா பாட்டுக்கு நெளஷத் பாராட்டு

நாஞ்சில் புரொடக்ஷன்ஸ் தயாரித்துவரும் பெயரிடப்படாத தமிழ்ப்படம் வேகமாக வளர்ந்துவருகிறது. இப்படத்திற்காகச் சுசீலா பாடிய பாட்டொன்று பதிவு செய்யப்பட்டது. அப்போது அங்கு வந்திருந்த பிரபல இந்திப்பட இசையமைப்பாளரான நெளஷத், சுசிலாவின் குரலினிமையையும் அவர் பாடிய பாட்டின் இனிமையையும் மிகவும் பாராட்டினர். மொழி தெரியாத எனக்கே இந்தப் பாட்டு இவ்வளவு இனிமையாக இருக்கிறதேயென்று அவர் குறிப்பிட்டார். பாட்டுக்கு விஸ்வநாதன் இசையமைத்தார். எம் ஜி இராமச்சந்திரன், சரோஜாதேவி இணையாக நடிக்கும் இப்படம் கே. சங்கர் இயக்க உருவாகிறது.

## சிவாஜிக்கு இரட்டை வேடம்

ஏ. பி. நாகராஜன் தயாரிக்கும் 'சரசுவதி சபதம்' படத்தில் சிவாஜி கணேசன் நாரதராகவும் அறிவுப் புலமைவாய்ந்தவித்தியாபதி என்னும் பாத்திரமாகவும் இரட்டைவேடத்தில் நடிக்கிருர் எனத் தெரிகிறது. இப்படத்தில் சரஸ்வதியாக சாவித்திரி நடிக்கிருர். சாவித்திரியும் சிவாஜியும் கலந்துகொள்ளும் காட்சி ஒன்று அண்மையில் சாரதா படப்பிடிப்பு நிலையத்தில் படமாக்கப்பட்டது. ஏ. பி. நாகராஜன் ... டைரக்ட் செய்...

## ஹிந்திப்படத்தில் விஜயலக்ஷ்மி

தமிழ் நடிகையான விஜயலக்ஷ்மிக்கு இப்போது ஹிந்திப்படங்களில் நல்ல 'சான்ஸ்' கிடைத்து வருகிறது. ஹிந்தியில் தயாராகும் 'அலிபாபாவும் 40 திருடர்களும்' என்ற வர்ணப்படத்தில் நடன நங்கையாக எல். விஜயலக்ஷ்மி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். மற்றும் 'பாதல்' எனும் ஹிந்திப்படத்திலும் அவர் நடித்துவருகிருர். பல தெலுங்கு தமிழ்ப்படங்களிலும் இவர் நடித்துவருகிருர்.

## காலவேகம்

'காலத்தின் நியதியில் நான் நம்பிக்கைகொண்டுள்ளேன். ஆனுல் நமது நல்லகாலம் விரைவில் வருவதற்கு நாம் சில வேலைகளில் ஊக்கம் காட்டவேண்டும்.'

முன்னைநாள் ஈரான் அரசியும் தற்போது நடிகையாக மாறியுள்ளவரு... ...விதம் கூறியுள்ளார்.

## பூமுடிப்பதும் பொட்டுவைப்பதும்...?



பிரபல ஹிந்திநடிகை அநீதா குஹா சம்பூரணராமாயணத்தில்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா

# யானையும் பானையும்

— பவளநாடன் —

## சிறுவர் இலக்கியம்

...சிறுரின் உள்ளங்கள் மிகச் செழிப்பானவை. நல்லவையும் கெட்டவையும் வளரும். நல்லவை வளர்வது உள்ளத்தையும் உடலையும் வளர்க்கும். இவற்றை வளர்க்கும் பண்பு சிறுவர் இலக்கியத்துக்கு உரியது; தேவை.....

சிறுவர் இலக்கியம் படைப்பது இலகுவான காரியமன்று..... இலங்கையில் சிறுவர் இலக்கியத்தில் ஊக்கம் செலுத்துபவர்கள் இலர்... ஈழத்திருநாட்டில் சிறுவர் இலக்கியம் வளரவேயில்லை. இங்கு சிறுவர் இலக்கியம் வளராமைக்குக் காரணங்கள் பல உள. சில காரணங்களைக் குறிப்பிடலாம். எழுத்தாளர்இத்துறையில் கவனஞ் செலுத்துவதில்லை கல்வித்துறையில் உள்ளவர்கள் இலக்கியத்தின் முக்கியத்துவத்தை மறந்திருக்கிறுர்கள். புத்தகப் பிரசுரக்காரர் பட நூல்களை மட்டுமே பதிப்பித்துப்பெரும் பணம் திரட்டுவதில் ஈடுபட்டிருக்கிறுர்கள். சிறுவர்கள் அந்நிய நாகரிகத்தின் சூழலில் வளர்க்கப்பட்டிருக்கிறுர்கள். புதிய சூழலுக்குக் கொண்டுவரப் பெற்றேரும் முயற்சி செய்யவில்லை.

—எம். ஏ. ரஹ்மான் எழுதிய 'இளமைப் பருவத்திலே!' என்ற சிறுவர் இலக்கிய நூல் முன்னுரையிலிருந்து.

மாணிக்கம் அந்தக் கிராமத்தின் பெரியமனிதர். அவரிடம் நிலபுலன்களோ அதிகம். பேராசையும் லோபித் தன்மையுந்தான் அவரின் சீரியகுணங்களாம்.

பெரியதோர் யானையை வளர்த்துவந்தார் வயதில் இளமையென்றாலும் உருவத்தில் அது பெரியது. எல்லோருக்கும் யானையை வாடகை செய்துவந்தார், அவ்வாறு பழக்கப்பட்ட யானைதான் அது. யானையின் வாடகைப்பணம் அவரைப் பெரிய பணக்காரனுக்கிற்று. பொருள் எவ்வளவுதான் சேர்ந்தாலும் போதியளவு உணவை மாணிக்கம்யானைக்குப் போடவில்லை. அவர் லோபி அல்லவா?

பகலிரவு பாராது பாடுபட்டு உழைக்கும் யானையின் உடலில் நாளுக்குநாள் வாட்டம் ஏற்பட்டுவந்தது. ஆனாலும் அது உழைப்பதில் குறைவில்லை. மாணிக்கத்தின் மனம் பூரிக்கும் அளவுக்குப் பணம் பெருகிக்கொண்டே இருந்தது. பணத்தைக்கண்டு உவகைகொள்ளும் அவரின் உள்ளம், உணவின்றி உழைத்துக் கொட்டும் யானையின் உடல் வாட்டத்தைக் கண்டு வருந்தவில்லை.

ஒவ்வொருநாளும் யாராவது வருவார்கள்; யானையைக் கொண்டு செல்வார்கள்; பெரிய பெரிய வேலைகளையெல்லாம் செய்விப்பார்கள். அவர்கள் ஏதாவது மனமிரங்கி உணவுபோட்டால் அந்த யானையும் உண்ணும். இன்றேல் சங்கிலிக் கட்டில் நிற்கும்போது எஜமான் பாணிக்கம் போடும் அரைவயிற்றுக்கும் காணுத இலை குழைகளோடு காலந் தள்ளிவிடும்.

காலம் கரைந்தோடியது. யானையின் வயது இளமையாகவிருந்தும் அதன் உடல் மட்டும் முதுமைத்தோற்றமளித்தது.

ஒருநாள் அயற்கிராமத்து ஏழைக்குடியானவன்ஒருவன் வந்தான் புயற்காற்றினுல் சரிந்துவிழுந்த பெரிய மரங்களையெல்லாம் அகற்றுவதற்காக யானையை வாடகை கேட்டான்.

மாணிக்கத்தின் மகிழ்ச்சிக்கோர் அளவில்லை.எப்போது பணம் வரும் என்று எண்ணுபவரிடம் யானையின்நிலையை உணரமுடியுமா? யானையைக் கொடுத்தார் கந்தன் ஏற்றுக்கொண்டு சென்றுன். இடைவழியில் யானை எப்படியோவிழ்ந்துவிட்டது. அவ்வளவுதான். அது இந்த உலகத்தை விட்டுப்போய் விட்டது.

அந்தக் குடியானவன் துடியாய்த் துடித்தான். என்ன செய்வதென்றறியாமல் பதறினுன். அவன் உண்மையைக் கூறியும் மாணிக்கம் நம்புவதாகத் தெரியவில்லை. சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது என எண்ணிக்கொண்டார்.

அவன் என்னதான் செய்ய முடியும். ஏங்கித்தவித்தான். மாணிக்கமோதனக்கு 'அந்த யானை'தான்வேண்டுமென்று அழுங்குப்பிடியாய் நின்றுர். அல்லது எத்தனையோ ஆயிரம் பொன் கேட்டார். அவனே ஏழை. எப்படிக் கொடுக்க முடியும். கொஞ்சக் காலம் 'தருகிறேன், தருகிறேன்" என்று ஏமாற்றிக் கொண்டேவந்தான். ஆனுல் முடியவில்லை.

ஒருநாள் மாலை...

தன் வீட்டிலிருந்தஓட்டை ஓடிசல் பானைகளையெல்லாம் தன் குடிசைக்கதவின் உட்புறமாக அடுக்கிவைத்தான். கதவிற்கும் நிலைக்கும் சிறிது நீக்கல் இருக்கும்படியாகச் செய்துவிட்டுத் தானும் உள்ளேதூங்கினுன்.

ஒருநாளைக்கு நாறுவேளை தவருது வரும் மாணிக்கம் அன்று மிகக்கோபத்துடன் வந்தார். அவனைப்பலமுறை அழைத்தார். அவன் வெளிவரவில்லை. அவருக்குக் கோபம் வந்துவிட்டது. போன போக்கிலேயே கதவைத் தன் காலால் உதைத்தார்.

ஏற்கனவே உடைந்திருந்த பானைகளெல்லாம் சில்லி சில்லியாக நொறுங்கின.

அவன் எதிர்பார்த்தது நடந்துவிட்டது. வெளியே வந்தான். மாணிக்கம் சீறினுர்.

''எங்கே என்யானை?'' என்றுர் மாணிக்கம்.

''நான் புதுயானைவாங்கித் தருகிறேன்'' என்றுன் ஏழை.

''எனக்கு அந்த யானை தான் வேண்டும்.''

''அப்படியெனில் ஒருநிபந்தனை. இப்போது நீங்கள் உடைத்த பானையெல்லாவற்றையும் தாரும்! பிறகுயானை தருகிறேன்'' என்றுன் சற்று விருப்பான குரலில்.

''சரி, பானைதானே வேண்டும்? புதிது வாங்கித் தரலாம்'' என்றுர் மாணிக்கம்.

''எனக்கும் அந்தப்பானைகள்தான் வேண்டும். புதிது வேண்டாம்'' என்றுன் ஏழை.

வாக்குவாதம் நீடித்தும் முடிவுகிடைக்கவில்லை. தான் விட்ட பிழையை உணர்ந்த மாணிக்கம் மனஞ்சோர்ந்து, வெளியேறினுன். தன்புத்திக் கூர்மையை எண்ணிக் கொண்ட ஏழை நின்று கொண்டிருந்தான்.

## அநாதைச் சிறுவன்

— ச. வே பஞ்சாட்சரம் —

தந்தை தாயர் உடன் பிறந்தோர்
தாமில் லாத போதிலும்-தீன்
தந்து காக்கக் கடவுள் கைகள்
தந்து வைத்தான் போதுமே!

இனத்தவரில் உதவி செய்வோர்
எவரு மற்ற போதிலும்-தீன்
எனக்குத் தந்து வளர்ப்பதற்கு
இந்தக் கைகள் போதுமே!

ஆலை தொழிற் சாலை இல்லை
ஆண்டி என்ற போதிலும்-பல
வேலை பெற்றுத் தர எனக்கு
மிகுந்த நேர்மை போதுமே!

துன்பம் வந்த போதிற்காக்கத்
துணைகள் அற்ற போதிலும் - புவிக்
கின்பம் செய்யும் எனக்கு ஈசன்
இன்னல் கிட்ட விடுவனே?

மாடி வீடு தஞ்சம் இல்லை
வறிஞன் என்ற போதிலும்-தாய்
வீடு வாசல் போலத் தங்க
வேலன் கோயில் போதுமே!

## ஜெர்மனியரின் உடற் பயிற்சி ஆர்வம்

கடந்த நூறு ஆண்டுகளாக ஜெர்மனியில் தேசிய விளையாட்டாகப் போற்றிப் பாதுகாக்கப்படுவது உடற்பயிற்சி, இன்றைக்கும் சுமார் 70 லட்சம் பேர் 'பார் விளையாட்டு' போன்றவைகளை ஊக்குவிக்கும் மேற்கு ஜெர்மன் சங்கத்தின் உறுப்பினர்களாக இருக்கிறுர்கள். வயதானகிழவர்களும்உடற்பயிற்சி விளையாட்டுகளில் தீவிரமாக ஈடுபடுகிறுர்கள். விளையாட்டு வீரக் கிழவர்கள் சுமார் 10,000 பேர ஜெர்மனியில் இருக்கிறுர்கள்.

# கமலாவின் கதை

— க. கணேசலிங்கம் —

நம் நாட்டிலுள்ள அநேகமான மங்கையர்கள் எத்தனையோ ஆசைகளுடன்தான் திருமணம் செய்து கொள்கிறுர்கள். விடுதலைப் பட்சிகளாகக் கணவனுடன் உலகக் காட்சிகளைக் கண்டு களிக்கலாம், ரசிக்கலாம், அனுபவிக்கலாம் என்ற மனம் நிறைந்த கற்பனையோடுதான் மணமாலையை ஏற்றுக்கொள்கின்றுர்கள். ஆனுல்......................

பல வருடங்களின் பின் கமலாவை ஆஸ்பத்திரியில் சந்திக்கவேண்டியிருக்கும் என நான் எதிர்பார்க்கவேயில்லை

வாளிப்பான உடலமைப்பு, புன்சிரிப்புத் தவழ்ந்து கொண்டிருக்கும் களை சொட்டும் முகம், கும்மாளமும் குதூகலமும் நிறைந்து கலகலவென்றிருந்த அவளா இப்படி வாடி வற்றிப்போய் விட்டாள்? அவளது காந்தக் கண்கள் கவர்ச்சி குறைந்து காய்ந்து கிடந்தன.

என்னை அறியாமலே என் கண்கள் கலங்கின.

எப்படியிருந்தவள், எப்படி மாறிவிட்டாள்; எத்தனை காலம்தான் அவள் இப்படி வாழப்போகின்றுளோ? இப்படியொரு கேள்வி என் நெஞ்சில் எழுந்தது.

அவளைப்போல் அவளது தாலியும் மெலிந்திருந்தது. பத்து வருடங்களுக்கு முன் அது அவளது கழுத்தில் மாட்டப்பட்டபோது நான் நேரில் சென்று பார்த்தேன். அதற்குப்பின் இப்பொழுது தான் அவளை மீண்டும் சந்திக்க நேர்ந்தது. 'பத்துத் தங்கப் பவுனும்!' தாலிக் கொடியின் நிறைபற்றி அப்போது கல்யாண வீட்டிலிருந்த ரசிகர்கள் கூட... சிலர் விமர்சித்தது காதில் மெல்லமாக ஒலித்தது. இப்போது அதன் நிறையைப் பார்க்க யாருமே முன்வரமாட்டார்கள். அது அவளது கழுத்தில் கிடந்ததே தெரியவில்லையே. அவளது வாடிய முகத்திலிருந்து அவள் இல்லற வாழ்க்கை எப்படி ஓடியிருக்கிறது என்பது ஓரளவு புலனுகியது. பலகாலம் காணுதிருந்தவளை ஒன்றுமே கேட்காமல் விடுவது சரியில்லை என்ற எண்ணத்தில் அவள் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்த காரணத்தைக் கேட்டேன். அவளது அடக்கமான வார்த்தைகளில் ஆழமான பதில் அடங்கியிருந்தன.

அவள் திருமணமான நாட்களில் பெற்றதெல்லாம் பிள்ளைகள்தான். பத்து வருடங்களில் ஒன்பது பிள்ளைகள். போதாதா? இந்த 'அதிக' செல்வங்கள்தான் அவளை வறுமையாக்கியிருந்தது என்பதை ஊகித்துக் கொண்டேன், இது சம்பந்தமாகத்தான் அவள் இப்பொழுதும் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தாள். இல்லற வாழ்க்கையின் கால் பகுதியிலேயே அவளுக்கு இந்த நிலை. அவள் வாழவேண்டிய வாழ்க்கை எவ்வளவோ தூரம். அதற்குள் இப்படி இளைத்துக் களைத்துவிட்டாள்! நமது சமூகத்தில் திருமணமான பெண்களில் அநேகர் எதிர்த்துப் பேசமுடியாத ஏழைத் தொழிலாளியைப்போல் இருக்கிறுர்கள். இதன் முடிவு தேவைக்கு மிஞ்சிய, வருவாய் ஏற்கமுடியாத பிள்ளைகள். நெஞ்சில் கவலையையும் கையில் பிள்ளைகளையும் சுமக்கவேண்டிய பரிதாப நிலைக்கு ஆளாகின்றனர் இந்தப் பெண்கள்.

இத்தனை பிள்ளைகளைப் பெற்ற குற்றத்துக்காக அந்த முன்யோசனையற்ற தாயை சிலவேளைகளில் அந்தப் பிள்ளைகளின் தந்தை கண்டித்தும் தேவையெனில் ஏற்ற தண்டனை வழங்கியும் அவளைத் திருத்த முற்படுகிறுன். முடிவு கமலாவின் கதைதான்.

கூண்டிற் கிளிவளர்ப்பார்
-இல்லத்தில்
குக்கல் வளர்த்திடுவார்
வேண்டியது தருவார்
-அவற்றின்
விருப்பத்தையறிந்தோ?
மாண்டவர் மாண்ட
பின்னர்-அவரின்
மனைவியின் உளத்தை
ஆண்டையர் காண்ப
தில்லை-ஐயகோ
அடிமைப் பெண்கதியே

— பாரதிதாசன்

நீ கணவனுடைய மனம் அறிந்துகொள்வதில்வல்லவளாகஇருக்கவேண்டும் மனம்தான் வாழ்க்கை. மனம் அறிந்து மகிழ்விக்கத் தெரியாத பெண்கள் அழகு, பண்பு, திறமையெல்லாம் இருந்தும் வாழ்க்கையில் ஏமாந்து துன்புறுகிறுர்கள். அழகும் பண்பும் திறமையும்குறைவாக இருந்தாலும். மனம் அறிந்து நடக்கத்தெரிந்த பெண்கள் வெற்றி பெறுகிறுர்கள்.

— மு. வரதராசன்

# குடும்பச் சுடர்

## திரைப்பட டைரக்டர்கள்

பெண்ணினம் இன்று பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு மின்வேகத்தில் முன்னேறி வருகின்றனர். பிரதம மந்திரிகளாகவும், என் ஜினியர்களாகவும், டாக்டர்களாகவும் இது போன்ற பல்வேறுதுறைகளிலும் ஈடுபட்டு நாட்டு வளர்ச்சியில் நாட்டம் செலுத்திவரும் நங்கையர் குலத்தில்உலகப்புகழ்பெற்ற விரல்விட்டு எண்ணக்கூடிய டைரக்டர்களும் இதோ இருக்கிறுர்கள். பிரெஞ்சுநாட்டைச் சேர்ந்த அக்னிஸ் உர்தா, செக்கோஸ்லோவாகியா வீராஹிதிலோவா போலந்தின் வாந்தா யகுபோவ்ஸ்கா, அமெரிக்க சார்லிகிளார்க், ஸ்வீடன் மேஜெட்டர்லிங், சோவியத் லரிசா ஷெபித்கோ ஆகியோர் இத்தகுசிறந்த டைரக்டர்களாவர்.

— ஆதாரம்: சோவியத்நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

# நெஞ்சில் ஒரு முள்

அன்று வெள்ளிக்கிழமை. அதிகாலை ஐந்தரை மணியிருக்கும். கிரிமலையிலிருக்கும் அனாதை ஆச்சிரமத்தின்முன் கையில் மூட்டைபோல் ஒன்றை ஏந்திக்கொண்டு நின்றாள் ஒரு பெண். அவ்வாச்சிரமத்தின் காரியதரிசிசபாநாதன்விடியுமுன்பே எழுந்தவர் வெளியே போகப் புறப்பட்டார். அவர் தினமும் காலையில் ஒரு மைல் தூரமாவது நடந்துவிட்டுவருவது வழக்கம்.

தலையில்ஒருசிறுதுண்டைக் கட்டிக்கொண்டே வாசல் படிகளில் இறங்கியவர் ''ஐயா!'' என்ற பரிதாபகரமான குரல் வந்த திக்கை நோக்கினார். அவ்வளவு பனியிலும் தலையை மூடாமல் இரு கையிலும் ஏதோ மூட்டைபோல ஒன்றை ஏந்திக்கொண்டு சபாநாதனை நிமிர்ந்துபார்த்துக்கொண்டிருந்தாள் அந்தப்பெண்.

''என்னம்மா வேண்டும்?'' சபாநாதன் கேட்டார்.

''நீங்கள் தானே இந்த ஆச்சிரமத்தின் காரியதரிசி சபாநாதன்?''

''ஆமாம். நீயார்?''-சபாநாதன் வியப்புடன் விசாரித்தார்.

''ஐயா என் பெயர் சரோஜா. நான் உங்களிடம் தான் வந்தேன். எங்கேயோ வெளியே போகிறீர்கள் போலிருக்கிறது. நான் தடுத்து நிறுத்தியதற்காக ஒருவேளை...'' இழுத்தாள் சரோஜா.

''பரவாயில்லையம்மா. உங்களுக்கு என்ன வேண்டும்? ஏன் இப்படிப் பனியில் நிற்கின்றீர்கள்? உள்ளே வாருங்கள்'' என்று சொல்லி உள்ளே திரும்பி நடந்தார் சபாநாதன்.

சரோஜாவின் கையிலிருந்தது வெறும் மூட்டையல்ல என்பதை அது அசைந்து காட்டியது. சபாநாதனைப் பின் தொடர்ந்து உள்ளே சென்றாள் சரோஜா.

உள்ளே சென்ற சபாநாதன் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு சரோஜாவை உட்காரும்படி சைகைகாட்டினார். சரோஜா அங்கிருந்தகட்டிலில் வெளிச்சம் அதிகமாகப்படாத இடத்தில் அமர்ந்துகொண்டாள்.

''என்னால் உங்களுக்கு என்ன ஆகவேண்டும்?'' சபாநாதன் கேட்டார்.

''உங்கள் அனாதை ஆச்சிரமத்தில் சேர்ப்பதற்காக இந்தக் குழந்தையைக் கொண்டு வந்திருக்கின்றேன். இதை ஏற்றுக்கொள்வீர்களா? இதன் பராமரிப்புச்செலவுக்கான ஏற்பாடுடன்தான் வந்திருக்கின்றேன்'' என்றாள் சரோஜா.

அவள் சுற்றிவளைக்காமல் நேரடியாகத் தான் வந்த விஷயத்தைச் சொன்னதும், சபாநாதன் மனதில் என்னென்னவோ யோசனைகளெல்லாம் தோன்றின.

சபாநாதனுக்குப் பத்து வருட அனுபவம். அங்கு கொண்டுவந்து சேர்க்கப்படும் குழந்தைகளைக் கொண்டு வருபவர்களிடம் பேசிபேசிப் பழகியிருக்கிறார் அவர்கள் வரும் முறையும் பேசும் விதமுமே தனி. கொண்டுவரும் குழந்தையின் பிறப்பில் சிறிது வழிப்பிசகு இருந்தாலுஞ்சரிதான். அந்த அவமானம், துக்கம் எல்லாவற்றையும் அவரையும் அனுபவிக்கும்படி கட்டாயப் படுத்திவிடுவார்கள்— அந்த முறையில் பேசுவார்கள் வருபவர்கள்.

ஆனால் சரோஜா அப்படியொன்றும் பேசவுமில்லை; நடந்து கொள்ளவுமில்லை. அவளுடைய வெளித்தோற்றம் சபாநாதனின் மனதில் அவளிடம் ஏற்படுத்திய மதிப்பை சரோஜாவின் பேச்சும் நடத்தையும் அதிகரிக்கச் செய்தன. சபாநாதன் சொன்னார்.

''எங்கள் ஸ்தாபனம் அனாதைகளுக்கென்றே ஏற்படுத்தப்பட்டது. ஆகையால் கொண்டுவருபவர்களை ஏற்றுக் கொள்ள மறுப்பதென்பது எங்கள்நியதியில் கிடையாது. ஆனால்எல்லாவற்றிற்கும் முன்பாகச் சிலவற்றை நிச்சயம் செய்து கொள்ள விரும்புகின்றேன். குழந்தையின் பராமரிப்புக்கான செலவு பற்றிப் பேசினீர்களல்லவா? அனாதையென்றால் பராமரிப்புக்கு நாதியற்றது என்பதுதானே அர்த்தம்...''

சரோஜா சகிக்கமுடியாத வேதனையால் துடிப்பவளைப்போல கண்களை இறுகமூடிக் கொண்டிருந்தாள். சபாநாதன் தொடர்ந்து பேசினார்.

''உங்களின் மனதைப்புண்படுத்தவேண்டுமென்று எனக்கு உத்தேசமில்லை...எங்களிடம் இப்படிக் குழந்தைகளைக் கொண்டுவந்து சேர்ப்பவர்கள் பரோபகாரசிந்தையால் தங்களால் இயன்றளவு அல்லது இஷ்டப்படி ஆச்சிரமத்திற்குப் பொருளுதவி செய்வதுண்டு. அப்படி ஏதாவது செய்வதாக இருந்தால் வந்தனத்துடன் ஏற்றுக்கொள்வோம். ஆனால் அதற்காகக் கட்டாயப் படுத்துவதோ அல்லது பணம் கொண்டுவரவில்லையென்பதற்காக குழந்தையை ஏற்க மறுப்பதோ கிடையாது. இந்தக் குழந்தையைப் பற்றிப் பலவிதமான கேள்விகளையெல்லாம் கேட்போமென்று நீங்கள் பயம் அடையலாம். நீங்கள் எதுவும் சொல்லாத வரையில் நாங்கள் வற்புறுத்த மாட்டோம் உங்கள் வாயினால் இந்தக்குழந்தை ஒரு அனாதை என்று சொன்னால் மட்டும் போதும். அம்மா! நான் கொஞ்சம் வெளியேபோய் விட்டுவருகிறேன் அதுவரை நீங்கள் இங்கேயே இருங்கள். காலை உணவை முடித்துக் கொண்டு போகலாம்'' என்றார் சபாநாதன்.

சரோஜா கெஞ்சுந்தோரணையில் பேசினாள்: ''ஐயா! உங்களிடம் இந்தக் குழந்தையை ஒப்படைக்க வந்தேன். என்னையும் நீங்கள் ஒரு அனாதையாக மதித்து உபசாரம்செய்வீர்களென்று நான் எதிர்பார்க்கவில்லை. [illegible] இந்தக் குழந்தையை ஏற்றுக்கொண்டு எனக்குப்போகவிடைதாருங்கள். ஏற்கனவே நைந்து போன என் நெஞ்சை உங்கள் உபசாரங்களால் அதிகமாகநோக வைக்க முயலாதீர்கள் என்று கெஞ்சிக்கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்றாள்.

வழக்கமாக கேட்கும் கேள்விகளைச் சபாநாதன் கேட்டார். தன் தயக்கத்தைக் கூடியளவு மறைக்க முயன்றுகொண்டே சரோஜா பதில் சொன்னாள். அந்தக்குழந்தை அவளுடையது என்பதை மட்டும் ஒப்புக் கொண்டாள். அதற்கு மேல் எதுவும் சொல்ல மறுத்துவிட்டாள்.

எவ்வளவோ தந்திரமாகவும் சாமர்த்தியமாகவும் பேசி முயன்றும் சபாநாதனால் சரோஜாவிடமிருந்து எதையும் கிரகிக்கமுடியவில்லை.

இறுதியாகச் சரோஜா, ''ஐயா! உங்களிடம் நான் பல விஷயங்களை மறைக்க முயலுகிறேன் என்று குறை நினைக்கக்கூடாது. காலையில் நான் வந்தபோது என் மனதிலிருந்த வேதனையையும் அவமான உணர்ச்சியையும் நீங்கள் உங்கள் சுபாவத்தினால் மாற்றி விட்டீர்கள். என் மனதைப் புண்படுத்தக் கூடாதென்று நீங்கள்பக்குவமாகப்பேசுகின்றீர்கள். என் இஷ்டம்போல் பேசவிட்டுக் குழந்தையையும் ஏற்கத் தயாராயிருக்கின்றீர்கள். இதற்காக உங்களுக்கு நான் என்றென்றும் நன்றி செலுத்தவேண்டும். உங்களுடைய இந்த உதவிக்கு ஈடுசெய்ய என்னால் எப்போதுமே முடியாது. தெய்வத்தின் கருணைக்கு ஈடுசெய்ய முடியுமா? நீங்கள் எனக்குத் தெய்வந்தான்'' என்றவள், கைகூப்பி வணங்கிவிட்டு விடுவிடென்று வெளியே நடந்துசென்றாள்.

அவள் நடந்து போவதையும் கட்டிலில் உள்ள குழந்தையையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார் சபாநாதன்.

அந்தச் சம்பவம் சபாநாதனின் நெஞ்சை அளவுக்கு மிஞ்சி நெகிழ்த்திவிட்டது.

○

ஒரு வாரத்துக்குப்பின்னர் சபாநாதனுக்கு ஒரு கடிதம் வந்தது. அது சரோஜாவிடமிருந்து வந்திருந்தது. வியப்புடன் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தார். பக்கத்தில் ஆச்சிரமத் தலைவர் ராஜகோபால் நின்று கேட்டுக் கொண்டிருந்தார்.

அன்புள்ள சபாநாதன்

அவர்களுக்கு,

வணக்கம். என்னை இதற்குள் நீங்கள் மறந்திருக்க முடியாது. சென்ற வெள்ளிக்கிழமையன்று அதிகாலையில் முதன் முதலாக நீங்கள் விழித்த என் முகத்தை மனிததெய்வமான நீங்கள் மறப்பதானால் பின்பு......

## — பெரி. சண்முகநாதன் —

அன்று உங்களிடம் என் செல்வத்தை ஒப்புவித்து வந்தேன். உங்களிடத்தில் என்னிடமிருந்த நாணத்தினால் என் அபாக்கியக் கதை முழுவதையும் சொல்ல முடியவில்லை. இக்கடிதத்தின் மூலம் உங்களுக்குத் துன்பமே நிறைந்த என் கதையைத் தெரிவிக்கின்றேன். என் குழந்தை மற்றவர்களுக்கு அனாதையாக இருந்தாலும் அந்தக் குழந்தையினது சரித்திரம் உங்கள் ஒருவருக்காவது தெரிந்திருக்கட்டும் என்று எழுதுகிறேன்:

நான் ஒரு தாயில்லாப் பிள்ளையாதலினால் என் தந்தை என்னை அருமையாக வளர்த்தார். என்னை எஸ். எஸ். சி. வரை படிக்க வைத்தார். என் விஷயத்தில் எவ்விதக் குறைவும் இருக்கக்கூடாதென்பதே அவர் கவலையாகவிருந்ததென்று கூறலாம். அதிலும் நான் ஒரே பிள்ளை என்பதற்காகஎன்னிடம்அவருக்கு அளவுகடந்த வாஞ்சை.

அதிக சீர்சிறப்புடன் என்னை ஒருவருக்குத் திருமணம் செய்துவைத்துவிட்டு இந்த உலகை விட்டே போய்விட்டார், என் தந்தை. எனது கணவர் என்னைத் தமது இரு கரங்களாலும் வரவேற்றுத் தமது இதயத்தில் இடம் கொடுத்து அமர்த்திக் கொண்டார் மூன்று வருஷகாலம் கலப்பற்ற இன்ப வெள்ளத்தில் மிதந்தேன். நற்புறமும் இனிமையும் கனிவும் பொங்கித் ததும்பின. மூன்று வருடங்களுக்குப் பின்புதான் முதன் முதலாக என் வாழ்வில் கசப்புத் தட்ட ஆரம்பித்தது. ஆனால் அது இவ்வளவு கொடிய விஷமாக வளர்ந்துவிடுமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை.

எனது கணவனின் சகோதரி ஒருத்தி நாங்கள் கொழும்பிலிருக்கும் வீட்டுக்கு வந்தாள். ''மச்சாள்! கலியாணமாகி மூன்று வருடமாச்சு. எப்போது என் மருமகனை நான் கொஞ்சுவது?'' என்று ஆரம்பித்தாள். டாக்டரைப் பார்க்கவேண்டுமென்றார்கள். டாக்டரும் ஏதேதோ சொன்னார்-பயனில்லை. எத்தனையோ கோவில்களுக்கு நாங்களிருவரும் ''நேர்த்தி'' வைத்துக்கொண்டோம்.

மேலும் இரண்டு வருஷங்கள் ஓடிவிட்டன. என்னென்னவோ மருந்தெல்லாம் வாங்கிக்கொடுத்தார் அவர்-பலனில்லை. ஊரில் என்னென்னமோ பேசினார்களாம். எனது மாமியாருக்கு அல்லும் பகலும் அறுபது நாழிகையும். இதுவே பேச்சாகிவிட்டது.

எங்களிருவருக்கும் ஒரு குழந்தை வேண்டுமென்ற ஆசை எந்த எல்லையில் இருந்ததென்பதை மற்றவர்கள் எப்படி அறிந்திருக்க முடியும். அவர்கள் பேசுவதையெல்லாம்கேட்டு நான் புழுவாகத் துடிப்பேன். அவரிடம் என் கஷ்டத்தை மறைக்கமுயன்று, எவ்வளவோ சாமர்த்தியமாக நடந்துகொள்வேன். ஆனால் அவர் நெஞ்சில் என்னிடமிருந்த பிரேமையின்முன் என் சாமத்தியம் எவ்வளவு! ''யார் என்னவேண்டுமானாலும் பேசட்டும். நானிருக்கிறேன் உனக்கு'' என்று எனக்குத் தைரியமளித்து என்னை அணைத்துக்கொள்வார் அவர் வீட்டில் இல்லாதபோதுகூட அவருடைய கரங்கள் என்னை மற்றவர்களின் சொல்லம்புகளிலிருந்து பாதுகாத்துக்கொண்டிருப்பதாக நான் உணருவேன். அப்படி நடந்துகொண்டார் அவர்.

இந்நிலையில்தான் அவருக்குக் கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு மாற்றலாகியது இப்படி பல மாற்றங்களை தனக்குள்ள செல்வாக்கைக்கொண்டு தட்டிக் கழித்த அவருக்கு இதையும் தட்டிவிடலாம் என்ற எண்ணம்தான் முதலில் தோன்றியது. இருந்தாலும் மாமி

(VIII-ம் பக்கம் பார்க்க)

[இரத்ததான கவிதைப் போட்டியில் மூன்றும் பரிசு பெற்ற கவிதை-2]

## இரத்ததான நற்பயன்

''மயிலன்''

அன்னையின்பால் அவள் அளிக்கும் இரத்ததானம்!
ஆவின்பால் அஃதளிக்கும் இரத்தம்! என்னும்
இந்நிலத்திற் பாலூட்டும் உயிரினந் தம்
இரத்தத்தை ஊட்டுதலே இயற்கை! ஆனால்
மண்ணிலுயர் விஞ்ஞான மலர்ச்சி யாலே
வைத்தியர்கள் வலுவிழந்தார்க் கிரத்த மூட்டி
இன்னுயிரைக் காக்கின்றார்; புதுமை என்னே!
இயற்கையுடன் இணைந்தவொரு செயற்கை யாமே!

இந்தவகை உயர்வுடைய இரத்தந் தன்னை
எவரேனும் மருந்துவகைச் சேர்க்கையாலும்
தந்துதவ முடியாது! இயந்திரத்தின்
தகைமையினால் உண்டாக்க இயலா தன்றோ!
நம் திறத்தால் நமதுடம்பு சேர்த்து வைத்த
நல்லுயிரைக் காக்கின்ற அமிழ்தந் தன்னை
வெம்துயரில் வீழ்வோர்க்குப் பகிர்ந்தளிப்பின்
மேன்மைமிகு தானமொன்று வேறு முண்டோ)

உறவொழிந்து நடந்துவிட்டால் ஓடித்தேடி
உடம்படுத்தல் முடியாத உயிரின் பொல்லாத்
திறமறிந்தே வாழ்வளிக்க இரத்த தானஞ்
செய்தவரே செயற்கரிய செய்தார்; அன்னோர்,
மறலிவரத் தடுத்துமறு வாழ்வளித்த
மகாத்மாக்கள்! இறைவனருள் மலரப் பெற்றோர்
அறம்பலவும் ஒருங்கமையச் செய்த நல்லோர்
அரும் பிறவிப் பேறடைந்தார் தேவர் ஆவர்!

பகுத்துண்டல் உயர் அறமே பசியை மாற்றும்!
பலமிழந்து, நலமழிந்து, பரிதவித்து,
மிகுத்திடு நோய்க் காற்றுது வெதும்பி, வாழ்வை
விட்டொதுங்கி உயிர்ப்பிச்சை வேண்டும் நாளில்,
உகுத்திடு நீர்க் கண்மகிழ, உளம்மகிழ, இரத்ததானம்
உதவுதலால் அவ்வுயிரைக் காப்பின், நூலோர்
தொகுத்துரைக்கும் அறம்பலவும் இரத்த தானச்
சொல்கேட்பதி தலைவணங்கித் துதிக்குந் தாமே!

புண்ணியத்தை இரத்தத்தால் தானஞ்செய்து
புகழாலே பெயர்பொறித்தான் மன்னன் கன்னன்!
தன்னிடத்தே சரணடைந்த புறவுக் காகத்
தசையளித்தான் சிபிமன்னன்! தலையளித்தான்
மண்புகழ வனம்புக்க குமணன்! இந்நாள்
மக்களினம் மனமுவந்து கூடி வந்து
தண்ணளிசேர் நல்லிரத்த தானஞ் செய்தல்
தலைமிருக்கும் வரையழியாத் தகைமைத்தன்றோ!

இல்லையெனும் சொல்கேட்க முன்னம் ஈதல்
இல்லையெனும் சொல் அவர்க்குச் சொல்லாதீதல்
இல்லையென அவர்பிறர்பாற் கேளா தீதல்
எனும் வகையில் இயல்பறிந்து மறுத்திடாது
வல்லமைக்குத் தகஉயர்வாய் வழங்கல் உண்டேல்
வான் வழங்கும்! தாழ்வகலும்! வாழ்வு நீளும்!
பல்பொருள்சேர் பாக்களினாற் கவிஞர் பாடிப்
பாராட்டி வாழ்த்திடுவர் பல்நாள் வாழ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை (VIIம்பக்கத்தொடர்ச்சி)

முதலியவர்களிடமிருந்து எங்கேயாவது கண்காணாத இடத்துக்குப் போய்விட்டால் போதுமென்பதற்காகவும், இம்மாதிரிப் போவதிலும் ஏதாவது பலனிருக்குமோவென்று அவரையும் மீறி எழுந்த ஆசையினாலுமே அவர் திருகோணமலைக்குப் போக உத்தேசித்தார். மாமியை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவிட்டுத் திருகோணமலைக்குச் சென்றோம்.

இரண்டுவருட காலம், திருகோணமலையில் கழிந்தது. ஒரு பலனையும் காணோமே என்று இருவரும் ஒரு சமயம் நினைத்துக் கலங்குவோம். ஆனாலும் எங்களுடைய பாக்கியம் அவ்வளவுதானென்று சமாதானம் செய்துகொள்வோம்.

இந்நிலையில் மாமியிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்தது. தனக்கு வயதாகிவிட்டதாகியும், அவரை உடனே பார்க்க நிரம்ப ஆவலாயிருப்பதாயும், அவரது குழந்தையை எடுத்துக் கொஞ்சத் தனக்குப் பாக்கியமில்லாமல் போய்விட்டதாகவும், தெய்வத்திற்குக் கண்ணில்லையென்றும், அவரைப்போன்றவர்கள் விஷயத்தில் தெய்வம் கஞ்சத்தனமும், வஞ்சத்தனமும் செய்வதாகவும், இன்னும் என்னவோ எல்லாம் எழுதியிருந்தாள். ஆனால் கடைசியாக எழுதியிருந்த வசனத்தைப் படிக்க மயக்கந்தான் வந்தது.

.....உங்கள் இருவர் ஜாதகங்களையும் சாத்திரியாரிடம் காண்பித்தேன். உன் மனைவியின் ஜாதகப்படி உனக்குப் புத்திரபாக்கியமே இல்லை. நீ ஒரு குழந்தைக்காக எப்படி ஏங்குகின்றாய் என்று எனக்குத் தெரியும் எனவே நீ வேறு ஒரு விவாகம்செய்துகொள் ஐயோ! இதை எழுத மாமிக்கு எப்படித்தான் துணிவு வந்ததோ! அந்த ஒரு வசனத்தில்தான் எத்தனை விஷம் இருந்தது. ஆனால் எனக்குத்தானே அது விஷமாகத் தோன்ற முடியும்? தனது பரம்பரை தழைக்க ஒரு குழந்தை வேண்டுமென்ற எண்ணத்துடன் எழுதும் மாமிக்கு எப்படி அது விஷமாகத் தோன்ற முடியும்?

ஒரு குழந்தைக்காக அவர் எப்படி ஏங்கினார் என்பது எனக்குந்தான் தெரியும். என்னால் அவருடைய ஆசை பூர்த்தியாகாதென்றே தோன்றியது. தனது தாயின் கருத்தை 'சட்' என்று சொல்லி ஒரே வார்த்தையில் உதறியெறிந்துவிட்டார். ஆனால் மாமி போட்ட விதை என் மனதில் ஊற ஆரம்பித்தது. 'மாமியின் யோசனைப்படி... என் நெஞ்சில் ஒரு முள்ளால் குத்தியதுபோலிருந்தது. ஆனால் போகப்போக அந்த வேதனை கொஞ்சம் கொஞ்சமாகக்குறைந்துகொண்டே வந்து, அதுதான் சரி என்ற நிலைமைக்கு வந்துவிட்டேன்.

அன்று ஆபீஸிலிருந்து வந்தவுடன் அவசரமவசரமாக உடைகளை மாற்றிக்கொண்டு வெளியே மீண்டும் சென்று இரவு ஏழு மணிக்குத் திரும்பினார். அவர் வந்து பத்திரிகை எடுத்துக்கொண்டு நாற்காலியில் சாய்ந்தார். நான் அவர் அருகே சென்று காப்பியை முன்னிருந்த மேசைமீது வைத்துவிட்டு தொண்டையை ஒரு முறை கனைத்துக்கொண்டேன். அவர் நிமிர்ந்தார். நான் அவருக்கு முன் மண்டியிட்டு இருந்து, அவரது கைகளைப் பற்றிக்கொண்டே, ''அத்தான்! எனக்குக்கூட இந்த வீடு ஒரே சூன்யமாகிவிட்டது. இத்தனை காலமாகியும் ஆண்டவன் நம்மை ஏமாற்றிவிட்டான். மாமி சொல்லியபடி உங்களது பரம்பரைக்காவது ஒன்று வேண்டும்தானே. ஏன் நீங்கள் வேறு விவாகம் செய்யக்கூடாது......'' என்று இழுத்தேன்.

அவர் என் முகத்தைக் கூர்ந்து பார்த்தார் அந்தப் பார்வையில்தான் எத்தனை அர்த்தம்

''சரோஜா! என்ன அசட்டுத்தனமான பேச்சு இது. எனக்குக் குழந்தையில்லை என்று ஏதே கவலைதான்...'' என்று சொல்லும்போது அவர் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் கன்னங்களில் வடிந்தோடியது......'' ஆனால் அதற்காக உன்னை விட்டுவிடவேண்டுமா? நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் இந்த விஷயத்தைவிட்டு நான் உன்மீது கொண்டிருக்கும் அன்பு சிறிதளவும் மாறாது'' என்று சொல்லி என்னை அணைத்துக்கொண்டார்.

அதுதான் நான் அவரிடமிருந்த கடைசி மனமொத்த இரவு, ஆம்! அன்றும் நமது மனமொத்த வாழ்வின் ஒரு வித்து பதிக்கப்பட்டது. நான் அந்த இரவிலேயே முடிவு செய்துகொண்டு மறுநாளே என்னை அனாதையாக்கிக்கொண்டேன். நான் உயிரோடு இருக்கும்வரை அவர் வேறு விவாகமென்ற விஷயத்தைப்பற்றிச் சிந்திக்கவே மாட்டாரென்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். நானாக விலகிக்கொண்டால் அவர் ஒரு தகப்பனாகும் ஆசையும், மாமி ஒரு பாட்டியாகும் ஆசையும் பூர்த்தி செய்துகொள்ள முடியுமல்லவா?

மறுநாள் காலையில் அவர் வெளியே போயிருந்த சமயம், அவருக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுப் புறப்பட்டுவிட்டேன். முன்யோசனைப்படியே மன்னாரில் வசிக்கும் எனது பாடசாலைத் தோழி இந்திராவிடம் போய்ச்சேர்ந்தேன்.

அவள் என் நடத்தையைச் சரியென்று ஒப்புக்கொள்ளாவிட்டாலும் எனக்கு ஆதரவு தர மறுக்கவில்லை. இந்திரா தன்னால் ஆனவரை முயன்று எனக்கு ஆறுதலளிப்பதோடு என்னைத் திரும்பவும் என்கணவரிடம்அனுப்பவும் முயன்றாள். அவள் தன் முயற்சியில்தோல்வியே கண்டாள். இந்தத் துன்பக் கதையை - சகிக்கமுடியாத கசப்பை அதிகம் வளர்த்த எனக்குஇஷ்டமில்லை. சுருக்கமாகவே சொல்லுகிறேன். நான் அப்படி விதியின் ஏவலாக என் கணவரைவிட்டுபபோனபோது ஒரு மாதக் கர்ப்பவதி!

முதலில் நானும் இந்திராவும் நம்பவில்லை. நாங்கள் உண்மையறிந்து நம்புவதற்குள் நான் மூன்று மாதக் கர்ப்பவதியாகிவிட்டேன். தெய்வமே இப்படிச்சதிசெய்வதுண்டா?

ஆற்றில் ஒரு காலும் சேற்றில் ஒருகாலுமாக இருந்த அந்தச்சமயத்தில்அப்பப்பா! என்ன பாடுபட்டது என் மனம்! துக்கமும் சந்தோஷமும் மழையாகப் பெய்வது போல இருக்கும். ஆனால் அன்றுதொட்டு இன்றுவரை ஒரு கணமாவது கலப்பற்ற சந்தோஷத்தை அனுபவித்திருக்கின்றேனா? எவ்வளவு பெரிய துர்ப்பாக்கியவதி நான்!

இந்திரா எவ்வளவு சொல்லியும் அப்போது நான் அவருக்கு ஒரு கடிதம் எழுத மறுத்துவிட்டேன். எழுதினால் அவர்நம்புவாரா? களங்கமில்லாமல் ஏற்றுக்கொள்வாரா? என்ன செய்வது என்று துடிதுடிக்க, நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகிக் கழிந்துகொண்டே போயிருந்தன. முடிவென்ன? அதைத்தான் நீங்கள் அறிவீர்களே. ஒரு பாவத்தையும் அறியாத என் செல்வத்தை நான் அனாதையாக்கி உங்களிடம் ஒப்புவித்துவிட்டேன். உலக நியாயத்திற்கும், தர்மச் சடங்குகளுக்கும் இம்மியளவும் குறையாத பெற்றோர்களுக்குப் பிறந்தும், பெற்றவர்களாலேயே இந்தக் கதிக்காளாக்கப்பட்ட அந்தக்குற்றமற்ற பாலகனை நன்றாகப் பார்த்துக்கொள்ளுங்கள்.

இவ்வண்ணம்,
நன்றியுள்ள,
சரோஜா.

கடிதத்தைப் படித்து முடித்த சபாநாதன், பக்கத்தில் நின்ற ஆசிரமத் தலைவர் ராஜகோபாலைப் பார்த்தார். ''சபாநாதன்! இந்தக் கடிதத்தில் எழுதியிருப்பதெல்லாம் உண்மையென்று நம்புகின்றீர்களா?''- ராஜகோபால்தான் கேட்டார்.

''உண்மையென்று சொல்லமாட்டேன். அவ்வளவும் சத்தியம் என்றுசொல்வேன்- பாவம்! இந்தப் பெண்ணுக்கு இப்படி நேர்ந்திருக்கவேண்டாம்.'' - சபாநாதனுக்குக் கண்களில் நீரேவந்துவிட்டது.

''விதிக்கு மனிதன் உலகில் ஒருவிளையாட்டுப்பொம்மை- நாம் என்னதான் செய்தினும், அந்தப் பெருவிளையாட்டின் முடிவுதான் [illegible]

[illegible]

(யாவும் கற்பனை)

தொடர்நாடகம்

# அவன் சென்ற பாதை

### காட்சி 4

ஒரு குகை. அதன் நடுவிலே அடுப்பு ஒன்று எரிந்துகொண்டிருக்கின்றது. அதன் மேல் ஒரு பாத்திரம் கொதித்து ஆவி பறந்த வண்ணம் இருக்கின்றது. அதன் பக்கத்திலே ஒரு கல்லின்மீது அமர்ந்தவண்ணம் அமுதன் பாத்திரத்தினுள்ளே பலவகைச் சாறுகளை விட்டு அகப்பையால் துழாவுகின்றான். அவனுக்கு முன்னால் நின்றபடி அம்பலவன் அமுதனையே நோக்கி நிற்கின்றான்.

புகை விலகும் பொழுது பின்னால், இறந்த மாதவியின் சிலை நிற்கிறது. அதை அமுதன் சிறிதே நோக்குகிறான். கண்களிலே நீர் முட்டுகின்றது. திரும்பிச் சுற்றிவரப் பெருமூச்சுடன்நோக்குகிறான்.

புதுவகை நிலைக்கண்ணாடி ஒன்று. பலவகைப் பளிங்குக் குழாய்கள். அவைகளில் பலவகைத் திராவகங்கள். சில புதுவகைஆயுதங்கள், ஒழுங்காய் அடுக்கப்பட்டிருக்கின்றன.

அம்:- அமுதன்! இதெல்லாம் என்ன! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

அமு:- (பயங்கரமாகச் சிரித்து) விளங்கவில்லையா? வா இப்படி.

(கண்ணாடியின் அருகே அழைத்துச் செல்கின்றான்)

அமு:- கண்ணாடியைப் பார். என்ன தெரிகிறது?

அம்:- ஒன்றுமே தெரியவில்லை. (தடவிப் பார்க்கிறான்) அட கண்ணாடிதான்! ஆனால்... ஆனால் ... ஒன்றுமே தெரியவில்லையே. சேச்சே! எனது அழகுத்திருவடிவத்தைக்காட்டாத இதுஎதற்கு? இதோ பார்! உடைத்துவிடுகிறேன்.

அமு:- (அவன் கையைத் தடுத்து) பொறு ... (அதன் மூலையிலிருந்த ஒரு புரியைத் திருகுகிறான்) இப்போது பார்.

அம்:- அடடே! ஆஹா! மாதோட்டத்திலிருந்து அநுரதபுரிசெல்லும் பாதை தெரிகிறதே. நிழல் படிந்த நீண்ட பெரிய மரங்கள். நூல் கட்டியது போல நேராய்ச் செல்கின்றபாதை. பல்லக்கிலும், குதிரையிலும், கால்நடையிலும் வரிசை, வரிசையாய்ச் செல்கின்ற மக்கட்கூட்டம்! அமுதன் நீ பெரிய ஆள்தான்! மந்திர, மாயவித்தைகளுந்தெரியுமா உனக்கு?

அமு:- மந்திரமுமல்ல ... மாயமுமல்ல. இது ஒரு புதுவகைத் தொலைநோக்காடி. பஞ்சலோகங்கள், பாதரசம், சில மூலிகைச்சாறுகள் கொண்டு தயாரிக்கப்பட்டது. பல கல் தொலைவில் நடக்கும் செய்திகளையும் இதன் மூலம் கண்டிடலாம்.

அம்:- மெச்ச வேண்டிய வித்தைதான். இம்...வேறு என்ன புதுமை செய்தாய்?

— "சொக்கன்" —

அமு: இங்கே வா.

பின்னால் அழைத்துச்செல்கிறான், அமுதன். ஒருவகைப் பொடியை எடுத்து அம்பலவன் மீது தூவுகிறான். அம்பலவன் துடித்துப் பதைக்கிறான். தீப்பட்டதுபோல விழுந்து புரள்கிறான்.

அம்:- ஐயோ! அமுதன்! என்னைக் காப்பாற்று ஆ! ஆ! அம்மா! ஆண்டவனே! என் உடலெங்கும் பற்றி எரிகிறதே! ஆ! ஆண்டவா!

(அமுதன் சிரித்தபடி குழாயுள் இருந்த திரவத்தை எடுத்து அவன் உடலிலே தெளிக்கிறான். அம்பலவனின் எரிவுஅடங்குகின்றது.)

அம்:-அப்பாடா! யமவாதனையை ஒருகணத்துள் அனுபவித்துவிட்டேன். இது என்ன பொடியப்பா. எனக்கும் சிறிது தா. கடன்காரனின் தொல்லை தாளாது வருந்துகிறேன் அவனைக் கண்டால் இதைத்தூவி, என் முகத்தைக் கண்டாலேபறந்தோடச் செய்கிறேன். (சென்று எடுக்கப் போகிறான்.)

அமு:- ஏய்! அது ஒருவகை நச்சுப்பொடி. கண்டபடி தீண்டலாகாது. இங்கே வா. இதைப்பார். இந்தக்குழாயிலுள்ள திரவத்தைப் பார்த்தாயா?

அம்:- (அதைப் பார்த்து வியப்போடு) இது என்ன? குமரிப்பெண்ணின் மெல்லுதடு போலச் செக்கச் சிவந்து விளங்குகிறதே? என்னஇது? குடிக்கட்டுமா?

அமு:- அம்பலவ! அழகைக் கண்டு மயங்காதே. அது ஆபத்தானது. இந்தத்திரவம் பலநாள் முயன்று நான் தயாரித்தது. இதிலே சில துளிகளை ஓரிடத்திலே தெளித்தால், அதைச் சூழ்ந்து மூன்றுகல் தொலைவிற்கு மரம், செடி, கொடி, பயிர், பச்சைகள், பிராணிகள் வாழமுடியாது. அப்படியே கருகிச் சுடலையாய்க் காட்சிதரும் அந்த இடம்!

அம்:- (பயந்து நடுநடுங்கி) ஐயையோ! அழிவுக்கு ஆரத்தியெடுக்கும் உன்னையும், இந்த இடத்தையும் பார்க்கவேஉயிர்போய்விடும் போல இருக்கிறது. நான் வருகிறேன் அப்பா.

(அம்பலவன் ஓடப்பார்க்கிறான். அவனைப் பிடித்து இழுத்துவந்து நிறுத்துகிறான் அமுதன். அம்பலவனின் உடல் வெடவெடவென்று நடுங்குகின்றது.)

அமு:-இங்கு உள்ள அனைத்தையும் காணாது ஓடப்பார்க்கிறாயே! வா. இன்னும்பார். 'இந்தத் திரவம், நாகத்தின் கொடுவிடமும், நாகதாளிச் சாறும், எருக்கலையிழிவுங் கொண்டுசமைத்தது. இதனை ஒருவன் மணந்தால், அவ்வளவுதான்! அவன் யமனின் விருந்தாளியாக வேண்டியதுதான்! (பயங்கரமாகச் சிரிக்கிறான்)

இந்தக் குழாயைப்பார். இதனுள் கந்தகமும், வெடியுப்பும் கலந்த இப்பொடியை வைத்து, இந்தக் குமிழியை அழுத்தினால் என்ன நடக்கும் தெரியுமா?

(அவ்விதமே வைத்து அமுதன் குமிழியை அழுத்த படீரென்று பேரோசை எழுந்து பாறையில் மோதிக் கற்றுகள் பறக்கின்றது. அம்பலவன் ''ஐயோ! செத்தேன்!'' என்று சொல்லிக்கொண்டு கீழே விழுந்து மூர்ச்சையாகிறான். அமுதன் பக்கத்திலிருந்த நீரை எடுத்துத் தெளித்து அம்பலவனை மூர்ச்சை தெளிவிக்கிறான்)

அமு:- டேய்! எழுந்திரு. அஞ்சிவிட்டாயா? 'வலவன் ஏவா வானவூர்தி' சமைத்தவன் தமிழன். 'தூங்கெயில் படைத்த' தொல்லோன் எம் செந்தமிழன். அவன் பரம்பரையில் வந்த நீயா...? எழுந்திரடா!

அம்: ஐயோ! என்னை உயிரோடு விட்டுவிடப்பா. நீ சொன்னதெல்லாம் நேற்றைத் தமிழனின் செய்திகள். நான் இன்றைத் தமிழன். எனக்கு இவையெல்லாம் ஒத்துவராதப்பா! ஒத்துவராது.

அமு: பேசாதே பேதையே! வா இப்படி. உட்கார் (அமுதனின் காலடியிலே பயத்தோடு அம்பலவன் அமர்கிறான்) அம்பலவ! இந்த உலகமே எனக்கு வெறுத்துவிட்டது. துரோகமும், நரித்தனமும் இங்கு ஆட்சி புரிகின்றன. வறியவனுக்கு இம்மண்ணில் இடமில்லை. வலிமையற்றவன் இங்கு வாழ முடியாது. ஆதரவற்றவன் அழிந்து ஒழியவேண்டியதுதான்.

அம்: இதையெல்லாம் ஏன் சொல்கிறாய்?

அமு: சுருங்கச்சொன்னால் நான் வாழவிரும்புகிறேன். வறியவனாக அல்ல; வளங்கொழிக்கும் செல்வனாக! வலியற்ற மெலியோனாக அல்ல; வலிமை மிகப்பெற்ற அசுரனாக. ஆதரவற்ற அனாதையாக அல்ல; அடிவருட ஆயிரம்பேர் காத்திருக்கும் உன்னத நிலையுடையோனாக! இந்த உலகமே என் காலடியிலே கிடந்து நசிய, நான் அதன்மேல் நின்று வெற்றி முழக்கம் செய்தல் வேண்டும். கூவிக் கொக்கரித்துக் குமுறி ஆர்ப்பரித்தல்வேண்டும். தெரிந்ததா?

அம்: என்னப்பா! மொட்டைத்தலைக்கும், முழந்தாளுக்கும் முடிச்சுப்போடுகிறாயே? அப்படி வாழ்வதற்கும், இந்தத்திரவங்கள், பொடிகள், சாறுகளுக்கும் என்ன சம்பந்தம்?

அமு: தனி மனிதனாய் நின்று தரணியை அடக்கிட என் அறிவாற்றல் முயன்றது. அதன் பலன்தான் இவையெல்லாம். நான்விரும்பியதெல்லாம் என் காலடியிலேவீழ்ந்துகிடத்தல்வேண்டும். (பயங்கரமாய்ச்சிரித்து) ஆம்! நெருங்கிய பொருள் கைப்படவேண்டும்.

அம்: நெருங்கிய பொருள் திச்சயம் கிட்டும், நினைவு நல்லதானால்...?

அமு: மடையா! நினைவில் நல்லனாய் நான் விளங்கி என்ன கண்டேன்? பார்... என் மாதவியைப் பாரடா! நெளிந்திடும் தென்றலாய் நிலவுமுகத்தளாய் என் முன் நின்று; என் மடியில்கிடந்து, குதலைபேசிக் குறுநகைகாட்டவேண்டியவள் சிலையாய் நின்று சீரழிவதைப் பார். இதன்பின்னும் 'நினைவு நல்லதுவேண்டும்' என்றுபுலம்ப நான் என்ன பேதையா?

என் மனத்தில் உறுதியிருக்கின்றது. மதியில் தெளிவு

(IXம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் சென்ற பாதை

(VIII-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றது. இவற்ருல் இந்த மாநிலத்தையே ஆட்டி வைக்கிறேன் பார்!

**அம்: உன் ஆசை பேராசை அமுதா! இதனுல் அழிவு தான் உறுதியாகும். அறிந்து கொள்.**

அமு: அழிவு! இனி அமுத னுக்கு அழிவேயில்லை. பார் இந்தச் சாற்றை. (மடியிலிருந்து ஒரு பொடியை எடுத்து தூவுகிருன் 'உஸ்' என்ற ஒலியோடு நுரை எழுகிறது. அகப்பையால் துழாவுகிருன்)

இன்னும் சிறிது போதில் இது சிவப்பு நிறத்தை அடையும். அப்பொழுது அதை நான் பருகுவேன். மெல்ல, மெல்ல மிருக பலம் என் உடம்பில் ஏறும். அதன் பின் பத்துமல்லர்களையும்சமாளிக்கவல்ல வல்லமை எனக்கும் கிட்டும். யாராலும் என்னை அழிக்க முடியாது.

அம்: (சிரித்தபடி) இப்படிச் சொன்னவர் எத்தனை பேர்! அமுதன்! மாதோட்டமே பெருமைகொள்ளும் மருத்துவன் நீ. உன்னுல் உடற்பிணி தீர்ந்து வாழ்வில் இன்பமும், வளமும் பெற்ருேர் பலர். அவர்க்கெல்லாம் நீ அமுதம்! ஆலக்கொடுவிடமாய் ஆகாதே அப்பா! உனது அறிவு அழிவுப்பாதையிலே சென்ருல் இந்த நாடு தாங்காது. அது சரி......... உனக்கு ஏன் இந்த மிருக பலம்? யாரைக் கொல்லப் போகிருய்? யார் வீட்டிற்கு நெருப்புவைக்கப்போகிருய்? யாரைக்கொள்ளையடிக்கப் போகிருய்?

அமு: (வெகுளியாற்கனத்த அடிக்குரலில்) கொல்லத்தான்போகிறேன். கொள்ளையடிக்கத்தான்போகிறேன். வீடுகளுக்குத் தீவைக்கத்தான் போகிறேன்

அம்: அடப்பாவி! உன் நெஞ்சிலே இரக்கத்திற்குச் சமாதி எழுப்பிவிட்டாயா?

''அருளிலார்க் கவ்வுலக
மில்லை-பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாதி
யாங்கு''

என்று படித்துப் படித்துச் சொல்வாயே? குறளின் வழி ஒழுகுதலே என் குறிக்கோளென்று சொற்பெருக்காற்றுவாயே? அவையெல்லாம் பிறருக்குத்தானு? உனக்கு இல்லையா? நீ மிகவும் மாறிப் போய்விட்டாய்.

அமு: ஆமாம், மாறித்தான் போய்விட்டேன். என் மாதவி மரணமடைந்த அன்றே நானும் மாறித்தான் போய்விட்டேன். அவள் தந்தை நாயிலும் கேவலமாய் என்னை அடித்துச் சித்திரவதை செய்த அன்றே நான் மாறித்தான்போய்விட்டேன்.

''நான்'' என்ற நான் செத்து நாட்கள் பலவாகிவிட்டன. இப்பொழுது நான் மிருகம். கூற்றிலுங்கொடியவன். கொலையே என்னிதயகீதம் குருதிபெருக்கலே என் குறிக்கோள் கொள்ளையடித்தலே என் நினைவு, கனவு எல்லாம்

ஆ! அதோ பார்! அந்தச் சாறு குருதிச்சிவப்பை அடந்துவிட்டது! (பாத்திரத்தை இறக்கிவைக்கிருன்)

இன்னும் சிறிது நேரத்தில் நான் அமுதன் அல்ல. ஆலகால விஷம்! ஆமாம் ஆலகாலவிஷம்!

அம்: அமுதன் நான் உன் நண்பன். என் நட்பின்மீது ஆணையிட்டுக் கேட்கிறேன். இந்த விஷப்பரீட்சையை விட்டுவிடு இதைஇப்போதே மண்ணிற்கொட்டிவிடுகிறேன் பார்.

(பாத்திரத்தின் அருகிற் செல்கிருன்)

அமு: (அம்பலவனின் கைகளைப் பிடித்தபடி பயங்கரமாக உறுத்து விழிக்கிருன்) டேய்! இதிலிருந்து சிந்தும் ஒவ்வொரு துளிச் சாற்றிற்கும், உனது இரத்தத்தாலே நீ பதில் சொல்லவேண்டியிருக்கும். கவனம்.

அம்: சரி! எனக்கென்ன? நீ உன் விருப்பம்போல் செய். நடத்து உன் நாடகத்தை.

அமு; (பயங்கரமாய்ச் சிரித்தபடி பாத்திரத்திலுள்ள சாற்றை, ஒரு சிறு கிண்ணத்தில் ஊற்றிப் பருகுகிருன். மேடை வெளிச்சம் சிறிது சிறிதாய் மங்கிப் பின் பிரகாசமாக எரிகிறது. அந்த வேளையில் மகாபயங்கர உருவத்தோடு, நரம்புகளெல்லாம் புடைத்து நிற்க, இடுப்பிற் கையூன்றி நிற்கிருன்)

அம்: ஐ......யை......யோ! பே...பேய்!...

(ஓட முயல்கிருன் உடம்பு கிடுகிடுவென்று நடுங்குகிறது. அமுதன் அவனைப் பற்றிக் கறகறவென்று இழுத்து வருகிருன்)

அமு: டே! எங்கே ஒடுகிருய்?

அம்: ஐயையோ! என்னை விட்டுவிடு. எனக்கு ஒரு தாய்தான்.

அமு: என்னடா உளறுகிருய்?

அம்: ஓ; நான் என் தாய்க்கு ஒரே மகன். என்னை விட்டுவிடப்பா! இந்தப் பயங்கரத்தை என் கண்ணுல் பார்க்கமுடியாது. எனக்கு இரங்கு.

அமு: (சிரிக்கிருன். அந்தச் சிரிப்பிலே பயங்கரத்தின் சாயல்) அஞ்சாதே. நான் உன்னைக் கொல்லமாட்டேன். நீ என் துணைவன். நீ என்னுடேயே இருத்தல் வேண்டும்.

அதோ தெரிகிறதே, அந்தக் குகை? அதுதான் எங்கள் வசிப்பிடம். வா போவோம்.

அம்: ஐயோ...... என்னை விட்டுவிடு; இந்த வேலை எனக்கு ஒத்துவராது. இரத்தத்தைக் கண்டால் என் இரத்தமே உறைந்து போகும். வாய் வீரத்திற்குத் தான் நான் தகுதி. என்னை விட்டுவிடப்பா. உனக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்.

(அமுதனின் காலடியில் வீழ்ந்து அவன் கால்களைப் பற்றிக் கிடக்கிருன். அமுதன் அவனைத் தனது கால்களாலே புரட்டிவிடுகிருன் எழுந்த அம்பலவன் நடுங்கியபடி அமுதனைப் பார்க்கப் பயந்து கண்களை மூடியிருக்கிருன்.)

அமு: டேய்! எழுந்திரு. கண்களைத் திற, என் சொல்லைக் கேள். உம்... எழுந்திரு.

(அம்பலவன் பேந்தப் பேந்த விழித்தபடி எழுந்திருக்கிருன்) நட (அம்பலவன் நடக்கிருன்) என்னிடமிருந்து நீ தப்ப முடியாது. காற்ருேடு காற்ருய் நீ மறைந்தாலும், நீரோடு நீராய்க் கலந்தாலும் அங்கெல்லாம் உன்னைத் தேடிப் பிடித்து வருவேன் இன்றிலிருந்து நீ என் அடிமை. உம்... நட.

(அம்பலவன் நடுங்கியபடியே நடந்து செல்கிருன்)

அமு: என் முதற் களப்பலி மாதவியின் தந்தை அவனைப் பழிக்குப்பழிவாங்கி, அவனது உதிரத்தால் என் கைகளைக் கழுவவேண்டும்.

[மாதவியின் சிலைக்கருகிற் செல்கிருன்]

அமு: அன்று தன் கணவனுக்காய், கண்ணகி மதுரையையே எரியூட்டினுள் இன்று உனக்காக இந்த நாட்டையே பிணக்காடாக்கப் போகிறேன் நான்! மாதவி! உனது காலடியிலே மனிதத் தலைகளைக் குவித்து, இந்தச் சமுதாயத்தையே பழிவாங்கி, உன் ஆன்மாவிற்கு அமைதி தருவேன் மாதவி! அமைதி தருவேன்.

[கண்களிற் கண்ணீர். அதை அலட்சியமாய் துடைத்தபடி திரும்பி அம்பலவன் பின்னுல் நடக்கிருன்]

(திரை)

(தொடரும்)

# முந்தையோர் சிந்திய முத்துக்கள்

— வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் —

தென்புலோலியூர், பண்டிதர் திரு வீ பரந்தாமன் மேலே தந்திருக்கும் தலைப்பில் (19-4-66) 'ஈழநாடு' இதழில் தந்துள்ள விடுகதைப் பாடலையும், வியாக்கியானத்தையும் படித்து மகிழ்ந்தேன். பண்டிதரவர்கள தந்துள்ள பாடல் வருமாறு:-

பெண் கூற்று:
கடகரியின் மீதேறி
கடற் கரையே போறவரே
எரிதணலைத் தணிப்பவர்
'மேல்
இருப்பவரைத்தருவீரோ?

ஆண் கூற்று:-
எரிதணலைத் தணிப்பவர்
மேல்
இருப்பவரை நான்
தருவேன்
மறுபிறப்புப் பிறந்து
மறைப்பவரைத் தருவீரோ?

பெண் கூற்று:-
மறுபிறப்புப் பிறந்து
மறைப்பவரை நான்
தருவேன்
இரணியனைக் கொன்றவனுல்
என் மேலே தீண்டாதே

எரிதணலைத் தணிப்பவர்-நீர். எரிதணலைத் தணிப்பவர் மேல் இருப்பவர் - தாமரைப் பூ. நறுநீர்த் தடாகத்தில் மலரும் தாமரைப் பூ கடற்கரையில் எப்படிக் கிடைக்கும் என்பதைப் பண்டிதரவர்கள் கவனிக்கவில்லைப்போலும். அஃதாவது மருத நிலமும் நெய்தல் நிலமும் மருவிய வழக்கு இஃதென்று பண்டிதரவர்கள் சொல்லப்போகின்ருரோ?

பண்டிதரவர்களுக்குக் கிடைத்துள்ள பாடம் சிதைந்திருக்கிறது என்பது என் கருத்து.

மறுபிரப்புப் பிறந்தவரை
மறைப்பவரைத் தருவீரோ?
இரு கைக்கும் வெகுமதியும்
தருவீரோ?

என்று பாடங்கொண்டாற் பொருள் துலக்கமுறுகிறது, மறுபிறப்புப் பிறந்தவர்-பற்கள். மறுபிறப்புப் பிறந்தவரை மறைப்பவர்- வாயிதழ்கள் இரு கைக்கும் வெகுமதி-நின்னைத் தழுவுதலாகிய பரிசில்.

பாலொடு தேன் கலந்தற்றே
பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்

என்று வள்ளுவர் சொன்ன பொருள் பண்டுதொட்டு நாட்டார் நாவில் தவழ்ந்த பொருள் என்பதனை மனத்தில் வைத்துக்கொண்டு இந்தப் பாடல்களைப் படித்தால் நாட்டார் பாடல்களின் உலக வியவகாரப் பொருள் இனிதே விளங்கும்.

1950-ம் ஆண்டளவில் திருக்கோணமலை அன்பர் திரு, அ. ப. பொன்னையா எனக்கு உதவிய இவ்விடுகதையின் பாடம் வருமாறு.

பெண் கூற்று:
அறுகாலுடனே கரிமீதே
றிக்
கரையோரம் போறவரே
எரிப்போரை நூப்போர்க்
குமேல்
இருப்போரைத் தருவீரா?

ஆண் கூற்று:
பிறந்தும் இருந்தும்
இறந்தும்
பிற்பிறப்புப்பிறப்போரை
மறைப்போரைத் தரு
வீரா?
இருகைக்கும் வெகுமதி
யும் தருவீரா?

பெண் கூற்று:
இரணியனைஇருபிளவாய்ப்
பிளந்தோரை
எறிந்து வந்தால் தருவேன்.

கரையோரம் - நறுநீர்த் தடாகக்கரையோரம் எரிப்போரை - நூப்போர் - நீர். எரிப்போரை நூப்போர்க்கு மேல்இருப்போர்-தாமரைப் பூ. பிறந்தும், இருந்தும், இறந்துப் பிற் பிறப்புப்பிறப்போர்-பற்கள். பிற்பிறப்புப் பிறப்போரை மறைப்போர்-வாயிதழ்கள் இரு கைக்கும் வெகுமதி - நினைத் தழுவுதலாகிய பரிசில். இரணியனை இரு பிளவாய்ப் பிளந்தோர் - நகங்கள். எறிந்து வந்தால் தருவேன் - வெட்டி எறிந்துவிட்டு வந்தால் தருவேன்.

இப்பாடலை வியாக்கியானத்துடன் 2-9-1950-ல் கொழும்பு வானெலி மூலம் ஒலிபரப்பித் துண்டுப் பிரசுரமாகவும் வெளியிட்டேன். வியாக்கியானத்துடன் இப்பாடல் இன்று 'களவுக் காதலர் கையாண்ட விடுகதைகள்' (1962) என்னும் எனது நூலில் (பக். 35-38) இடம்பெற்றுள்ளது ஆங்குக் கண்டு மகிழ்க.

ஒரே கருத்தமைந்த இருவேறுவகையான சொற்கள் கொண்டவிடுகதை திருக்கோணமலையிலும் தென்புலோலியூரிலும் வழங்கிவருவது வியப்பன்று.

நாட்டார் பாடல்களுக்குப் பாடங்களும் பிரதிபாடங்களும் இருப்பது ஆச்சரியமன்று. ஏட்டில் எழுத்துருவம்பெருது வாய்மொழியாக அவை இதுவரை வந்தபடியாலும், ஓசையின்பமே அவற்றின் முக்கியஇலட்சணங்களுள் ஒன்ருகையாலும் அவ்வோசையின்பங்கெடாத எந்தச்சொல்லையும் சொற்ருடரையும், அடியையும் அவை ஏற்று வந்தன. மேலே காட்டியுள்ள பாடல்கள் அதற்கு உதாரணங்களாகும்.

தென்புலோலியூரில் வழங்கும் பாடலை காலஞ்சென்ற கவிஞர் கந்த. முருகேசனுர் என் துண்டுப்பிரசுரம் வெளிவந்தவுடன் எனக்கு வழங்கியபோது, அப்பாடலில் தாமரைப்பூ கடற்கரையில் கண்டது திணை வழு என்பதனை ஒப்புக் கொண்டார். அஃதன்ருே புலமை.

# கருத்தை ஈர்க்கும் கருமாரி



சென்னையிலிருந்து 12 மைல் தூரத்தில் ஒரு தெய்வ அருளூற்றுப் பொங்குகிறது. அதற்குக் கருமாரியம்மன் என்று பெயர்.

தலம், தீர்த்தம், மூர்த்தி மூன்றும் சேர்ந்து விளங்குவது திருவேற்காடு, வடவேதாரண்யம் என்று தொண்டை நாட்டில் புகழ் பெற்ற திருவேற்காடு, சிவத்தலங்களுள் சிறப்பு வாய்ந்தது. சான்ருேர்கள் மிகுந்த தொண்டை மண்டலத்தின் பெருமையை அமைதியோடு எடுத்துக்காட்டும் சின்னமாகச் சிறிய ஊராக விளங்கும் திருவேற்காட்டில் நுழையும் போதே, சம்பந்தரும் அப்பரும் அடிவைத்து உலாவிய ஊருக்குள் செல்கிருேம் என்கிற பெருமித உணர்ச்சி நமக்குஉண்டாகிறது. ஊரின் தூய்மையும் அமைதியும் எழிலும் கோடைவெயிலின் தாபத்தை இருந்த இடம் தெரியாமல் போக்கடித்துவிட்டன.

வேதபுரீசுவரர் கோவிலுக்கும் ஊருக்கும் ஈசானியமாக இருக்கும் இடந்தான் இன்று நம் கண்களையும் கருத்தையும் ஒருங்கே ஈர்க்கிறது. அங்கேயுள்ள புற்று ஒன்று மஞ்சளும் குங்குமமுமாக அணிந்து மங்களகரமாகக் காட்சியளிக்கிறது. அந்தப்புற்றில் கருநாகவடிவாகத் தோன்றி உறைபவளாக விளங்குகிருள் அன்னை பராசக்தி வேற்கண்ணி என்ற அன்னை பராசக்தியின் வடிவம் ஏழு கூறுகளாகப் பிரிந்து, எழுவரில் இளையவளாய்க் கருமாரி என்னும் திருநாமம்பெற்று, வெள்வேலின் கீழ் அமர்ந்திருக்கிருள். இந்த இடத்தில்தான் இன்றுஅழகிய திருக்கோவில் ஒன்று எழுந்திருக்கிறது.

தேவி கருமாரி அம்மன் எழுந்தருளியிருக்கும் இடம் அசாரணமான சாந்நித்தியம் பெற்றுத்துலங்குகிறது. ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாகக் கூடி நின்று சந்நிதியில் மனங் கசிய, உடல் குறுகி [illegible] ளாக் காட்சியாகும்.

# அன்புக்கும் அளவுண்டோ!

—செ. குணரத்தினம்

கடலோடு கதைபேசிக் கரைநாடி வருகின்ற
கடல்காற்றே, கடல்மேலே தனியாகச்சென்றிட்ட
எனதத்தான் சுகந்தானு? எழிலான படகின்மேல்
எனையெண்ணி அவரங்கே இதமாவா துயில்கின்ருர்?

அன்போடு நான் பாய்ச்சிக் கொடுத்திட்ட கூழ்,
கோப்பி
அனைத்தையும் குடித்தாரோ? அனேகம் மீன்
பிடித்தாரோ?
என்னேடு கதைபேச எப்போது வருவாரோ?
ஏன்காற்றே, எனக்கேதும் சொல்என்று சொன்
ஞரோ?

தொழிலுக்குப் போய்விட்டார்; கரைநாடி வரு
மட்டும்
துயர்கொள்ளும் என்நெஞ்சு தூங்காது 'சிரிக்காது'
விழியெல்லாம் அவரின்ப வதனத்தைப் பார்க்கின்ற,
வரைமட்டும் ஒருபோதும் இமைக்கவே இமைக்
காது!

அவரில்லா இரவொன்று துயர்தந்து வாட்டிட,
அவரில்லை யென்பதால் அருகிலே நிலவொன்று
அவர்போல முகங்கொண்டு, வெறிகொள்ள
வைத்ததே!
அவர்மீது நான்கொண்ட ஆசைக்கும் அளவுண்டோ!

கடல் காற்றே நீ வந்தால் கடல் நீங்கி எனதத்தான்
கரையோடி வரும் காட்சி காணுமல் காண்கிறேன்
உடல்நாண வளைகிறேன், உண்மையில் சிவக்கின்றேன்
உலகத்தில் அன்புக்கும் அளவுண்டோ சொல்
காற்றே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் இராசி பலன்

## எழுதுவது சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

[11-5-66 — 17-5-66]

### மேட இராசி

இவர்களுக்கு மனக்கவலை, ரோகபீடை காணல், நிலைக் கேடு, வீண் பழிச் சொற் கேட்டல், குடும்பசுகம், பெண்வழி இலாபம், எதிர் பாராது பணவரவு, தொழில் லாபம், இனபந்துக்களிடை மரணம் முதலிய அசுப செய்தி கேட்டல், வர்த்தகம் சமசித்தி, உத்தியோகத்தருக்கு அதிகாரிகள் உதவி, மாணவருக்கு கல்வித் தடை, பெண்களுக்கு களத்திர வழிச் சுகம்.

### இடப இராசி

இவர்களுக்கு அலைச்சல், வைத்தியச் செலவு, நிலை மாற்றம், பெண்களால் பணவரவு, அபகீர்த்தி, கலகம், உத்தியோகத்தருக்கு பொருள் வரவு, மதிப்பு, சுகலாபம், வர்த்தகருக்கு தொழில் விருத்தி, நன்மைப் பேறுகள் கிட்டல், மாணவருக்கு ரோகபீடையால் கல்வித் தடை, பெண்களுக்கு ஏமாற்றம், அவமானம் நேர்தல், குடும்பசுகமின்மை.

### மிதுன இராசி

இவர்களுக்கு இனபந்துக்கள் விரோதம், பொருள் நாசம், செய்காரிய நஷ்டம், சத்துருநாசம், பெண்களால் அவமானம், புத்திர சுகமின்மை, மாதுருவழி இலாபம், வர்த்தகருக்கு தொழிற் கேடு, உத்தியோகத்தருக்கு அதிகாரிகளின் பகை, மாணவருக்கு கல்வித்தடை, அவமானம், பெண்களுக்கு களத்திர புத்திர விரோதம், பணமுடை, மதிப்புக் குறைவு.

### கடக இராசி

இவர்களுக்கு பிரயாணக் கஷ்டம் புத்திரசேதம், இனபந்துக்களிடை கலகம், மரணபயம், துக்க செய்தி கேட்டல், மாதுருவழி பணவரவு, சுகம் கிட்டல், வர்த்தகருக்கு அரசபயம், சகோதரவழி நன்மை, உத்தியோகத்தருக்கு பொருட் செலவு, ஊழியர் தொல்லை, குடும்ப நன்மை, பெண்களுக்கு குடும்பபகை, பொருள் முடை, தெய்வவழிபாடு.

### சிங்க இராசி

இவர்களுக்கு களத்திரவழி ரோகபீடை, வைத்தியச் செலவு, சகோதரவழி நன்மை, செய்காரிய நஷ்டம், இடர் விழைதல், வர்த்தகருக்கு தொழில் விருத்தி, சத்துரு நாசம், பெண்களால் தொல்லை, உத்தியோகத்தருக்கு தொழில் சிறப்பு, பொருள் வரவு, மாணவருக்கு கல்விச் சிறப்பு, சுகம் கிட்டல், பெண்களுக்கு சுகக் குறைவு.

### கன்னி இராசி

இவர்களுக்கு பெண் தொல்லைகள், அலைச்சல், மரண பயம், இடையூறுகள் ஏற்படல், நிலைமாற்றம், செய்காரிய நஷ்டம், தொழில் நஷ்டம், துக்க சம்பவம் நடத்தல், வர்த்தகருக்கு பயம், நஷ்டம், உத்தியோகத்தருக்கு அலைச்சல், மாணவருக்கு வித்தைச் சிறப்பு, பெண்களுக்கு கவலை, களத்திரசுகமின்மை, ரோகபீடை.

### துலா இராசி

இவர்களுக்கு ரோகபீடை, துக்கசம்பவம்பற்றிக்கேள்வியுறல், வியாதி, பொருள் நட்டம், சேதங்கள் ஏற்படல் பிதா-புத்திரவழி நட்டம்-கலகம், களத்திர ரோகம், முற்பகுதியில் கலகம், பின் புத்திவிருத்தி, வர்த்தகம்-தொழில் மத்திமசுகம், உத்தியோகம்-மாணவர் மத்திம காலம், பெண்களுக்கு குடும்பக்கவலை, பொருள்முடை.

### விருச்சிக இராசி

இவர்களுக்கு நிலைமாற்றம், களத்திரவழி இலாபம்-உதவிகிட்டல், பயம், காரணமற்ற கஷ்டம், வியாகூலம், செய்காரியங்கள், பெண்களுக்கு ரோகபீடை, களத்திரவழிக்கலகம், இனபந்துக்கள் விரோதம், உத்தியோகத்தருக்கு அதிகாரிகள் பகை, ஊழியர் தொல்லை, வர்த்தகருக்கு தொழிற்கஷ்டம், மூலதனமுடக்கத்தால் நன்மையின்மை, மாணவருக்கு கல்விச்சிறப்புக் குன்றல், பணமுடை.

### தனு இராசி

இவர்களுக்கு களத்திர-புத்திர சுகம், புத்திரபீடை, திரவிய லாபம், தொழிற் சிறப்பு. இனபந்துக்கள் சேர்க்கை, வார முற்பகுதியில் கலகம் - பிற்பகுதியில் திரவிய லாபம், தொழில் பிதாவழியால் அனுகூலமடைதல், பெண்களுக்கு நற்பலன் கிட்டல், பொருள் சேர்க்கை, வர்த்தகருக்கு-உத்தியோகத்தருக்கு-மாணவருக்கு மத்திமத்திலும் கூடியபலன் கிட்டல், தெய்வ உதவி.

### மகர இராசி

இவர்களுக்கு குடும்பக்கஷ்டம், ரோகபீடை, வைத்தியச்செலவுஅதிகரிப்பு, சகோதர வழி நன்மை, அதிகாரப் பேறு, இனபந்துக்கள் விரோதம், கலவரம், குடும்பக்கலவரம், புத்திரரோகபீடை, சத்துரு தொல்லை, பெண்களுக்கு மத்திம சுகம், பொருள் முடை காணல், வர்த்தகருக்கு தொழிற்கேடு, உத்தியோகத்தருக்கு அதிகாரிகள்-சத்துருக்களால் கஷ்டம் விழைதல், மாணவருக்குக் கல்வித்தடை.

### கும்ப இராசி

இவர்களுக்கு நிலைமாற்றம், களத்திர சுகம், தாய்வழி ரோக கஷ்டம், ஆரோக்கியக் குறைவு, இனபந்துக்கள் விரோம், சகோதர வழி நற்பலன், திரவிய லாபம், தொழில் சமசித்தி, பெண்களுக்கு சுகக்குறைவு, பந்துக்கள் பகை, வர்த்தகர்-உத்தியோகத்தர்- மாணவர் சமசித்தி, பொருள் முடைகாணல்.

### மீன இராசி

இவர்களுக்கு களத்திர சுகம், பெண்களால் இலாபம்கிட்டல், ரோகபீடை, பொருள் விரயம், வைத்தியச்செலவு அதிகரிப்பு, சகோதரவழி நன்மை, பந்துக் கிலேசம், பெண்களுக்கு சுகம், பொருள் சேர்க்கை, பிற்பகுதியில் ஏமாற்றம், வர்த்தகருக்கு தொழில் சமசித்தி, உத்தியோகத்தருக்கு பொறுப்பதிகரிப்பு, மாணவருக்கு கல்விச்சிறப்பு, பண முடை.

# உலகமேடை

## அதிபார குத்துச்சண்டை

# கிளே - கூப்பர்

இம்முறை உலக அதிபார குத்துச்சண்டை சாம்பியன் காஷியஸ் கிளேக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மத்யதர சாம்பியன் ஹென்றி கூப்பருக்குமிடையே நடைபெறவிருக்கும் சாம்பியன் குத்துச்சண்டைப் போட்டி நகைச்சுவைக்கு ஓர் அரிய உதாரணமாக இருக்கிறது.

24 வயதான உலக அதிபார சாம்பியன் 210 ருத்தல் நிறையும், 6 அடி 3 அங்குல உயரமும் கொண்டவர்.

32 வயதான கூப்பர் 195 ருத்தலும், 6 அடி 1/2 அங்குல உயரமும் கொண்டவர்.

பொதுவாக குத்துச் சண்டைப்போட்டியில் ஒருவரது உயரம், எடை ஆகிய அம்சங்களைவிட அவரது வயது முக்கிய அம்சமாகும். இளவயதில் உடலெங்கும் ரத்தம் வேகமாகப் பாய்ந்து கொண்டிருக்கும் என்பதே இதற்குக் காரணம்.

ஒருவரது பயிற்சி, அவரது உடல் அளவு, கை நீளம் ஆகிய அம்சங்களும் முக்கியமானதாயினும் அவைஇரண்டாம் பட்ச அம்சங்கள்.

வருகிற 21-ம் திகதி இந்தப்போட்டி 50 ஆண்டுகளுக்குப்பின் லண்டனில் நடைபெறஇருக்கிறது. உலக அதிபார குத்துச்சண்டைப் போட்டி லண்டனில் நடைபெறுவதென்பது இன்றைய உலகில் ஒரு புதிய அனுபவம். ஏனெனில் லண்டன் காரர்களால் ஒரு வெள்ளையானையைப் போஷிக்க முடியாது. பல்லாண்டுகளாக சாம்பியன்களுக்கு அளிக்கும் ஊதியமும், சண்டை நடத்துபவர்களுக்கான ஆதாயமும் அமெரிக்காவில் நடக்கும் போட்டியில்தான் அதிகம் உண்டு.

பல ஆண்டுகளுக்குப் பின் கனடாவிலும், இப்போது லண்டனிலும் நடைபெற இருக்கும் போட்டியின் முக்கியத்துவம் இரண்டாம் பட்சமானவையே.

பாவம். இங்கிலிஷ்காரர்களுக்கு, சாம்பியன்களின் பணத்தைக் கொடுக்ககூட கட்டுபடியாகாது. எனினும் கிளேக்குஇந்தச்சண்டையில் சுமார் 20 லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. கூப்பர் சுமார் 7 லட்சம் ரூபாய் பெறவிருக்கிறார்.

கிளே-கூப்பர் சண்டை தொழில் நுட்ப ரீதியில் ரசிகர்களுக்கு சிரிப்பை வரவழைத்தபோதிலும், அதைவிட சிரிப்பை, இரு சாம்பியன்களின் அறிக்கைகளும் வெளியிடுகின்றன.

கூப்பரின் 32-வது பிறந்த தினத்துக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிய கிளே, "உம்மை அடிக்கும் அடியில் நீர் 42 வயதான ஒருவராக உணருவீர்" என்றுகூறியிருந்தார். அதேசமயம் கூப்பர் விடுத்த அறிக்கை ஒன்றில், தாம் கிளேயை தேற்கடிப்பேன் என நிச்சயமாகக் கூறியிருக்கிறார்.

ஒரு மத்தியதர சாம்பியன் அதிபாரச் சாம்பியனை இவ்வளவு இலகுவில் எடுத்தெறிந்து பேசுவது, இன்னும் சிரிப்பை வரவழைக்கிறது.

வழக்கம்போல் இந்தச் சண்டை வானவெளிக்கிரகத்தின் மூலம் அமெரிக்கா எங்கிலும், ஐரோப்பா முழுதும் காட்டப்படுகிறதென்றால் அதற்கு, அதிபார குத்துச்சண்டை சாம்பியன் கிளேதான் காரணம்.

இங்கிலாந்தில் இதுவரை குத்துச்சண்டைக்குக் கிடைத்த ஆகப்பெருந்தொகை இப்போது கூப்பருக்குக் கிடைக்கவிருக்கும் 45,000 பவுன்தான்என்பதும், ஆனால் கிளேக்குக்கிடைக்கும் ஆகச் சிறிய தொகை இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கூப்பர் மத்தியரக குத்துச் சண்டை வீரர்களில் பெரிய கெட்டிக்காரர் என்பதை எவரும்மறுக்கவில்லை. ஆனால் இந்தச்சண்டையின் முடிவு என்ன என்பது அனைவருக்கும் தெரிந்த ஒரு உண்மையாகும். கிளேயுடன் பொருத உலகில் இன்னும் எவரும் முன்வரவில்லைஎன்பது அந்த உண்மையின் முக்கிய ஒரு அம்சம்.

கூப்பர் இதுவரை 12 வருடங்களாக நடத்திய சண்டையில் 33 வெற்றிகள் பெற்றிருக்கிறார். ஒன்று, வெற்றி தோல்வியின்றி முடிந்தது. 11 தோல்விகளைக் கண்டிருக்கிறார்.

நன்கு தெரிந்தவிஷயமாதலால்' சாம்பியன்கிளேயைப் பற்றிய விமர்சனம் தேவை இல்லை,

கூப்பரின் இடதுகைக் குத்து அபாரமானதுதான். ஆனால் கிளேக்கு அது ஒரு கொசுக்கடி என்பதை, இன்றைய நிலையைக்கொண்டு பார்க்குமிடத்து, சாம்பியன் நிரூபிப்பார். கிளே தற்புகழ்ச்சிக்காரராக இருந்தபோதிலும் சென்ற தடவையைப் போல் அவர் தனது எதிரியைப் புகழ்ந்திருக்கிறார்.

லண்டனில் நடைபெறும் குத்துச் சண்டைப்போட்டியில், 45000 ஆசனங்கள் மேடையைச்சுற்றி, அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆக உயர்ந்த ஆசனத்திற்கு 20 கினிகள். அதாவது 420 ரூபாய். ஆனால், அமெரிக்காவில் ரூ .5000 கொடுத்து இச்சண்டையைப் பார்ப்பவர்கள் பலர் உண்டு.

கூப்பர் இதுவரை 2 1/2 லட்சம் பவுன், அதாவது சுமார் 40 லட்சம் ரூபாய் தனது சண்டையின் மூலம் சம்பாதித்திருக்கிறார். அதுவும் 12ஆண்டுகளில். ஆனால், கிளே ஒரு நிமிஷத்தில் இவ்வளவு தொகையைத் தேடும் ஆற்றல் வாய்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு விஷயம் மட்டும் இங்கு குறிப்பிடவேண்டியதாகும். கூப்பர் வென்றாலும் தோற்றாலும் அவருக்கு 7 லட்சம் ரூபாய் கிடைக்கும். கடந்த 12 ஆண்டுகளில் அவருக்கு கிடைக்கவிருக்கும் ஆகப்பெருந் தொகை இதுவேயாகும். அதே சமயம் கூப்பர் வென்றால் அது இங்கிலாந்துக்கு பெரும்கௌரவத்தை அளிக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

## விலங்கொடு அனையர்

(I-ம் பக்கத் தொடர்ச்சி)

கண் இருந்தது, செவி இருந்தது, வாய் இருந்தது. ஆனால் அந்தக்கண்ணால் அந்த அறிஞரது ஒரு நூலைக்கூட படித்ததில்லை; ஏன் பார்த்தது கூட இல்லை. அந்தச் செவி கேட்பினும் கேளாத் தகையது! எனவே அதனால் அந்த அறிஞரது பேச்சைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த வாய் எந்த இடத்தில் எதற்காக எதை எப்படிச்சொல்ல வேண்டும் என்பது தெரியாத வாய்! இத்தனைக்கும் காரணம் என்னவென்றால் அவன் ஒரு நூலறிவற்றவன்; கல்லாதவன்!

விலங்குகளுக்கும்தான் கண், செவி, வாய் எல்லாம் இருக்கின்றன. அவைகள் என்னதன்மையில் இருக்கின்றனவோ அதே தன்மையில் தான் கல்லாதவனுடைய கண், செவி, வாய்முதலியனவும் இருக்கின்றன. எனவே தான் வள்ளுவரும்விளங்கிய நூல்களைக் கற்றவர்களை மட்டுமே மக்களாக ஏற்றுக் கொண்டு ஏனைய கல்லாதவரை விலங்குக்கு ஒப்பிடுகிறார்.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்.

## நோயும் சிகிச்சையும்

(IV-ம் பக்கத் தொடர்ச்சி)

கால் முதலிய பெரிய மூட்டுகளில்தான் அனுசரித்திருக்கும்,

சந்து

வாதமானது பரம்பரை வியாதியல்ல. அதிகமாக இந்நோய் ஆண்களுக்கு ஏற்படுவது எப்படியெனில் நமது நாட்டைப் பொறுத்த மட்டில் இங்கு பெண்களை விட ஆண்களே விவசாயம், கடல் தொழில் -முதலிய வேலைகளில் பெரும்பகுதி ஈடுபடுவோராகஇருப்பதால் 30-40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு உடல் நிலை இளைத்து பலவீனம்ஏற்பட்டு இந்நோய் மிக விரைவில் தோன்றுகிறது. ஆனால் இந்நோய் ஏற்பட்டவுடன் நல்ல உணவில் கவனம் செலுத்தி காற்றோட்டமான இடங்களில் சீவிப்பதாலும் - ஊறல் வீடு, நீர்த்தேக்கமான இடங்களில் வசிப்பதை தவிர்ப்பதனாலும் நோய் அணுகாதபடி காத்துக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அதிகமானோரில் கடற்தொழில் செய்வோருக்கே இந்நோய் ஏற்படுவதாகக் கண்டுள்ளார்கள். இந்நோயால் ஒருவரும் இறப்பதில்லை. ஆனால் வேறு பல குண்டிக்காய்த் தாபிதங்களையும் ஏற்படுத்துகின்றது. இந்நோய் ஏற்பட்டால் உடனடியாக ஒரு வைத்தியரை நாடுவதுதான் சிறந்தவழி.

## தமிழிலக்கிய வளர்ச்சி

(I-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமையில் தேசம் இருக்கிறது. இந்த 'பிரமாணஸ்தர்கள்' தமிழ் நூல்களில் புதுமையும் வியப்பும் காணுவது சாத்தியமில்லைஎன்ற நிச்சயத்துடனிருக்கிறார்கள். ஆகவே நூலாசிரியர் தமக்குத் தெய்வம் காட்டிய தொழிலிலே மேன்மேலும் ஆவலுடன் பாடுபடவழியில்லாமல் வேறு தொழில் செய்யப் போய்விடுகிறார்கள்."

(அடுத்த இதழில் முடியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org